24 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

FREE
Real Estate
Classes start every week
Call:416.321.6969

நதி 24 | பாலம் 04 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | FEBRUARY 15, 2014

# கனேடிய மத்திய அரசின் வரவு செலவுத் திட்டம்

பழமைவாதக் கட்சி அரசின் நிதி மந்திரி Jim Flaherty தனது பத்தாவது வரவு செலவுத்திட்டத்தை பெப்ரவரி 11, 2014 இல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இதில் மிக முக்கிய விடயமாக இந்தவருடத்தில் துண்டு விழும் தொகையாக மிகக் குறைந்த அளவான $2.9 பில்லியன் டொலர் இருப்பதும், இது அடுத்த வருட வரவு செலவுத்திட்டத்தில் மேலதிக வருவாய் ஆக $6.4 பில்லியன் டொலராக மாறும் என எதிர்பார்க்கப்படுவதும் கருதப்படுகிறது.

அடுத்த ஆண்டு மத்திய அரசிற்கான தேர்தல் நடைபெறும் வருடமாக இருக்கப் போவதால்தான் பழமைவாதக்கட்சி அரசு இப்படியான ஒரு வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்தது என எதிர்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன.

இவ்வரவு செலவுத்திட்டத்தில் உள்ள மற்றைய விடயங்கள் சில பின்வருமாறு:
இதில் வரிக்குறைப்பு விடயங்கள் இல்லை. கடந்த மூன்று வருடங்களாக அரச செலவினங்கள் தொடர்ந்து குறைக்கப்பட்டே வருகின்றது.

அடுத்த இரண்டு வருடங்களுக்கு மோட்டார் வாகன ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகளுக்காக $500 மில்லியன் டொலர் செலவிடப்படும்.

அடுத்த பத்து வருடங்களுக்கு அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிகளுக்காக இரண்டாம் நிலை (Post Secondary) நிறுவனங்களுக்கு வழங்க $1.5 பில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஐந்து வருடங்களுக்கு பெருந்தெருக்கள், பாலங்கள், அணைக்கட்டுக்கள் மற்றும் தேசிய பூங்காகள் போன்றவற்றின் அபிவிருத்தி செலவினங்களுக்காக $391 மில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுத்த இரண்டு வருடங்களுக்கு பொழுதுபோக்கு பாதைகளை (Recreational Trails) சீர்படுத்தி அமைக்க $10 மில்லியன் டொலர் செலவிடப்படும். கிராமப்புறங்களில் அதிவேக இணையத்தளவசதி செய்து கொடுப்பதற்காக அடுத்த ஐந்து வருடங்களில் $305 மில்லியன் டொலர் முதலிடப்படும்.

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

## சோச்சி குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளின் பதக்க நிலை



| Country | G | S | B | Total |
|---|---|---|---|---|
| 1. Germany | 7 | 2 | 1 | 10 |
| 2. Switzerland | 5 | 1 | 1 | 7 |
| **3. Canada** | **4** | **5** | **2** | **11** |
| 4. Norway | 4 | 3 | 6 | 13 |
| 5. United States | 4 | 3 | 6 | 13 |
| 6. Netherlands | 4 | 3 | 5 | 12 |
| 7. Belarus | 3 | 0 | 1 | 4 |
| 8. Russia | 2 | 5 | 5 | 12 |
| 9. China | 2 | 2 | 0 | 4 |
| 10. France | 2 | 0 | 2 | 4 |

கனடா நான்கு தங்கப்பதக்கங்களைப்பெற்று அதிகூடிய தங்கப்பதக்கங்களைப்பெற்ற நாடுகள் வரிசையில் மூன்றாவது இடத்தில் மொத்தமாக 11 பதக்கங்களுடன் இருக்கின்றது. குளிர்கால ஒலிம்பிக்கின் முதல் தங்கப்பதக்கத்தை அமெரிக்க வீரர் சேஜ் கோட்சென்பர்க் தட்டிச் சென்றார். 'ஸ்னோபோர்டு' போட்டியில் ஆண்கள் 'ஸ்லோப்ஸ்ரைல்' பிரிவில்

தொடர்ச்சி 06ஆம் பக்கம்




Brand new - Leasing - Used
வாகனம் வாங்குமுன் 10 வருடம் அனுபவம் வாய்ந்த என்னை முதலில் அழையுங்கள்
kjegasothy@markville.com | 416.451.0565
குமார் ஜெகசோதி

TOYOTA MARKVILLE
905.294.8100

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099

Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
- Residential/Commercial needs
- Purchase/Refinancing/Renewal/Switch
- Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
- Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident

Oriana Financial Group of Canada Ltd. Company#10214

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
- அவசரகால பல் வைத்திய சேவைகள்
- பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
- பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
- பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
- முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
- சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்

3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232

3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

THE TRUSTED MORTGAGE SPECIALISTS
"I Work for you Not for the Bank"
BonaFide
Some Terms & Conditions May Apply
•I will arange your 1st Mortgage with 5% down.
•Need a 2nd Mortgage??? "When banks says no We says yes" @ interest rate of 1% per month.

Thayalan Goblakrishnan
(M12001612)
தயாளன் கோபாலகிருஷ்ணன்
Contact: 416.575.3211
E-Mail: thaya.gobal@gmail.com

# கனேடிய....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

சிகரட் பெட்டி (Carton) ஒன்றின் வரி $4 டொலரால் அதிகரிக்கப்பட்டு பெட்டி ஒன்று $21 டொலரிற்கு விற்கப்படும். (இது ஒரு சிகரட் Pack இன் விலையை 50 சதத்தால் அதிகரிக்க வைக்கும்)

குழுக்களுக்கு பணவுதவி வழங்குவது மற்றும் அவர்களுடன் தொடர்புகள் வைத்திருப்பது தீவிரமாக கண்காணிக்கப் பட்டு தடைசெய்யப்படும்.

காணாமல் போனவர்கள் தொடர்பாக தகவல்கள் DNA பதிவுகள் மூலம் சேகரித்து வைக்கும் முறை உருவாக்கப்பட உள்ளது.



இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர் கள் தங்களது மருத்துவ செலவினங்களுக் கான காப்புறுதிக்கு கட்டும் பணத்தொகை இரண்டுமடங்காக அதிகரிக்கப்படும்.

தொழில்துறையில் பயிற்றப்பட்ட தொழிலா ளர்கள் தேவைப்படும் நிறுவனங்களுக்கு தொழிலாளர்களை வேலைக்கு எடுத்து தொழில் பயிற்சி கொடுப்பதற்காக வட்டி யில்லாமல் கடன் உதவியை அரசாங்கம் வழங்க உள்ளது.

கைத்தொலைபேசி போன்றவற்றில் அறவிடப் படும் உள்ளூர் Roaming கட்டணத்திற்கு மொத்தவிற்பனை நிறுவனங்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட உள்ளது.

அமெரிக்காவிற்கும் கனடாவிற்குமான விலை வித்தியாசம் ஒரே பொருளில் இருப்பது பற்றி அரசு ஆராய்ந்து அதற்கு கட்டுப்பாடு கொண்டு வர உள்ளது.

தொண்டு நிறுவனங்கள் (Charities), இணையத்தள சூதாட்ட நிறுவனங்கள் (Online Casinos) மற்றும் சிறிய விளையாட்டு நிறுவனங்கள் போன்றவை வெளிநாடுகளில் உள்ள பயங்கரவாதக்

கனேடிய நாடாளுமன்ற மேற்சபையில் இருந்து அரச பணத்தை துஷ்பிரயோகம் செய்ததாக குற்றம் சாட்டி பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ள மேற்சபை உறுப்பினர்கள் ஓய்வூதியம் பெறுவதை தடைசெய்யுமுகமாக ஒரு புதிய சட்டமூலம் உருவாக்கப்படும்.

இந்த வரவு செலவுத்திட்டத்தில் முன்னர் மாகாண அரசின் ஊடாக வழங்கப்பட்டு வந்த புதிய தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி அவர்களுக்கு தொழில் பயிற்சி கொடுக்க உதவும் பணஉதவி நிறுத்தப்பட்டு மத்திய அரசு நேரடியாக இப்பண உதவியை தொழிலாளர்களுக்கு ஏப்ரல் 01, 2014 இல் இருந்து வழங்கப் போவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கு மாகாண அரசுகள் தமது ஆட்சேபத்தை தெரிவித்துள்ளன. இது தொடர்பாக மாகாண அரசுகள், அமைச்சர் Jason Kenney உடன் நடத்தும் பேச்சு வார்த்தைகள் தோல்வியில் முடிந்தால் மத்திய அரசு ஏப்ரல் 01, 2014 இல் இருந்து இப்பண உதவியை நேரடி யாகவே தகுதிபெற்ற தொழில் நிறுவனங்களுக்கு வழங்க உள்ளது. இதற்காக மத்திய அரசு $300 மில்லியன் டொலரை இந்த வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கியுள்ளது.




இது தொடர்பாக கருத்து தெரிவித்த அமைச்சர் Jason Kenney இந்த நிதி உதவி பல நிரந்தர வேலைகளை உருவாக்கும் என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில் இந்த பண உதவி, கட்டிடத் தொழிலாளர் களை பயிற்றுவிக்கவும், கனேடிய தொழிற்சாலை ஊழியர்களை பயிற்றுவிக்க வும், பொறியியலாளர்களை பயிற்றுவிக்கவும் மற்றும் Career Colleges போன்ற நிறுவனங்களுக்கும் வழங்கப்படும் என்றார்.

இப்பணஉதவி தொழிலாளி ஒருவருக்கு புதிய ஒரு தொழில் முறையை பயின்று புதிய ஒரு வேலை எடுப்பதற்கு உதவுவதற்காக $15 ஆயிரம் டொலர் வரையில் வழங்கப்படும்.

அதேபோல் ஒரு தொழில் நிறுவனத்திற்கு புதிய ஒரு தொழிலாளியை வேலைக்கு அமர்த்தி அவருக்கு ஒரு தொழில் முறையை பயிற்றுவிக்க ஏற்படும் செலவில் மூன்றில் இரண்டு பங்கை மத்திய அரசு இப்பண உதவி மூலம் வழங்கும். இதனால் அந்த நிறுவனத்திற்கு புதியவர் ஒருவரை தொழில்



பழக்க வேலைக்கு எடுத்தால் அவரது செலவில் மூன்றில் ஒரு பங்கையே அந்த நிறுவனம் செலவு செய்ய வேண்டியிருக்கும்.

விளம்பரம் VLAMBARAM

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜய்பாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Can Media Publishing Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளி யாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர் கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமை யாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram Publications Inc. ,
   5215 Finch Ave. E. #201,
   Toronto, ON M1S 0C2
2. Tel.: 416.282.8059
3. Fax: 416.282.4978
4. email: vlambaram@sympatico.ca
5. web: www.vlambaram.com
   www.tamilvanakkam.com

## வாசகர் எண்ணம்

தங்கள் பத்திரிகையை தொடர்ந்து வாசிக்கும் வாசகர்களில் நாமும் ஒருவர். தங்கள் பத்திரிகையில் பிரசுரமாகும் ஆக்கங்கள் அத்தனையும் அருமை.

சத்குரு வாசுதேவின் "மனம் எனும் அற்புதம்". ராஜா மகேந்திரனின் "நாமும் நமது இல்லமும்", எஸ். கணேஸின் "விளையாட்டுத் தகவல்கள்", வன்னி ஆதித்தனின் "தாயக மடல்," அகணியின் கலைச்சொற்களோடு கூடிய "காலத்தோடு வளரும் கனினிகள்" கட்டுரைத்தொடர், செல்வசோதியின் "ஆரோக்கிய வாழ்வு," சிவ. பஞ்சலிங்கத்தின் "கனடிய தகவல்" தொடர், கனியின் "சார்பியல்", "பிடித்தவர்கள்" தொடர்கதை, கே.ரி. கோபாலின் "புற்றுநோய்" கட்டுரை, குறமகளின் ஆக்கம், வானரனின் "தூறல்," சிந்தனைப்பூக்கள் எஸ். பத்மநாதனின் சிந்தையை தூண்டும் கட்டுரை, ஆசீர் அன்ரனியின் "வாழ்க்கை வாழ்வதற்கே," கலகலப்பு தீசனின் "நகைச்சுவை", கவிதைகள், இத்தனை மலர்களையும் ஒரு மாலையாக கோர்த்து தரும் விளம்பரமே நீ நீடூழி வாழ்ந்து, நிறைந்த சேவைசெய்ய வாழ்த்துகின்றோம்.

அன்புடன்,

மார்க்கம் சந்திரன் & பவானி சந்திரன்

# ஜெனீவா பிரேரணையும் அரசிற்கு அதிகரித்துவரும் சிங்கள மக்களின் ஆதரவும்!

மார்ச் மாதம் இலங்கை அரசாங்கத்திற்கு சோதனையான காலமாக இருக்கும் என்றே சகல தரப்பினராலும் பார்க்கப்பட்டும், அவதானிக்கப்பட்டும் வருகின்றது. ஜெனிவாவில் இலங்கை அரசாங்கத்திற்கெதிராக கொண்டு வரப்படவுள்ள பிரேரணை குறித்த பரபரப்பும், அதனால் இலங்கை அரச தரப்பிற்கு ஏற்பட்டுள்ள அச்சமும் பற்றியே அதிகமான கவனிப்பு இருக்கின்றது. ஊடகங்களும் அதனையே அதிகம் வெளிப்படுத்தி வருகின்றன. ஆனால், இந்த சந்தர்ப்பத்தை அரசாங்கம் உள்நாட்டில் நல்ல முறையில் பயன்படுத்தி வருகின்றமையினை நாம் இங்கு அவதானிக்க வேண்டும். ஜெனீவா பிரேரணையை எதிர்கொள்ள இலங்கை அரசாங்கம் பல நாடுகளுக்கு தனது இராஜதந்திர குழுக்களை அனுப்பி நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றது. ஜனாதிபதியே பல நாடுகளுக்குப் பயணம் செய்து ஆதரவு திரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார். இதேவேளை, உள்நாட்டில் ஜெனிவா பிரச்சினையை சாதகமாகப் பயன்படுத்தும் நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. சிங்கள மக்களிடம் ராஜபக்ஸ அரசாங்கத்தின் மீதான ஆதரவைத் திரட்டவும், இருக்கின்ற வாக்கு வங்கியை மேலும் அதிகரித்துக் கொள்ளவும் இது பயன்படுத்தப்படுகின்றது.

"நாங்கள் முப்பது வருட கால யுத்தத்தை வெற்றி கொண்டோம். எங்களை குற்றவாளிகளாக்கி தண்டனை வழங்க புலிகளுடன் தொடர்புள்ள வெளிநாடுகள் முயல்கின்றன.." என சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் கடும் பரப்புரைகள் அரச தரப்பினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மார்ச் மாதம் நடுப்பகுதியில் ஜெனிவாவில் மனிதஉரிமைகளுக்கான கூட்டத்தொடர் நடைபெறவுள்ள நிலையில், அதே மார்ச் மாதம் இலங்கையின் தென் மற்றும் மேல் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. மார்ச் 29 ஆம் திகதி இத்தேர்தல் நடைபெறும் என்று தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. இந்நிலையில், ஜெனீவா பிரச்சினை அரசாங்கத்திற்கு நல்லதொரு தேர்தல் பரப்புரையாகவே அமைந்துவிட்டது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற சகல தேர்தல்களிலும் ஆளும் கட்சியே பெரும்பான்மை வெற்றியைப் பெற்றது. அதேபோல் வரப்போகும் தென் மற்றும் மேல் மாகாண சபைத் தேர்தல்களிலும் ஆளும் தரப்பே அமோகமாக வெற்றி பெறும் என்பதில் சந்தேகமில்லை. ஜெனீவா இலங்கை அரசாங்கத்திற்கு உள்நாட்டில் சிறந்த அறுவடையினையே வழங்கப் போகின்றது என்பது தான் உண்மை. மஹிந்த அரசாங்கத்தின் இந்த நகர்வுகள் குறித்து சிங்கள எதிர்க் கட்சிகளுக்கு விளங்காமலில்லை. ஜே.வி.பி கட்சி இது குறித்து கருத்து வெளியிட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளை இலங்கை அரசாங்கம் பிரச்சார நோக்கத்திற்காக



பயன்படுத்திக் கொள்கிறது என ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளது. எதிர்வரும் மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்படக் கூடிய சாத்தியங்கள் அதிகளவில் காணப்படுவதாக தெரிவித்துள்ள ஜே.வி.பி, இதனை மஹிந்த அரசாங்கம் மேல் மற்றும் தென் மாகாணசபைத் தேர்தல் பிரச்சாரத்திற்காக நன்கு பயன்படுத்திக் கொள்கிறது எனவும் குறிப்பிடுகின்றது. ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார். இலங்கைக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் எந்தவொரு நாட்டினாலும் நடவடிக்கை எடுக்க முடியாது என்பதனை தெரிந்து கொண்டே அரசாங்கம் இவ்வாறு வலுவான பிரச்சாரத்தை மேற்கொள்கிறது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை ரோமப் பிரகடனத்தில் கைச்சாத்திடாத காரணத்தினால் எந்தவொரு நாட்டினாலும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கைக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது என அவர் குறிப்பிடுகின்றார். இம்முறை நடைபெறவுள்ள ஜெனீவா கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் பிரேரணையினால் இலங்கைக்குப் பெரும் பாதிப்புகள் ஏற்படலாம் என சில அரசியல் விமர்சகர்கள் கூறி வந்தாலும் கூட, பாரதூரமாக எதுவுமே நடந்து விடப்போவதில்லை என்பதுதான் உண்மை. கடந்த கூட்டத் தொடர்கள் ஆரம்பமாவதற்கு முன்னரும் கூட இவ்வாறான பரபரப்புகள் இருக்கத்தான செய்தன. இத்தடவை சர்வதேச அழுத்தம் முன்னரை விடவும் சற்று அதிகமாக பிரயோகிக்கப்படலாமே தவிர, பெரிதாக எதுவும் நடந்து விடப்போவ தில்லை.

போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலங்களில் போரை வெற்றி கொள்வது குறித்த பரப்புரைகள் சிங்கள மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்டன. இதனால் சாதாரண சிங்கள மக்கள் தங்களுக்குள்ள பொருளாதார, வாழ்வியல் சிக்கல்களைக் கூட பொறுத்துக் கொண்டனர். தங்களின் பிரச்சினைகளை மக்கள் வெளிப்படுத்தும் போராட்டங்கள் கூட போர் குறித்த விடயங்களைக் கூறி அமுக்கப்பட்டன. போர் வெற்றிக்குப் பின்னர் போர் வெற்றி விழாக்களை நடத்தி சிங்கள மக்களின் ஆதரவு வளர்த்தெடுக்கப்பட்டது. நேரடியாகவே போர் நடைபெற்ற வன்னிப் பகுதிகளுக்கு சிங்கள மக்களை அழைத்துச் சென்று காட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. போரில் ஈடுபட்ட படையினர் வீரர்களாகவும், தியாகிகளாகவும் அவர்களுக்கு சித்தரிக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில், படையினர் புரிந்து போர்க் குற்றங்கள் குறித்தும், அது தொடர்பான விசாரணைகள் குறித்த சர்வதேச அழுத்தங்கள் பற்றியும் சிங்கள மக்கள் பெரிது படுத்துவதில்லை. அவர்கள் மனங்களில் போர் வெற்றியும், தங்கள் பிள்ளைகளின் சாதனையும் பெரிய அளவில் விதைக்கப்பட்டுள்ளது. ஆகவே, இலங்கை அரசாங்கம் மீதான சர்வதேச அழுத்தங்கள் யாவுமே உள்நாட்டில் சிங்கள மக்கள் மத்தியில் மஹிந்த ராஜபக்ஸ அரசு மீதான அனுதாபத்தையும் ஆதரவையும் மேலும் மேலும் பெருக்கவே செய்கிறது. சர்வதேச அழுத்தங்களூடாகவே தமிழர் பிரச்சினைக்கு தீர்வு ஒன்று ஏற்படலாம் என்கிற எதிர்பார்ப்புடன் இருக்கும் தமிழர் தரப்பு இந்த நிலைமைகள் குறித்தும் கவனத்தில் எடுக்க வேண்டியது முக்கியமானதாகும்.

**- விகிர்தன் -**

தமிழர்களின் பிரச்சினைகளுக்கு சர்வதேசத் திடம் செல்வதைத் தவிர வேறு வழிகள் இப்போது இல்லை என்கிற நிலமையில், மஹிந்த அரசாங்கம் சிங்கள மக்கள் மத்தியில் மேற்கொண்டு வரும் இவ்வாறான பரப்புரைகளுக்கான மாற்று நடவடிக்கை ஒன்றை வடிவமைக்க வேண்டியதும் முக்கியமானதாகும்.

ஒரு காலகட்டத்தில், எந்தவொரு சிங்களக் கட்சியும் ஆட்சிக்கு வருவதானால் தமிழ் மக்களின் வாக்குகள் இன்றிமையாத பாத்திரத்தை வகித்தன. இப்போது அந்த நிலை இல்லை. தனித்து சிங்கள மக்களின் வாக்குகளை வைத்தே அரசமைக்க முடியும் என்பதனை கடந்த ஜனாதிபதித் தேர்தலும், நாடாளுமன்றத் தேர்தலும் நிரூபித்துள்ளன. தெற்கிலுள்ள சிங்கள இடதுசாரிகளுடன் இணைந்து சாதாரண சிங்கள மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகள் உட்பட வேறு வழிமுறைகள் குறித்தும் தமிழர் தரப்பு இப்போது சிந்திக்க வேண்டியுள்ளது.


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# அவதூதர்களின் ஆனந்த நிலை



சத்குரு வாசுதேவ்

சக்தி நிலையின் அடிப்படையில் பார்த்தால், உங்கள் உடலின் மற்ற பாகங்களை விட சில மையங்கள் அதிர்வு மிக்கவையாக இருக்கும். ஏனெனில், உங்கள் உடலில் உள்ள பல நாடிகள் அந்த மையங்களில் சங்கமிக்கின்றன. அந்த மையங்களுக்கு சக்கரங்கள் என்று பெயர். பொதுவாக, நாடிகள் சங்கமிக்கும் இடங்கள் முக்கோணங்களில் இருக்கும். ஆனால் சக்கரம் என்பது நகர்தலுக்கான குறியீடு. அடுத்த கட்டப் பயணத்தின் அடையாளம். சக்கர வடிவம் என்பது, குறைந்த பட்ச எதிர்ப்புணர்வு கொண்டது. எனவே அடுத்த கட்டம் நோக்கிச் செல்வதற்கு உதவியாய் இருக்கும் மையங்கள் சக்கரங்கள் என்று பெயர் பெற்றன. உண்மையில், இந்த சக்கரங்கள், உடலில் ஒரு துளை இருப்பதற்கு சமம். அவை எதையும் உள்வாங்கும் தன்மையில் உள்ளன.

இந்தியக் கலாச்சாரத்தைப் பொறுத்தவரை, காலையில் எழுந்ததும் நீராடியவுடன் உடலின் சில பகுதிகளில் திருநீறு பூசுவதை வழக்கமாக கொண்டிருந்தார்கள். காலப்போக்கில் இது காரணம் புரியாத சடங்காக மாறிவிட்டது. அநாகதம் (நெஞ்சுக் குழி) விசுக்தி (தொண்டைக்குழி) ஆக்ஞை (நெற்றிப் புருவநடு) ஆகிய இடங்களில் திருநீறு பூசுவார்கள். மேல்நிலையில் உள்ள சக்கரங்கள் வழியாக வாழ்வின் தன்மைகளை உள்வாங்கவே இந்த ஏற்பாடு. வழங்கப்படக் கூடிய அற்புதங்களை ஒவ்வொருவரும் ஒவ்வொரு பரிமாணத்தில் பெறுவார்கள். ஈஷா யோகாவை அதன் இயல்பான தன்மையில் ஏற்பவர்கள் உண்டு. சிலர் ஈஷா யோகாவை முழுமையான அன்பு நிலையில் உணர்வார்கள். சிலர் ஈஷா யோகாவை பயிற்சிகளாகவும், மூச்சுக்கலை வழிகாட்டுத லாகவும் உணர்வார்கள். இன்னும் சிலருக்கோ ஈஷா யோகா, வாழ்வைத் தீவிரமாக அனுபவிப்பதற்கேற்ற வழிகாட்டுதலாகவும் தெரியும்.

அவர்களுடைய தன்மையில் எந்த அம்சம் திறந்த நிலையில் இருக்கிறதோ, அதற் கேற்ப அவர்களின் உள்வாங்கும் தன்மை இயங்குகிறது. ஒரு குரு என்ற முறையில், எவ்விதமாக அவர்கள் உள்வாங்குகிறார்கள் என்பது பற்றி எனக்குப் பிரச்சனையில்லை. எதையேனும் அவர்கள் உள்வாங்கினால் உள்ளே நுழைந்து விட்டால் நம் வேலையைத் தொடங்க முடியும். எனவே, நீங்கள் மற்றவர்களைப் பார்த்து அதைப் போலவே செயல்பட வேண்டியதில்லை. உங்களுக்குள் எது செயல்படுகிறதோ, அதன் உச்சத்தை அது எட்ட நீங்கள் அனுமதிக்க வேண்டும். உச்சத்தை எட்டுவதில் இருக்கும் தடைகளையும் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

மனித மனம் தன் எல்லைகளையும், தடை களையும் உணர்வதேயில்லை. இன்னொரு மனிதரின் எண்ணங்களுடன் உங்கள் எண்ணங்களை ஒப்பிடுகிறீர்கள். பிறகு, அவரிடம் “ஒன்று நீங்கள் சொல்வது தவறு. அல்லது நான் சொல்வது தவறு” என்கிறீர்கள். இரண்டுமே சரியாகக்கூட இருக்கலாம். ஏன் தெரியுமா? இரண்டுமே குறுகிய எல்லைக்கு உட்பட்ட ஆபத்திலிருந்து உருவாவதுதான். ஆனால் அதைத் தடை என்றுணராமல், “இதை என் உள்ளுணர்வு சொல்கிறது. கடவுள் என் காதில் சொல்கிறார். எங்கிருந்தோ வழிகாட்டுதல் வருகிறது” என்றெல்லாம் சொல்கிறீர்கள். இதன் மூலம் உங்கள் எல்லைகளையும், தடைகளையும் உண்மை யான இயல்பில் உணர மறுக்கிறீர்கள்.

இப்போது என்ன இருக்கிறதோ, அதை அங்கீகரிக்க மறுத்தால் உங்களுக்கு நீங்களே கேடு விளைவித்துக் கொள்வீர்கள். இந்த எல்லைகளுக்குள் சிறைபட்டுப் போவீர்கள். இருப்பதை ஏற்றுக் கொண்டால் புதிய வாய்ப்புக்கான வாசல் திறக்கும். இல்லையென்றால் நேரமும், வாழ்க்கையும் வீணாகும்.

சிலர் என்னிடம் வந்து, “நான் தியானம் செய்கையில், நெற்றிப்புருவம் நடுவே ஏதோ குறுகுறுக்கிறது” என்பார்கள். “அப்படியா னால், மூன்றாவதாக ஒரு கண் திறக்கிறது” என்று வேடிக்கையாகச் சொல்வேன். அதிர்ந்து போவார்கள். மூன்றாவது கண் என்பதென்ன? நெற்றியில் புதிதாக ஒரு கண் திறக்கப் போவதாக நினைக்கிறீர்களா? அதில் ஏதாவது குறைபாடு நேர்ந்தால் எப்படி கண்ணாடி அணிவீர்கள்? புதிதாக ஒரு கண் உங்கள் முகத்தில் முளைப்பதால் எதுவும் மாறிவிடப்போவதில்லை. மூன்றாவது கண் என்றால் என்ன தெரியுமா? வாழ்க்கை குறித்த புதிய புரிதலும் புதிய பார்வையும் ஏற்படுவதாக அர்த்தம். இதுவரை வாழ்ந்த வாழ்வின் அர்த்தமின்மை உங்களுக்குப் புரிகிற போது உங்கள் சக்திநிலை மேல்நோக்கி உயர்கிறது.

“நீங்கள்” என்று எதையெல்லாம் அடையாளப்படுத்துகிறீர்களோ அதையெல் லாம் சாராத புதிய ஒன்றினை உங்களுக்குள் ஏற்படுத்துவதே யோகா. இந்தப் புதிய அம்சம் முதலில் உங்களுக்குள் ஒரு துளியாகத் துவங்கும். அதற்கு நீங்கள் போதிய இடம் ஏற்படுத்தினால், உள்ளே இருக்கும் அபத்தங்களை அகற்றினால், அந்தத் துளி விரிவடையும். ஒருநாள் அது உங்களை முழுமையாக ஆட்கொள்ளும். உங்கள் அபத்தங்கள் அர்த்தமற்றவையாய் ஓர் இடத்தில் இருக்கும். தேவைப்பட்டால் அதையும் நீங்கள் பயன்படுத்தலாம் அல்லது விட்டுவிடலாம். இத்தகைய தியானத்தன்மையை நீங்கள் அடையும்போது நீங்கள் சமாதிநிலையை அடைகிறீர்கள்.

வாழ்வின் அபத்தங்கள் அனைத்துமே வாழ்வின் இருமை நிலையிலிருந்து வருபவை. இந்த இருமை நிலை உங்களுக்குள் இடையறாது இயங்கி அனைத்துவித அபத்தங்களையும் உற்பத்தி செய்கிறது. இந்த இருமையை நீங்கள் கடந்து விடுகிறபோது உங்களுக்குள் ஒரு தெளிவான வெற்றிடம் ஏற்படுகிறது. இருமைகள் அனைத்தும் உங்களுக்கு வெளியே இயங்குகின்றன. தேவைப்பட்டால் அவற்றைப் பயன்படுத்த சில விளையாட்டு களை விளையாடலாம். இல்லையென்றால் விட்டுவிடலாம்.

முற்றாக இந்த அபத்தங்களே இல்லை யென்றால் இந்த உலகில் உங்களால் வாழ முடியாது. ஓர் அவதூதர் ஆவீர்கள். சம்யமா, பாவஸ்பந்தனா ஆகிய ஈஷா வகுப்புகளில் சின்ன குழந்தைகள் போல் ஆகிவிடுவதைப் பார்த்திருப்பீர்கள். அவர்களுக்கு எதுவும் தெரியாது. உணவு ஊட்ட வேண்டும், எழவும், அமரவும் உதவ வேண்டும். இந்த நிலைக்கு வருபவர்கள் தங்கள் மனம் கடந்த நிலைக்கு சென்றுவிட்டவர்கள். ஒரு குழந்தையைப் பார்த்துக் கொள்வது போல் அவர்களைப் பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லையென்றால், இந்த உலகத்தில் அவர்களால் வாழ இயலாது. இதே நிலையில் இவர்கள் பல ஆண்டுகள் இருப்பார்கள். இது மிகவும் ஆனந்தமான அற்புதமான நிலை.

மனிதர்களை இந்த நிலைக்குக் கொண்டு செல்வது எனக்கு மிகவும் எளிது. ஆனால் அவர்களைப் பார்த்துக் கொள்ள யாரும் இருக்க மாட்டார்கள். இந்த சமூகச் சூழல் இதை சரியாக உணர்ந்து கொள்ளாது. அவர்களை மனநிலை பாதிக்கப்பட்டவர் களாகக் கருதிவிடும். இந்தியாவில் அவதூதர்கள் வணங்கப்பட்டார்கள். குறிப்பாக, தென்னிந்தியாவில் பலரும் அவ்விதமாக வாழ்ந்துள்ளனர். சிறிது நேரத்திற்காவது அத்தகைய நிலைக்கு செல்வது எல்லோருக்கும் நல்லது. ஏனெனில், 110 மாடிக் கட்டிடத்தின் அஸ்திவாரத்தையே உலுக்குவது போல் அந்நிலை உங்கள் கர்ம வினைகளின் கட்டமைப்பை அசைத்துவிடும். இல்லை யென்றால், உங்களுக்குள் இருக்கும் தன்மையைத் தூய்மை செய்ய எல்லை யில்லாத விழிப்புணர்வு தேவை. அவதூத நிலையில் ஒருவர் தம் கர்ம வினைகளின் அடித்தளத்தை அசைத்துவிட முடியும். ஏனென்றால், அப்போது அவர் எதையும் உணர்வதில்லை. எதையும் செய்வதில்லை. எனவே எந்தத் தடைகளும் இல்லை.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**:
www.innerengineering.org

யோகிகள் குறிப்பிட்ட காலத்திற்கு இந்நிலையில் இருக்கிறார்கள். ஏனெனில், விடுதலைக்கு இதுவே விரைவான வழி. அதே நேரம் அவதூதர்கள் அந்த நிலையில் இருந்தபடியே தங்கள் உடலை உதற முடியாது. உடலை விட்டுச் செல்லும்போது மீண்டும் விழிப்புணர்வுக்கு வருவார்கள். அந்த நிலையில் சில கர்ம வினைகளை ஏற்படுத்திக் கொள்வார்கள். மிக எளிய கர்ம வினைகள்தான் என்றாலும் அவர்களால் தங்களை விடுவித்துக் கொள்ள முடியாது. அவர்கள் உடல் கடந்த உயிர்களாய் சூட்சுமமாய் இருப்பார்கள்.

எனவே, தியானத்தின்போது நெற்றியில் ஏற்படும் குறுகுறுப்பு மூன்றாவதாய் ஒரு கண்ணை முளைக்க வைக்காது. மாறாக, புதிய ஒன்றின் தொடக்கமாக இருக்கும். “நீங்கள்” என்று எதனை நினைக்கிறீர்களோ, அதனைக் கடந்ததாய் இருக்கும். அதனை நீங்கள் வளர்த்தெடுத்தால் விரிவடையும்.






யோகா சோதிடம்
• கிரகப்பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# ஆம், எங்களால் முடியும்

| | |
|---|---|
| 3 Yrs Fixed Rate : 2.59 % | OAC* |
| 5 Yrs Fixed Rate : 2.99 % | |

கடன்களை ஒன்றுபடுத்தி எல்லா பேமேன்டையும் ஒரே பேமேண்டாக மாற்ற

முதலாவது, 2வது மற்றும் 3வது மோட்கேஜ்

**YES We Can**

லைன் ஒப் கிரெடிட் எடுக்க

பவர் ஒப் சேல் பிரச்சினையை தடுக்க

பாங்க்ரப்சி செய்தோருக்கான மோட்கேஜ் எடுக்க

வீடு வாங்க அல்லது விற்க மற்றும் உங்கள் வீட்டினை அல்லது பேஸ்மென்ட்டை வாடகைக்கு விட

ரீபைனான்ஸ் செய்ய

# மோட்கேஜ் கிளினிக்







தயா (PK) கந்தையா BAS, ABR, AMP
Principal Broker / President
FSCO Lic # M 08001083
**Cell : 416-716-8707**

ஜெ (Jey)இராசதுரை MBA, BBA (Hon), AMP
Mortgage Development Manager / Agent
FSCO Lic # M 09001426
**Cell : 416-624-4843**

சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent
FSCO Lic # M 12001741
**Cell : 647-861-8240**

## வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00

CENTUM™
Rapid Mortgages Inc.
LIC # 10156

80 Nashdene Road, Suite # 211
Toronto, ON. M1V 5E4.
416-816-9011 / 416-644-3555

rapid realty inc.

# குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் - 2014

## விளையாட்டுத் தகவல்கள் 357

01ஆம் பக்கத்தொடர்ச்சி

அமெரிக்காவின் 20 வயது வீரர் சேஜ் கோட்சென்பர்க், முதல் தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றார். நோர்வேயின் சாண்ட்பக்குக்கு வெள்ளியும், கனடாவின் நாடுகளைச் சேர்ந்த 2,800க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். 23 ஆம் திகதி வரை நடக்கவுள்ள போட்டிகளில் பல்வேறு நாடுகளின் வீரர்கள் பங்கேற்கின்றனர்.



மெக்மோரிசிற்கு வெண்கலமும் கிடைத்தது. கனேடிய வீராங்கனைகள், தங்கம் மற்றும் வெண்கலமென இரண்டு பதக்கங்களை வென்றார்கள். ஸ்லோப் ஸ்ரைல் ஸ்கீயிங் (Slopestyle Ski) போட்டியில் ஒன்ராரியோவை சேர்ந்த டாறா ஹவெல் (Dara Howell) தங்கப் பதக்கத்தையும், குபெக்கைச் சேர்ந்த கிம் லமார் (Kim Lamarre) வெண்கலப் பதக்கத்தையும் வென்றார்கள்.

குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுக்கள் (Winter Olympic Games) என்பது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை பனிச்சூழலில் நடத்தப்படும் ஒலிம்பிக் விளையாட்டுக்கள் ஆகும். குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் ரஷ்யாவின் சோச்சி நகரில் கோலாகலமாக தொடங்கியது. 22 ஆவது குளிர்கால ஒலிம்பிக் போட்டி இம்முறை நடந்து வருகிறது. 88 முதல் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் 1924ஆம் ஆண்டு பிரான்சின் சமோனிக்சில் நடத்தப்பட்டன. 1924 முதல் 1936 வரை எவ்வித இடையூறும் இன்றி தொடர்ந்து நடந்த போட்டிகள், இரண்டாம் உலகப் போரின் காரணமாக 1940, 1944 ஆம் ஆண்டுகளில் தடைப்பட்டன. பின்னர் மீண்டும் இப்போட்டிகள் 1948ஆம் ஆண்டில் நடத்தப்பட்டன. கோடைக்கால ஒலிம்பிக் நடத்தும் நாடே குளிர்கால ஒலிம்பிக்கையும் நடத்த தெரிவு செய்யப்பட்டது, மேலும் இவை ஒரே ஆண்டில் நடத்தப்பட்டு வந்தன. இதன்பின் 1986 இல் பன்னாட்டு ஒலிம்பிக் குழு எடுத்த முடிவின்படி, இவ்விரு நிகழ்வுகளும் தனித்தனி நான்காண்டு சுழற்சியில் நடத்தப்படுகின்றன. கோடைகால ஒலிம்பிக் நடந்த பிறகு இரண்டாண்டுகள் கழித்து குளிர்கால ஒலிம்பிக் நடத்தப்படு கிறது. இதன்படி 1992ல் நடந்த குளிர்கால ஒலிம்பிக்கிற்கு அடுத்த குளிர்கால ஒலிம்பிக் 1994 இல் நடத்தப்பட்டது. அதிலிருந்து தொடர்ந்து நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட்டு வருகிறது. 22ஆவது குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கு ரஷ்யா, தென் கொரியா, ஆஸ்திரியா ஆகிய நாடுகள் போட்டி போட்டன. இறுதியில் ரஷ்யா வெற்றிபெற்றது.

தற்போது 2014ம் ஆண்டுக்கான குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் ரஷ்யாவின் சோச்சி (Sochi) நகரில் பிப்ரவரி 7 ஆம் திகதி தொடங்கியது. பிரம்மாண்டமான தொடக்க விழாவில் ஜனாதிபதி புடின், ஐ.நா.வின் பான்-கி-மூன், சீன ஜனாதிபதி ஜின் ஜிபியாங், உக்ரைன் ஜனாதிபதி விக்டர் யனுகோவிச் உள்ளிட்ட 40 நாடுகளுக்கும் மேற்பட்ட தலைவர்கள் பங்கேற்றனர். போட்டிக்கு தீவிரவாத அச்சுறுத்தல் காரணமாக இராணுவத்தினருடன் 37,000 பொலிசாரும் இணைந்து பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். போட்டியை சீர்குலைக்க விமான பயணிகள் போல் தீவிரவாதிகள் ஊடுருவலாம் என அமெரிக்கா எச்சரிக்கை விடுத்தது.

கருங்கடல் பகுதியில் ஒலிம்பிக் கிராமமும் ஒலிம்பிக் சதுக்கமும் அமைந்திருக்கும். சுமார் 1800 அடி உயரமான அல்பைன் (Alpine) மலைப்பகுதியில் ஏனைய போட்டிகள் நடைபெறுகின்றன.

கடந்த காலங்களில் கனடாவில் குளிர்கால ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக்கள் இருமுறை நடைபெற்றன. 1988 இல் கல்ஹரியிலும், 2010 ஆம் ஆண்டு வன்கூவரிலும் குளிர்கால ஒலிம்பிக் இடம் பெற்றன. கனடாவில் கோடைகால ஒலிம்பிக் ஒரேயொரு முறை 1976இல் மொன்றியலில் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.



**எஸ். கணேஷ்**

# ஆதன...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

கூற்று.

1990 களில் 905 பகுதிகளில் அடுக்குமாடி கட்டிடத்தில் மிகமிக குறைவான மக்கள் வாழ்ந்தார்கள். எதிர்காலத்தில் என்ன நடக்கலாம் என்ற தூரதேச சிந்தனை, என்னுடைய வாழ்வை தனிச்சிறப்பான பாதையில் அழைத்துச் சென்றது என பெருமையாகச் சொல்லும் இவர், தான் பெருமையாகக் கொள்வது, தான் செய்யும் நன்கொடைகளே. அத்துடன் எனது பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளே.

இவர்கள் போன்றவர்களின் சேவை எமது நாட்டிற்கு என்றென்றும் தேவை. இவரையும் இவர் போன்றவர்களையும் கடவுள் ஆசீவதிப்பாராக. இவர்கள் போன்றவர்கள் கனடாவிற்கு வருபவர்களிற்கும் மற்றும் இங்கு வாழ்பவர்களுக்கும் சிறந்த வழிகாட்டிகள்.



விளம்பரம் பத்திரிகையை இணையத்தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com






# ஆதன நிர்மாண நிறுவனத்தின் இயக்குனர் *RUDY BRATTY*

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

**தொடர் - 409**



கனடாவில் பலவிதமான செயல்களால் பலர் தமது பெயரினை கனடிய சரித்திரத்தில் அழியாத கோலங்களாக, மிக ஆழமாகப் பதித்துள்ளனர். இந்த வரிசையில் என்னுடைய அனுமானத்தில் திரு. ரூடி பிறாற்றி அவர்களையும் கொள்ளலாம். இவர் ஆதனம் கட்டுதல் சமமந்தமான, ஆரம்ப வேலைகளிலிருந்து முற்றாக கட்டிமுடிக்கும் வரையிலான எல்லா ஆற்றலும் அறிவும் தகுதியும் பெற்றவர். தாராளமனம் படைத்த கொடையாளி மற்றும் சிறந்த குடும்பத்தவர். இவரின் ஆதன நிறுவனமான Remington தனது 25 ஆவது வருடத்தை இவ்வருடம் (2014இல்) கொண்டாடுகின்றது. 81 வயதான இவர் தனது காளை வயதிலிருந்து இந்த தொழிலில் மிகவும் சிறப்பாகவும் விருப்பத்துடன் மிகுந்த ஈடுபாட்டுடனும் செயல்பட்டு வருகின்றார். இவர் தனி, இரு, பல சேர்ந்த வீடுகளும் (Lowrise House) மற்றும் அடுக்குமாடி மனைகளும் (Highrise House) கட்டுவதில் சிறப்பு பெற்றவர்.

18 பேரப்பிள்ளைகளைக் கொண்ட இவரிற்கு 4 ஆண்மகன்களும், 1 பெண் பிள்ளையும் உள்ளனர். 45 வருடங்களாக தனது மனைவி கதரின் (Catherine) உடன் வாழ்ந்து வரும் திரு. ரூடி பிறாற்றி ஞாயிறுதினம் தவிர மற்றைய 6 நாட்களும் தொழில்புரிவதனை பெருமையாக கருதுகின்றார். B.A பட்டத்தை ரொறொன்ரோ பல்கலைக்கழகத்திலும் சட்டம் சம்மந்தமான பட்டத்தை (Law Degree) ஐ Osgoode Hall Law School இல் இருந்து பெற்றிருந்தபோதும் ஆதனம் நிர்மாணம் செய்வதிலேயே பூரண திருப்தி அடைவதாக தெரிவிக்கின்றார்.

வளரும் பயிரை முளையிலேயே அறியலாம் என்பதற்கேற்ப 13வது வகுப்பு படிக்கும்போது, தனது பள்ளித் தோழன் Angelo Delzotto (Tridel நிறுவனத்தின் தலைவர்) சேர்ந்து வீடு கட்டி விற்று ஆதாயம் அடைந்துள்ளார். இவரின் தந்தை 1வது வகுப்பு மட்டுமே படித்திருந்த போதிலும், இவரை ஒரு படித்தவராக்க வேண்டும் என்பதை கனவாகக் கொண்டிருந்தார். நிர்மாணத்தொழிலில் ஆத்ம திருப்தி கொள்ளும் இவர் தகப்பனின் விருப்பத்திற்கேற்ப சட்டப் படிப்பை மேற்கொண்டுள்ளார்.

1957 இல் Bratty & Partners LLP என்ற சட்ட அலுவலகத்தை தொடக்கியபொழுது 11 இத்தாலிய மொழி பேசக்கூடிய சட்டத்தரணியே இருந்ததாக ஞாபகப் படுத்துகிறார். இந்த நிறுவனத்தால் பலரை தான் நண்பர்களாக்கிக் கொண்டதாகவும் முக்கியமாக Pemberton அடுக்குமாடி கட்டிட நிறுவன அதிபர் Marco Muzzo மற்றும் Aspen Ridge & Con Drain நிறுவன அதிபர் Freddy De Gasperis அவர்களைக் குறிப்பிடலாம்.

ஆரம்பத்தில் வீடுகளையே நிர்மாணித்துக் கொண்டிருந்த இவரின் நிறுவனம், நிலத்தின் பற்றாக்குறை வருவதை அவதானித்ததால் அடுக்குமாடி நிர்மாணத்திலும் தமது காலை இறுக்கமாக பதித்துக்கொண்டார்.

அடுத்த 20 வருடங்களில் கனடிய, குறிப்பாக GTA இல் ஆதனம் சம்பந்தமான நிலைமை எவ்வாறாக இருக்கலாம் என இவரது எதிர்வு கூறலைக் கேட்டபோது, உலகமே கனடாவில் வாழவே விரும்புகின்றது. 160 பாரம்பரியம் கொண்ட 5 மில்லியன் மக்கள் ஒன்றாக வாழ்கின்றார்கள். குறைந்தளவு நிலத்தில் அதிகளவு மக்களின் வரவிற்கேற்ப போதியளவு இருப்பிடத்தை உருவாக்க முடியாமல் உள்ளது. ரொறொன்ரோவில் மக்கள் தொகை அதிகரிக்கின்றது. நிலம் அருகுகின்றது. என்ன நடக்கும்? ஆதனம் அழகான முதலீடாக இருக்கும் என்பதே அவரின்

தொடர்ச்சி 06ஆம் பக்கம்


**HomeLife/GTA Realty Inc.Brokerage***

*Independently Owned & Operated



"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

***Raja Mahendran,*** P.Eng.

*Broker / Owner*

**5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969**

**DENTAL OFFICE SPACE FOR LEASE OR SALE**

Upto 1850 Sq.ft Space Available in Scarborough. 24 hrs. Accessibility. Close to TTC & HWY

**CONDO FOR SALE**

**HWY 401 & KENNEDY**

- 1 + Den, Excellent Facilities
- 3 Years Old Condo
- Moving Anytime
- Asking $259,900

**CONVENIENCE &GROCERY FOR SALE IN SCARBOROUGH**



- Unbelievable Price
- One of the best location in Scarborough
- Convenient Location
- TTC at the steps
- Movie / CD / DVD Rental / Sale (Exclusive)
- 10 years Business in the same location.
- Lotta (649)
- Tickets
- Key Cuts
- Very Busy Plaza

**For more Information: 416.315.9397**

**CONDO FOR SALE**

- 1 + Den, 1 Parking
- Close to Scarborough Town Center
- Only 3 years old
- Investors Choice or Owners to live
- Asking Only $259,900

**Coin laundry For Sale Kennedy & Eglinton**

A Highly populated. Surrended by apartment area. One Year new business. High quality washer & dryer. Money changing machine. Soap dispensor. Possible to have alteration person & laundry outlet. Very reasonable rent. Longe term lease possible.

# வட மாகாணத்திற்கு உரித்தான இரணைமடுக்குளம் மத்திய அரசிற்கு சொந்தமாகப்போகிறது...!

## தாயக மடல்

**- வன்னியிலிருந்து ஆதித்தன் -**

கிளிநொச்சி இரணைமடுக் குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு குடிநீர் கொண்டு செல்வது தொடர்பான சர்ச்சைகள் நாளுக்கு நாள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்ற நிலையில், இந்தப் பத்தியை எழுதிக் கொண்டிருக்கும் (14.02.2014) தருணத்தில் இது குறித்து அமைக்கப் பட்டுள்ள நிபுணர் குழுவின் அறிக்கையும் வெளிவரவுள்ளதான தகவல் வந்துள்ளது. இரணைமடுவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டத்தின் பின்னாலுள்ள நோக்கங்கள் குறித்து முன்னைய இதழிலும் குறிப்பிட்டிருக்கின்றோம்.

கிளிநொச்சி இரணைமடு குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு குடிநீர் கொண்டு செல்வது குறித்த சர்ச்சைகள், சிக்கல்கள் உள்ளூர் ஊடகங்கள் பலவற்றில் செய்தி களாகவும், கட்டுரைகளாகவும் வெளிவந்து கொண்டே இருக்கின்றன. யாழ்ப்பாணத் திற்கு இரணைமடு குளத்திலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் நடைமுறைக்கு வருகின்ற போது அதனால் விவசாயத்தையே தங்கள் வாழ்வாதாரமாக் கொண்டு வாழும் மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதிலும், வடக்கில் மக்களிடையே பிளவு ஒன்று ஏற்பட்டு விடக்கூடாது என்பதிலும் நலன் விரும்பிகள் மிகுந்த அக்கறையாக உள்ளனர். மழை பெய்வது போதாமல் இருந்தால் குளம் நிரம்பாது. அப்போது மனிதாபிமான சட்டங்களின்படி குடிநீருக்கே முன்னுரிமை வழங்கப்படும். அவ்வகையில்



விவசாயம் முற்றுமுழுதாகப் பாதிக்கப்படும் என்பதே கிளிநொச்சி விவசாயிகளின் அச்சமாகும்.

இந்த திட்டம் சரச்சைக்குள்ளானால், ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்படும் பெருமளவு நிதி கிடைக்காமல் போய்விடும் என்றும், இக்குடிநீர் திட்டத்தின் மூலம் நீண்ட நாட்களாக புனரமைக்கப்படாமல் உள்ள இரணைமடு குளம் புனரமைக்கப்படும் என்பதால் கிளிநொச்சி விவசாயிகளுக்கும் இதில் நன்மை கிட்டும் என்றும் சிலர் வாதிடுகின்றனர். குளத்தில் நீர் நிரம்பினால்தான் கிணறுகளில் நீர் நிரம்பும் என்கிற கிளிநொச்சி மண்ணின் யாதார்த்தம் கிளிநொச்சியில் வாழுகின்ற மக்களுக்கு மட்டுமே புரியும். கிளிநொச்சி யின் விவசாயம் பாதிக்கப்படாமல் யாழ். குடிநீர்த் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்கின்ற எழுத்து மூலமான உறுதிப் பாட்டை வழங்கினால் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்று இப்போது கிளிநொச்சி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

‘இரணைமடுத் தண்ணீரை யாழ்ப்பாணத் திற்கு தர முடியாது என்றால் யாழப்பாணத்தில் இருந்து வன்னிக்குச் சென்று சேவையாற்றுவதற்கு முடியாது. கிளிநொச்சி விவசாயிகள் இதில் விடாப்பிடியாக இருந்தால், அங்கு சென்று பணியாற்றுவது குறித்து நாமும் விரைவில் முடிவு செய்வோம் இவ்வாறு யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னிக்குச் சென்று சேவையாற்றி வரும் அரச அதிகாரிகள் பலர் தெரிவித்தனர்’ என்று அண்மையில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இச்செய்தி, சமூக அக்கறையாளர்கள், தேசியத்தை நேசிப்பவர்களுக்கு அதிர்ச்சியளிப்பதாகவே உள்ளது. இந்த குடிநீர்த்திட்டத்தினால் எது நடைபெறக்கூடாது என்று எதிர் பார்க்கப்பட்டதோ அது நடந்து விடுமோ என்கிற அச்சம் இப்போது ஏற்பட்டுள்ளது. அதைவிடவும், ஓர் அரச ஊழியர், எந்தப் பகுதிக்கு மாற்றம் செய்தாலும் அங்கு சென்று பணியாற்ற வேண்டியவரே. அவ்வாறிருக்கும் போது, இச்செய்தி குறித்த ஊடகத்தினால் புனையப்பட்ட ஒன்றா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. இந்த நிலையில், இரணைமடுக்குளம் தொடர்பான மக்களின் முரண்பாடுகளும், சர்ச்சைகளும் உன்னிப்பாக ஆளும் தரப்பினால் கவனிக்கப்பட்டு வருகின்றது.

இப்போது இரணைமடுக் குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு குடிநீர் விநியோகிக்க மகாவலி அதிகார சபை திட்டமொன்றை வகுத்துள்ளது.

தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் மொரகஹகந்த நீர்த்தேகத்தின் ஊடாக அனுராதபுரத்திற்கும், அங்கிருந்து இரணை மடுவிற்கும் நீரைக் கொண்டு செல்வதுதான் இந்தத் திட்டமாகும். மொரகஹகந்த நீர்த் தேக்கத்தில் இருந்து 160 கிலோ மீற்றருக்கும் அதிகமான நீளம் கொண்ட வாய்க்கால் மூலம் இரணைமடுக் குளத்திற்கு நீரைக் கொண்டு செல்ல இத்திட்டத்தின் மூலம் உத்தேசிக்கப் பட்டுள்ளதுடன், அதனை அடுத்த 10 வருடங்களுக்குள் நிறைவு செய்ய எதிர்பார்ப்பதாக இலங்கை மகாவலி அதிகார சபையின் தொழில்நுட்பப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் நாயகம் என்.ஜீ.எம் நவரத்ன தெரிவித்துள்ளார். மழையை நம்பியே இரணைமடுவின் குளத்தின் நீர் நிரம்பல் இடம்பெறுகின்ற நிலையில், இத்திட்டம் நடைமுறைக்கு வருமானால் சில சமயம் கிளிநொச்சி விவசாயத்திற்கும், யாழ். குடிநீருக்குமான திட்டம் வெற்றி யளிக்கலாம். ஆனால், இத்திட்டத்தின் மூலம் வட மாகாணத்திற்கு உரித்தான இப்பாரிய நீர்த்தேக்கம் மத்திய அரசின் உடமையாகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என்பதுதான் கவனிக்கப்பட வேண்டிய விடயம். இதே வேளை, இந்த நீர் விநியோகத் திட்டத்தையடுத்து திட்டமிட்ட குடியேற்றங்களும் அடுத்த கட்டமாக நடை-பெறலாம் என்பதும் மறுக்க முடியாத உண்மையே. இந்நிலையில், வட மாகாணத்திற்குரிய இரணைமடுக்குளம் மத்திய அரசின் உடமையாக்கப்பட்டு விடப்போகின்றதா? அதன் பின்னால் நடக்கப்போவது என்ன? என்கிற கேள்விகள் வடக்கு தமிழ் மக்கள் மத்தியில் பெரிதாக எழுத்துள்ளன.


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4



அனைத்துலக தமிழ் வானொலி
GLOBAL TAMIL RADIO
* செய்திகள்
* போட்டிகள்
* பாடல்கள்
* தகவல்கள்
24 மணி நேர தமிழ் ஒலிபரப்பு
416-264-4283 / 416-264-3666
"மண்ணையும் மனங்களையும் நேசிக்கலாம்"
www.gtr24.com

# MATH WORLD

a Private math learning centre for higher studies.

## "Starting NEW CLASSES FOR THE 2ND SEMESTER."

**With our 23 years of experience in teaching math;**



## G12 CALCULUS and VECTOR
## ADVANCED FUNCTION

**We specialized in HIGHER GRADES ONLY.** (G9, G10, G11 & G12)

**OUR GOAL: 85% and Above.**

**Bonus:** For those taking Advanced Function you will get a free FINAL EXAM REVIEW

THIS SEMESTER, OUR NEW PROGRAM IS DESIGNED TO:



- **Prepare the students for "PRE CALCULUS"**
  - First Differences * Linear Function *Function Notation
  - Expanding Binomial, Trinomials plus higher degrees
  - Factoring higher level of Polynomials
  - Simplifying Rational Expressions.
  - A complete knowledge of Algebra – @ UNIVERSITY LEVEL
  - Our Own Art of Teaching earned through the last 23yrs will be shared to avoid careless mistakes.

**ONE WEEK FREE Trial**

**"We will get you the top" Satisfaction is guaranteed**

**Location: Scarborough; Markham and Steel.**

**FOR INFO: 416 666 5515**

# துணைக்கு செல்வோருக்கு போக்குவரத்து கட்டணம் இலவசம்! ரி.ரி.சி வழங்கும் சலுகை

## கனடிய தகவல் தொடர் 213

### *TTC SUPPORT PERSON ASSISTANCE CARD*

இது ஒரு புதிய செய்தி!

• நடப்பதற்கு சிரமப்படும் உடல்நிலை பாதிக்கப்பட்டோர்

• உள நிலையில் ஏனையோருடன் தொடர்புகள், உறவுகளை மேற்கொள்ள முடியாதவர்கள்!

• மருத்துவ உபகரணங்களின் உதவியுடன் இயங்கும் நோயாளிகள்

• வெளியே செல்ல இன்னொருவரின் உதவி தேவை என உள்ள கடுமையான நோய்களினால் பாதிக்கப்பட்ட நோயாளிகள்

மேற்கூறியது போன்ற துன்பியல், துயரங்களுடன் வாழ்பவர்களுக்கு துணை யாக ரொறொன்ரோ போக்குவரத்து சபையின் பேருந்துகள், நிலக்கீழ் தொடரூந்து, வலுவளர் வாகனம் என்பவற்றில் செல்பவர்களுக்கு கட்டணம் இலவசம். இதுவே அந்த புதிய செய்தியாகும்.

ஜனவரி 01, 2014 இலிருந்து இத்தகைய சலுகை திட்டத்தினை ரொறொன்ரோ போக்குவரத்து சபை முதன் முதலில் அமல்படுத்த தொடங்கியுள்ளது.

இதற்குரிய விண்ணப்பப்படிவத்தினை (Application for TTC support person assistance card) ரி.ரி.ஸி இணையத்தளத்தில் இருந்து பதிவு இறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் இவை தொடர்பான தகவல்கள் யாவும் இவர்களின் இணையதளத்தினுள் தெளிவாக வழங்கப்பட்டுள்ளது.

இன்னொருவரை துணைக்கு அழைத்துச் செல்ல வேண்டிய நிலையிலிருக்கும் பாதிப்புக்குள்ளானவர் தமது பெயரில் இதற்குரிய விண்ணப்பத்தினை சமர்ப்பித்து படத்துடன் சேர்ந்த அடையாள அட்டை யினை பெற்று வைத்திருத்தல் வேண்டும்.

இவ்விண்ணப்பத்தில் அனுமதிப் பத்திரம் பெற அதிகாரிகளுக்கு கனடிய மருத்துவர் களின் அத்தாட்சி முக்கியமானதாகும். ‘துணைக்கு போக ஒருவர் எதற்காக தேவை? என்பதன் விளக்கம் தெளிவாக வழங்கப்பட்டு அது மருத்துவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை படங்களுடன் பின்வரும் முகவரிக்கு தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

TTC support person assistance card
1900, Young Street
Toronto Ontario M4S1Z2



மேலதிகமான தகவல்களை பெற ரொறொன்ரோ போக்குவரத்து சபை வாடிக்கையாளர் பிரிவுக்கு 416.393.3030 என்ற தொலைபேசிக்கும் அழைக்கலாம். விண்ணப்பம் சமர்ப்பித்து நான்கு கிழமைக்குள் அடையாள அட்டையினை அனுப்பி வைப்பார்கள்.

• விண்ணப்பிப்பவர் விண்ணப்பத்துடன் இரு கலர் பாஸ்போர்ட் படம் போன்ற இரு படங்கள் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். தபாலில் அனுப்பாது நேரடியாக ரொறொன்ரோ போக்குவரத்து சபையின் வாடிக்கையாளர் பிரிவில் (TTC customer service center) விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பவர் தமது அடையாள அட்டை ஏதாவது ஒன்றினை காட்டி அலுவலகத்தி லும் படத்தினை எடுத்துக்கொள்ளலாம்.

• மூன்று வருடங்களுக்கு மட்டும் இத்துணையினை இலவசமாக அழைத்து செல்லும் அனுமதி அட்டை வழங்குவார் கள். மூன்று வருடங்களுக்கு பின்பும் சேர்ந்து போக துணை தேவை என்ற நிலை தேவைப்பட்டால் மீண்டும் விண்ணப்பித்து, மருத்துவ அத்தாட்சிகளு டன் நிரூபித்து இவ் அட்டையினை புதுப்பித்துக்கொள்ள வேண்டும். நிரந்தர மாக துணை தேவை என்ற நிலையில் இருப்பவர் ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கு ஒருமுறை புதுப்பித்துக் கொள்ளலாம்.

• விண்ணப்பிப்பதற்கும், அடையாள அட்டைக்கும் எதுவிதமான கட்டணமும் அறவிடப்படுவதில்லை.

• பிரயாணத்தின் போது எவராவது ஒருவரை மட்டுமே அழைத்து செல்லலாம். ஒருவருக்கு மேற்பட்ட எவரையும் இலவசமாக அழைத்து செல்லமுடியாது.

பேருந்துகளில் ஏறும் போதும், அல்லது நிலக்கீழ் தொடரூந்து நிலையங்களில் பிரவேசிக்கும் போதும் துணை தேவைப்படு பவர் வழமையான தமது கட்டணத்தை போட்டுவிட்டு, துணைக்கு அழைத்து செல்ல வைத்திருக்கும் உரிமை பத்திரத்தினையும் அழைத்து செல்பவரினை யும் காட்டிவிட்டு அவரை இலவசமாக அழைத்துச் செல்லலாம்.

• இவ் அடையாள அட்டையினை காட்டி இலவசமாக துணைக்கு எந்த சந்தர்ப்பத்திலும் எவராவது ஒருவரை அழைத்து செல்லலாமே தவிர, இதனை காட்டி அட்டைக்கு சொந்தக்காரரான உடல், உள நிலை பாதிக்கப்பட்டவர் தனிமையில் இலவசமாக பிரயாணம் செய்ய முடியாது.

• ‘மதியிறுக்கம்’ (Autism) போன்ற மூளை வளர்ச்சி குன்றியவர்களுக்கு இத்தகைய துணைக்கு எவரையாவது அழைத்து செல்லும் அடையாள அட்டை விண்ணப் பித்து பெற விரும்புவர்கள், அவர்களில் சட்டபூர்வமான அதிகாரம் உள்ளவர்கள் விண்ணப்பத்தினை நிரப்பி கைச்சாத்திடலாம்.

• பிரயாணம் செய்யும் உடல், உளநிலை பாதிக்கப்பட்டவருக்கு கட்டணம் இலவசம் என்று கிடையாது. (ரி.ரி.சி வலுவளர் வாகனம் வீடு தேடி வந்து ஏற்றி சென்று போவதற்கே அவர்கள் வழமையான பஸ் கட்டணம் மாதிரி செலுத்த வேண்டும் என்பது நடைமுறையிலிருக்கும் வழமை யாகும்.) ஆனால் அவருக்கு துணையாக போகின்றவர்களுக்கு மட்டுமே இங்கு இலவசம் என்ற சலுகை இப்போது வழங்கப்பட்டுள்ளது.

• தற்காலிகமாக உடல்நிலை பாதிப்புக்கு உள்ளானவர் கூட இந்த துணைக்கு இலவசமாக அழைத்து செல்லும் அனுமதி பத்திரத்துக்கு விண்ணப்பிக்கலாம். மருத்துவரின் அங்கீகாரம் இருந்தால் சரி.

• விரும்பிய நேரம் விரும்பிய ஒருவரை மட்டும் இலவசமாக துணைக்கு அழைத்து செல்லலாம்.

• சில நேரங்களில் இவ் அட்டையினை தொலைத்து விட்டால் வாடிக்கையாளர் பிரிவுடன் தொடர்புகொண்டு இன்னொரு அட்டை பெற்றுக்கொள்ளலாம்.

• உடல், உள நிலை பாதிக்கப்பட்டவரின் படத்துடன் சேர்ந்த அட்டை என்பதால் எந்த சந்தர்ப்பத்திலும் எவருக்கும் இந்த அட்டையை இரவல் வழங்கமுடியாது.

• இவ் அனுமதி அட்டை ரொறொன்ரோ போக்குவரத்து சபை பேருந்துகளில் மட்டுமே அனுமதிக்கப்படும். ஏனைய பிராந்திய போக்குவரத்து சபை இதனை ஏற்றுக்கொள்ளமாட்டாது. அதேபோல ஏனைய பிராந்திய போக்குவரத்துச் சபைகளின் சலுகைகளை ரொறொன்ரோ போக்குவரத்து சபையிலும் உபயோகிக்க முடியாது.

இறுதியாக வாசகர்களுக்கு குறிப்பிட வேண்டிய விடயம் உடல், உளநிலையில் பாதிக்கப்பட்டவர்கள் இந்த அனுமதி அட்டையினை பெற்று வைத்திருங்கள் இது எப்பொழுதும் உதவும்.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999



# காலத்தோடு வளரும் கணினிகள் - 39

அன்பான வாசகர்களே!

கடந்த சில இதழ்களில் மைக்கிரோ சொவ்ற் அக்சஸ் மென்பொருள் பற்றிய விடயங்களைப் பற்றி இந்தத் தொடர் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன். இந்த இதழில் மைக்கிரோ சொவ்ற் பப்ளிசர் (Microsoft Publisher) என்ற மென் பொருளைப் பற்றிக் கவனிப்போம். இந்த மென்பொருளில் உள்ள பல வசதிகள் மைக்கிரோ சொவ்ற் வேட் என்ற சொற்பரி-மாற்ற மென்பொருளில் காணப்பட்டாலும் குறிப்பிடத்தக்களவு விசேடமான பல இயல்புகளையும் கொண்டுள்ளது. ஒரு இலகுவான பதிப்பித்தல் மென்பொருள் (Publishing Software) ஆக மைக்கிரோ சொவ்ற் பப்ளிசர் விளங்குகின்றது. இந்த மென்பொருளைப் பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றிருத்தல் நல்லது என்று நான் கருதுவதால் இந்தத் தொடர்கட்டுரை யில் இந்த மென்பொருளைப் பற்றியும் குறிப்பிட விரும்புகின்றேன்.

இந்த மென்பொருளும் மைக்கிரோசொவ்ற் ஓபீஸ் மென்பொருட்களில் ஒன்றாக இருப்பதால் இந்த மென்பொருளை IBM குடும்பத்து எல்லாக் கணினிகளிலும் காணலாம். Start பட்டனை கிளிக் செய்து All Programs இனை கிளிக் செய்து, Microsoft Office இனைத் தெரிவு செய்து Microsoft Publisher இனைத் தெரிவு செய்ததும் இந்த மென்பொருள் பாவனைக்குத் தயாராகும். இரண்டாவது வரிசையில் File, Edit, View, Insert, Format, Tools, Table, Arrange, Window, Help போன்ற menu titles இருக்கும். File menu இல் New, Open, Close, Save , Save As, Print, Print Review போன்ற தெரிவுகள் இருக்கும். இவற்றின் பயன்பாடு கள் மைக்கிரோசொவ்ற் வேட் என்ற மென்பொருளில் உள்ளது போன்றே இருக்கும். ஆரம்பத்தில் நாங்கள் செய்ய



விரும்பும் Publication Types இனைத் தெரிவு செய்யலாம். உதாரணமாக நாங்கள் ஒரு கலண்டரினை உருவாக்குவதற்கு கலண்டரினைத் தெரிவு செய்யவேண்டும். இப்பொழுது எண்ணற்ற Calendar Templates அவற்றிற்கான பெயரோடும், படத்தோடும் தோன்றும். விரும்பிய ஒரு Templates இனைத் தெரிவு செய்யலாம். திரையகத்தின் வலது புறத்தில் மேல் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட Calendar Template படமாகத் தெரியும். இதற்குக் கீழ் Color Scheme, Font scheme ஆகியன தோன்றும். ஒரு பக்கத்தில் வருடத்திற்குரிய அல்லது மாதத்திற்குரிய கலண்டரினைத் தயாரிக்கின்றோம் என்ற தரவினையும், எந்த வருடம், மாதம் என்ற தரவினையும் அளித்தால் தன்னிச்சையாக கலண்டர் உருவாக்கப்படும். மைக்கிரோ




சொவ்ற் வேட், எக்சல் போன்ற மென் பொருட்களில் பரிச்சயம் உள்ளவர்கள் இந்த மென்பொருளைப் பயன்படுத்த சுயமாகவே கற்றுக் கொள்ளலாம் என்பதால் மிகவும் சுருக்கமாக இந்த மென்பொருள் பற்றிய விடயங்களைக் குறிப்பிடுகின்றேன்.

Art Left என்ற பெயருடைய கலண்டர் Template இனைத் தெரிவுசெய்து, Cherry Colour Scheme, Arial Bold Font Sceme இனையும் தெரிவு செய்து விட்டு, Page Size இனை Landscape எனத் தெரிவு செய்து, Time Frame இனை One month per Page ஆகவும், கலண்டரின் ஆரம்ப திகதி, இறுதித் திகதி, வருடம் போன்ற தரவுகளைக் கொடுத்து Create பட்டனை கிளிக் செய்து ஒரு கலண்டரை இந்த மென்பொருளில் உருவாக்கிப் பாருங்கள்.

திரையகத்தில் உருவாகும் இந்தக் கலண்டரில் விரும்பியவாறு பல மாற்றங்களைச் செய்து பாருங்கள். கலண்டரில் உள்ள படத்தை கிளிக் செய்து விட்டு மூலைகளில் பிடித்து இழுத்து அளவினை மாற்றிக் கொள்ளலாம். படத்தை கிளிக் செய்து விட்டு படத்தின் விளிம்பில் Pointer இனை வைத்து டபிள் கிளிக் செய்தால் Format Picture menu தோன்றும். இந்த மெனுவில் உள்ள தெரிவுகள் மூலம் படத்தில் பல மாற்றங்களைச் செய்து கொள்ளலாம். Insert menu இல் உள்ள Picture தெரிவு மூலம் Clips Arts, அல்லது கணினியில் உள்ள படங்களை கலண்டரில் புகுத்தவும் முடியும். கலண்டரில் பல்வேறு மாற்றங்களைச் செய்ய Insert, Format, Tools, Arrange போன்ற மெனுக்களில் உள்ள தெரிவுகளைப் பயன்படுத்தலாம்.

கலண்டர் தயாரானதும் File, Save As மூலம் சேமித்துக் கொள்ளலாம். மைக்கிரோ சொவ்ற் பப்ளிசர் கோவை .pub extension உடன் சேமிக்கப்படும். jpeg அல்லது Pdf கோவையாகவும் சேமித்துக் கொள்ளலாம்.

அச்சுப்பதிவு செய்வதற்கு File Print View, Print போன்ற தெரிவுகள் பயன்படும். இங்கே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புக்களுடன் முழுமையாக ஒரு கலண்டரினை மைக்கிரோ சொவ்ற் பப்ளிசர் மென் பொருளில் உருவாக்கிக் கொள்ளலாம். இதனைச் செயன்முறையில் வாசகர்கள் செய்தால் ஒரு கலண்டரை உருவாக்கி விட்டோம் என்ற திருப்தியுடன் மைக்கிரோ சொவ்ற் பப்ளிசர் பற்றிய ஆரம்ப அறிவையும் வாசகர்களாகிய நீங்கள் பெற்று விடுவீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

என் அன்புக்குரிய வாசகர்களே! இன்றும் வழமைபோல் கணினி பற்றிய அறிவை வளம்படுத்தும் நோக்கில் சில விடயங்களைப் பற்றிக் கவனித்தோம். தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரியப்படுத்துங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்...



**- அகணி -**
authorakani@yahoo.com

**கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா**
**KOKUVIL HINDU COLLEGE OLD STUDENTS ASSOCIATION (CANADA)**

வருடாந்த தமிழ்மொழிக் கல்விசார் போட்டிகள் - 2014
*Educational Contest in Tamil Language – Year 2014*

கொக்குவில் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் - கனடா நடத்தும் வருடாந்தத் தமிழ்மொழிக் கல்விசார் போட்டிகள்.
இப்போட்டிகள் யாவும் கனடாவாழ் அனைத்துத் தமிழ் மாணவர்களும் பங்குபற்றும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டு உள்ளன.

இடம்: *SAI CENTRE, 5321 Finch Ave East, Scarborough, Ontario, M1S 5W2*

காலம்: பங்குனி 08, 2014 - சனிக்கிழமை, காலை 9.00 மணி
(***Saturday, March 8, 2014 – 9:00 a.m.***) போட்டிகளுக்கான வயதெல்லை 06, 09, 12, 15, 18 வயதுக்கு உட்பட்டோர் பிரிவுகளாக ஒழுங்கமைத்து நடத்தப்படும்.

ஒரு போட்டிக்கான கட்டணம் ஐந்து ($5) டொலர்கள்.

விண்ணப்ப முடிவுத் திகதி பங்குனி 01, 2014 (***Saturday. March 01, 2014***)

சகல வயதுப் பிரிவினருக்குமான போட்டிகள் யாவும் காலை 9:00 மணிக்கு ஆரம்பமாகும்.
மேலதிக விபரங்களையும், விண்ணப்பப் படிவங்களையும் பெற்றுக்கொள்ள :-

| | | |
|---|---|---|
| திரு. ந. நாகேஸ்வரன் | 416-299-6645 | மின்னஞ்சல்: nada.nages@gmail.com |
| திரு. நா. பாலகுமார் | 416-321-5522 | மின்னஞ்சல்: balashanthini@hotmail.com |
| திருமதி சி. நாமகள்தேவி | 416-283-1439 | மின்னஞ்சல்: namagalx5@gmail.com |
| திருமதி ப. ஜெயலோஜினி | 416-287-8164 | |

நிறுவனங்கள்:
***VLAMBARAM - GTA Square, # 201, 5215 Finch Ave East. – (416)282-8059***
***BREAD MASTER BAKERY - Unit #B3, 31 Tapscott Road (Malvern Mall*** பின்புறமாக)
விண்ணப்பங்களை தொலைநகல் மூலம் அனுப்ப Fax: 416-267-6864

TBC Toronto Business College



SECOND CAREER

WHO IS ELEGIBLE?

- RECEIVING EI
- LAID OFF AFTER 2005
- RECEIVED MATERNITY / PARENTAL DURING LAST FIVE YEARS
- WORKING LESS THAN 19 HOURS PER WEEK

Those qualify will receive free funding upto $28000 to cover the following

- Living Expense
- Daycare
- Tuition Fees
- Books
- Transportation

DIPLOMA PROGRAMS

Accounting & Payroll (35 weeks) March 3rd.

Business Administration (26 Weeks)

Computerized Accounting (26 weeks) March 3rd.

Medical Office Adminstrator (32 weeks)

Personal Support Worker (26 weeks) March 3rd.

Certificate Courses

Windows, Word, Excel, PPT, Access
Quick Books, Simply Accounting, Accpac
Food Handler Certification
First Aid & CPR
Canadian Securities Course
Online Stock & Forex Trading

Career Colleges Ontario

416 - 291 - 5155

4465 Sheppard Ave. East # 208
( Sheppard & Brimley) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005

# கலைச்சொற்கோவை

## தமிழ்ச் சொற்கோவைக் குழாம்

### TAMIL GLOSSARY PANEL

ttgpinterlators@gmail.com

| | | |
|---|---|---|
| MEDIA | = | ஊடகம் |
| book review | = | நூல்-மீள்நோக்கு |
| breaking news | = | புதிய செய்தி |
| bulletin | = | செய்தியறிக்கை |
| cable TV connection | = | வடத் தொலைக்காட்சி இணைப்பு |
| caption of a cartoon | = | கேலிச்சித்திர இணைகூற்று |
| caption of an article | = | கட்டுரைத் தலைப்பு |
| cellular phone | = | செல்பேசி |
| close caption | = | தொலைக்காட்சி இணைகூற்று |
| columnist | = | பத்தியாளர் |
| correspondent = reporter | = | நிருபர் |
| English monthly | = | ஆங்கில மாசிகை |
| entertainment show | = | கேளிக்கைக் காட்சி (நிகழ்ச்சி) |
| French weekly | = | பிரெஞ்சுக் கிழமையேடு |
| internet service | = | இணைய சேவை |
| latest information | = | பிந்திய தகவல் |
| literary magazine | = | இலக்கிய சஞ்சிகை |
| live telecast | = | நேரடி ஒளிபரப்பு |
| media | = | ஊடகங்கள் |
| media coverage | = | ஊடக பிரசித்தம் |
| medium | = | ஊடகம் |
| message by e-mail | = | மின்னஞ்சல்-செய்தி |
| news conference | = | செய்தியாளர் மாநாடு |
| news source | = | செய்தியின் தோற்றுவாய் = செய்தி தெரிவித்த தரப்பு |
| newspaper circulation | = | செய்தித்தாள் விற்பனை |
| newspaper column | = | செய்தித்தாள்-பத்தி |
| newspaper distribution | = | செய்தித்தாள் விநியோகம் |
| newspaper publication | = | செய்தித்தாள் வெளியீடு |
| newspaper stand | = | செய்தித்தாள் தாங்கி |
| press release | = | ஊடகங்களுக்கான கூற்று |
| quarterly | = | காலாண்டிதழ் |
| readership | = | வாசகர்தொகை |
| reporter = correspondent | = | நிருபர் |
| Tamil daily | = | தமிழ் நாளேடு (நாளிகை) |
| telecommunication | = | தொலைத்தொடர்பு |
| teleconference | = | தொலைபேசி மூலம் கூட்டுரையாடல் |
| telegram | = | தந்தி |
| telegraph | = | தந்தித்தொடர்பு |
| telegraphy | = | தந்தித்துறை |
| telemarketer | = | தொலைபேசி மூல விற்பனையாளர் |
| telemarketing = telesales | = | தொலைபேசி மூல விற்பனை |
| telemetry | = | தொலைக்கணிப்பு |
| telephone | = | தொலைபேசி |
| telephone booth | = | தொலைபேசிக் கூடம் |
| telephone box (kiosk) | = | தொலைபேசிக் கூண்டு |
| telephone directory | = | தொலைபேசி விபரக்கொத்து |
| telephone tapping | = | தொலைபேசி ஒற்றுக்கேட்டல் |
| telephonist = operator | = | தொலைபேசி இயக்குநர் |
| teleprinter = teletypewriter | = | தொலையச்சுப்பொறி |
| television channel | = | தொலைக்காட்சி அலைவழி |
| television network | = | தொலைக்காட்சி வலையம் |
| telex message | = | தொலைப் பரிமாற்றச் செய்தி |
| video phone | = | காட்சித் தொலைபேசி |
| walkie-talkie | = | செல்கைப்பேசி |

# சுவர்க்கமும் நரகமும் - பாவ, புண்ணியங்களின் பலாபலன்கள்

## கடந்த இதழ் தொடர்ச்சி

சுவர்க்கமும், நரகமும் ஒரு கற்பனா உலகச் சஞ்சரிப்பா என்றே எண்ணத் தோன்று கின்றது. காரணம் எல்லா மதங்களும் சுவர்க்கம், நரகம் பற்றி கூறுவதெல்லாம் பலப்பல வேறுபாடுகள் உள்ளசளன போல் தோன்றுகிறது. அவற்றின் வருணனைகள் எல்லாமே மாறுபாடாக உள்ளன. மனித ஜாதியின் சுகதுக்கங்கள் பற்றியதாகவும், சரித்திரகால, தேச சூழ்நிலைக்கேற்ப அவை விபரிக்கப்பட்டுள்ளன. உடலிலிருந்து உயிர் பிரிந்தாலும் மூலப் பொருட்களான கார்பன், பிராணவாயு, கரியமிலவாயு, பொஸ்பரஸ் போன்றவை அழிவதில்லை. மரணத்தின் பின் வாழ்வு, சுவர்க்கம், நரகம், முக்தி எல்லாம் எப்படி ஏற்படுகின்ற தென்பதற்கு விஞ்ஞான ரீதியான விளக்கங்கள் இல்லை. மக்கள் எல்லோரும் தாம் அழியக்கூடாது என்பதால் மறுபிறவி எடுத்து வாழ்ந்து இறுதியில் மோட்சம் அடைவோம் என ஆசை கொண்டவர்களாக இருந்துள்ளனர். மனித இனம் காலம் காலமாக தமது விருப்பத்திற்கு ஏற்ப வகுத்த கற்பனை உலகங்களே இவைபோல தெரிகிறது.

இந்து மதம் மனிதன் என்பவன், உடல், உயிர், ஆன்மா என்ற மூன்று பொருட்களால் ஆனவன் என்கிறது. எல்லா உயிர்களிலும் ஆன்மா உள்ளது. அது செய்த நன்மை தீமைகளுக்கு ஏற்பவே சுவர்க்கம் நரகம் ஏற்படுகிறதென்பதனை அழுத்தமாக கூறுகிறது' என்றும், சுவர்க்கமும் நரகமும் எவ்வாறு உள்ளதென்பதில் வேறுபாடுகளை கொண்டுள்ளனர். மனித இனத்தினை நல் வழிப்படுத்தும் நோக்கத்திலும், சுபீட்சமடை யும் நோக்கிலும் எழுந்த போதனை களாகவே இதனை கொள்ள முடிகிறது. நரகத்திற்கு செல்ல எவரும் விரும்புவ தில்லை. எல்லோரும் சுவர்க்கம் செல்லவே விரும்புவர். மறுபிறப்பு என்பதனையே விஞ்ஞானம் மறுகின்றவேளையில் சுவர்க்கம் கூற முடியாதுள்ளது.

மனித வாழ்க்கையின் இறுதியில் வயதாகி போவதால் ஏற்படும் சோகத்தையும் கஷ்டங் களையும் சமாளிக்க சுவர்க்கம் என்ற மறுகோடி பிரகாசம் தேவைப்பட்டிருக்கும். இறப்புக்கு பிறகு மனிதன் காணாமல் போய்விட விரும்பவில்லை. சௌகரியமாக வாழ்வதற்கே சுவர்க்கம் படைக்கப் பட்டுள்ளது போல் தெரிகிறது.

மோட்சம் அடைய எவற்றை செய்ய வேண்டும் என வேதங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள், மதபோதனைகள் கூறும் எல்லாவற்றினையும் மனிதன் பின்பற்றி வருகின்றான். எல்லாரும் சுவர்க்கம் அடைய விரும்புவதே இயல்பு. 'மதச்சட்டத்தினை மீறுகிறவனும் நரகம் கிடைக்கும்' போன்ற பல போதனைகள் உள. சாதாரணமாக வானவெளிப்படத்தில் இதுதான் நரக உலகம், இதுதான் சொர்க்க உலகம் என்று கோடுகள் இடப்படவில்லை. விஞ்ஞான வளர்ச்சியால் எல்லா வளிமண்டலங்களை யும் செய்மதிகள் ஊடுருவி செல்கின்றன. நிலத்தில் உள்ள சமய பேதங்கள் விண்வெளியில் இல்லை. எல்லாமே பேரண்டம் தான், ஏகாந்த வெளிதான். இந்த கருத்தினை நிலைகுலையச் செய்வது பொழுது போக்கு சினிமாக்களும், கதை களும் தான். நூற்றுக்கணக்கான கற்பனை உலகினை திரைப்படங்களாக தயாரித்து சினிமா உலகம் பணம் சம்பாதிக்கிறது. அதேபோல் சுவர்க்கம் நரகம் பற்றி பல நூல்களும் திரைப்படங்களும் வெளிவந்த வண்ணமுள்ளன. இவற்றையெல்லாம் தாம் நேரே கண்டதினை போல் தண்டனை யுலகினை படைத்து எல்லோர் மனதையும் இறுகப்பண்ணியுள்ளனர். பகுத்தறிவு, விஞ்ஞானம், பௌதீகம் வானவியல் கல்வி, கற்றவர்கள் கூட இப்பெரும்பான்மையினர் களின் முன்னே தோல்வி அடைந்துள்ளனர்.

பொதுவாக பாவம் எது? புண்ணியம் எது? என்று கண்டு பிடிப்பதே சிரமமாக உள்ளது. குறுக்குவழியில் பணம் சம்பாதித்து அன்ன தானம் செய்பவர் புண்ணியம் செய்கிறாரா அல்லது வயிற்றுப் பசிக்காக திருடுபவர் பாவம் செய்கிறனரா என்பதே கேள்விக்குறியதாக உள்ளது. களவுக்காக செல்பவனும் கடவுளிடம் தனக்கு ஆபத்து வரக் கூடாது என பிரார்த்திக்கின்றான். பரீட்சைக்கு செல்வரும் கடவுளிடம் தான் சித்தியடைய வேண்டுமென்கிறான். இந்து மதத்தில் வேட்டையாடுதல் பாவமானது. ஆனால் வேடனுக்கு தொழிலே அதுதான். போர்க்களத்தில் வீரன் எதிரிகளை கொல்வது பாவமில்லை. ஆனால் அவன் சாதாரண மனிதனை கொன்றால் அது பாவம். 'Holy war' என்ற புனித யுத்தம் செய்பவர்களும் உலகில் இருக்கவே செய்கின்றனர். விலங்குகளை பலியிட்டு பல கோரிக்கைகளை வைப்பவர்களும் உள்ளனர்.

மதரீதியான கோட்பாடுகளால் கூட பாவ புண்ணியங்களை மதிப்பீடு செய்ய முடிய வில்லை. ஒருவனுக்கு ஒருத்தி என்கிறது இந்துமதம். ஆனால் இஸ்லாமியத்தில் பல மனைவிகள் இருக்கலாம். அது மட்டுமல்ல, பசுவை உண்ணலாம், வட்டி வாங்கக் கூடாது. பன்றி இறைச்சியை உண்ணக் கூடாது. மாமிசங்களை ஹலால் முறையில் ஓதி சமைக்க வேண்டும். ஆனால் சமண சமயத்தில் பசுவை உண்ணக் கூடாது. ஆனால் பன்றியை உண்ணலாம். இந்து மதத்தில் பசுவை உண்ணக்கூடாது. ஆனால் பன்றியை உண்ணலாம். இப்படி பல வேறுபாடுகள் உள.

இந்து சமயத்தில் பல உருவங்களை வழிபடலாம். ஆனால் இஸ்லாமிய மதத்தில் உருவவழிபாடு இல்லை. பொதுவாக கிறிஸ்வர்கள், சிலுவை அணிய, முஸ்லீம்கள் குல்லா அணிவர். இந்துக்கள் விபூதி அணிவர். வைணவ சமயத்தினர் நாமம் போடுவர். காளியம்மனை வழிபடுப வர் மஞ்சள் குங்குமம் பூச வேண்டும். இப்படியான பல்வேறு நம்பிக்கைகளும் சடங்குகளும் உள்ளன. திருமண முறையில் வேறுவேறு சட்டங்கள். இறப்பின் போது கிரியை செய்வதிலும் வேறுபாடான சட்டங்கள் உள. நாம் செய்கின்ற ஒரு செயல் ஒரு மதப்படி பாவம் என்பதனையும் இன்னொரு மதத்தில் மதக் கருத்துப்படி புண்ணியம் எனவும் கூறப்படுகிறது.

இந்து சமயத்தில் பல தானங்களும் உள. கோ (பசு, அன்னதானம் போன்ற 32க்கும் மேற்பட்ட தானங்கள் உள. இதேவேளை யில் இஸ்லாமிய சமயத்தில் வருட வருமானத்தில் செலவு போக மிகுதி சொத்தில் 40 வீதம் பிச்சையாக, பணமாக, உணவாக உடுபுடவையாக வழங்க வேண்டும் என்ற முறை உள்ளது. அதே போன்று கிறிஸ்தவ மதத்திலும் தருமம் கொடுப்பது முக்கியமானதாகும். பொதுவாக எல்லா மதங்களும் தருமம் செய்யாதவன் நரகம் செல்வான் என்கின்றன. எனினும் மோட்ச நரக உலகங்களைப் பற்றி வலியுறுத்தும் மதங்கள் அந்த உலகங்கள் எப்படியானவை என்று கூறவில்லை. ஏழு பிறப்புக்களையும், ஏழு வருடங்களையும் இந்து மதம் கொண்டுள்ளது.



சில ஆன்மீக வாதிகள் மோட்சம், நரகம் என்பதெல்லாம் இந்த பிறப்பிலேயே உள்ளது என்கின்றனர். அதாவது சுகமான-வாழ்வு வாழுபவன் சுவர்க்க உலகத்திலும் துன்ப வாழ்வு வாழ்பவன் நரகத்திலும் உள்ளான் என குறிப்பிடுவர். உலக மதங்கள் அனைத்தும் மோட்சம், நரகங் களை கடவுள் படைத்ததின் நோக்கமே மனிதர்கள் செய்யும் பாவ புண்ணியங்களுக் கேற்ப அவர்களின் ஆன்மாவுக்கு தண்டனை அளிக்கவே என்றும் குறிப்பிடுகின்றன.

தற்போது மரணப்படுக்கையில் உள்ளவர்கள் கூட நரகம் சுவர்க்கம் ஆகிய இடங்களுக்கு சென்று வந்துள்ளதாக கூறுகின்றனர். இவை அவர்களைப் பொறுத்தவரை உண்மை நிகழ்வுகளாக இருக்கலாம். ஏனெனில், வாழும் போது நரகம், சொர்க்கம் பற்றிய கற்பனை உலகில் வாழ்ந்தமையால் இறுதி யில் இக்காட்சி வந்து போவது தவிர்க்க முடியாததொன்றாகும். மரணப் படுக்கையில் ஏற்படும் மனப்பிரமையே இதுவாகும். விபத்து, இதயத்தாக்கம், மின்சார அதிர்ச்சி போன்றவை ஏற்பட்டு நினைவிழந்து மீண்டவர்களும் இந்த 'மரண அனுபவம்' (The new death experience) பற்றி கூறுகின்றனர். மிருகங்களுக்கும் ஆன்மா உள்ளதென வாதித்திடுவோரும் உளர்.



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**




# உடல் எடை கூடுவதன் காரணங்கள், தீர்வுகள்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

நமது நவீன வாழ்க்கையில் எவ்வளவோ வசதிகள் வந்துவிட்டன. வசதிகள் பெருகப்பெருக உடல் உழைப்பு குறைகிறது. ஆனால் பசி மட்டும் குறைவதில்லை. உணவுக்கேற்ற உழைப்பு குறைந்து விடுகிறது. அது ஒருபுறமிருக்க நாகரிகம் முதல் பொருளாதார நிலையும் கூடும்போது ருசியான அதிக சத்துள்ள உணவுகள் தயாரிக்கப்படுகின்றன. அவற்றுடன் ஐஸ்கிரீம் மற்றும் குளிர்பானங்கள் போன்றவற்றை உண்பதால் உடலின் தசைகள் வளர்ச்சியடைகின்றன. இதனால் உடல் பருமல் கூடிவிடுகிறது. சில குடும்பங்களின் பழக்க வழக்கம் காரணமாக குடும்பத்திலுள்ள அனைவரும் அதிகம் உண்பர்.

### உடற்பயிற்சியும் உடல் எடையும்

உடல் பயிற்சிகள் செய்வதால் அதிக கலோரிகள் எரிக்கப்படுகின்றன. அதை ஈடுசெய்ய அதிகம் உண்பர். தொடர்ந்து பயிற்சி செய்தால் கலோரிகள் செலவிடப்பட்டு சமப்பட்டுவிடும். உண்ணும் உணவின் அளவைக் குறைக்க மாட்டார்கள். அதனால் விரைவில் உடல் எடை கணிசமான அளவு அதிகரிக்கும்.

### பகல் தூக்கமும் உடல் எடையும்

பலர் பகலில் உணவு உண்டதும் 1 மணிநேரம் முதல் 3 மணி நேரம்வரை தூங்கி எழுவர். குறிப்பாக பெண்கள், வீட்டுவேலை செய்யும் தொழிலாளர்கள், நோயாளிகள், சொந்த தொழில் செய்பவர்கள் போன்றோர் பகலில் படுத்து உறங்கும் பழக்கம் உள்ளவர்களாகவே இருப்பர். பகலில் உறங்கினால் 16 வகையான வாத நோய்கள் ஏற்படும் என்கின்றது சித்த மருத்துவம்.

1. பகல் உணவு உண்டதும் ஓடுவதும், விரைவாக நடப்பதும், படுத்து உறங்குவதும் கூடாது.

2. பகலில் தூங்குவது ஒரு தீயபழக்கம். இதனால் நேரம் வீணாவதோடு பித்தம், அஜீரணம், சோம்பேறித்தனம் போன்றவை உண்டாவதோடு வாழ்நாளும் குறைகிறது.

3. **'பகல் உறக்கம் என்பது மரணத்தின் ஒத்திகை'** என்பது ஒரு மருத்துவப் பழமொழி. காரணம் படுக்கும் போது தலைப்பகுதிக்கு அதிகரத்தம் வருவதுடன் வயிற்றுப் பகுதிக்கு ரத்த ஓட்டம் குறைவதால் ஜீரணம் பாதிப்படைந்து அதிகமான சுரப்பு நீர் சுரக்க வேண்டியுள்ளது. அவை உணவைப்




புளிக்க வைத்து இரத்தத்துடன் கலக்கின்றன. இதனால் உடலில் வாதம் மிகுந்து உடல் எடை கூடுகிறது.

### கோப்பி, தேநீர் அதிகம் பருகுவதும் - உடல் எடையும்

எம்மில் பலர் அடிக்கடி கோப்பி, தேநீர் போன்றவற்றை உட்கொள்ளும் பழக்கமுள்ளவர்கள். இவர்களுக்கு பசி உணர்வு குறையும். பொதுவாக காப்பியிலுள்ள காபின் என்ற விஷச்சத்தும் தேநீரிலுள்ள ரிக்கோடின் என்ற இரசாயனப் பொருளும் இரத்தத்தில் கலந்து உடல் எடையைக் கூட்டுவதோடு மயக்கத்தையும் கொடுக்கும்.

### மதுப்பழக்கமும் - உடல் எடையும்

மதுவகைகளைக் குடிப்பதால் உடல் எடை கூடுவதில்லை. ஆனால் மது உண்டதும் அவர்கள் உண்ணும் உணவின் அளவு, அதிகம் கொழுப்பு, காரமுள்ள உணவுகள் என்பன உடல் எடையைக் கூட்டும். குடித்ததும் மதுவில் உள்ள சத்து உடன் இரத்தத்தில் கலந்து மூளையிலுள்ள நரம்புகளைப் பலயீனப்படுத்துகின்றன. அதனால் பசி உணர்ச்சியின் அளவு தெரியாமல் அதிகமாக உண்பர். நாளடைவில் எடையும் தொந்தியும் அதிகரிக்கும்.

### மலச்சிக்கலும் - உடல் எடையும்

மலச்சிக்கலானது ஒருவருக்குத் தொடர்ந்து ஏற்படுமேயானால் மலத்திலுள்ள நீர்ப் பொருளானது உள்வாங்கப்பட்டு இரத்தத்துடன் கலந்து நாளடைவில் ஊளச்சதையை வயிற்றுப் பகுதியில் மற்றும் தொடைப்பகுதியில் உருவாக்குகின்றது. அத்துடன் வாய் துர்நாற்றம் வீசுவதற்கும் இது ஒரு காரணமாகின்றது.

### இதன் தீர்வுகள்

மேற்கூறப்பட்ட காரணங்களிலிருந்து பலவற்றைப் புரிந்து கொள்ள முடியும்.

1. யோகாசனம் மற்றும் உடற்பயிற்சிகளை தினமும் குறைந்தது அரை மணி நேரமானது செய்துவர வேண்டும்.

2. கொழுப்பு அதிகமுள்ள உணவுகளைக் குறைப்பதுடன் பச்சைக் காய்கறிகள் கீரைவகைகளை உணவில் அதிகம் சேர்க்க வேண்டும்.

3. ஒரே தடவையில் அதிகமான உணவு உட்கொள்வதைத் தவிர்த்து சிறிதளவாக இடையிடையே உட்கொள்வது சிறந்தது.

4. இரவு உணவை மாலை 7:00 மணிக்குமுன் உட்கொள்ள வேண்டும்.

5. மலச்சிக்கல் வராது பார்த்துக் கொள்ள வேண்டும்.

6. பசி எடுக்காத நேரத்தில் உண்ணலாகாது.

7. பகல் தூக்கத்தைத் தவிர்க்கவும்.

8. நொறுக்குத் தீன் பண்டங்களை அடிக்கடி உண்பதைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

9. மாதம் ஒரு நாள் உபவாசம் இருப்பது நல்லது.

10. வாயுவை உருவாக்கும் கிழங்கு வகைகள், மாப்பண்டங்களை உண்பதை முடிந்தவரை குறைக்கவும்.



ஆரோக்கிய வாழ்வு
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721


NIRMALA'S CAKE & BRIDAL CREATION



BRIMLEY & STEELES
BIRCHMOUNT & FINCH

• Bridal Dressing
• Hair dressing.
• Cakes for all occasions

Wedding Cake, Birthday Cake, Baby Shower Cake, Chocolate cake.
All kinds of cake for all occasions.

• Bridal dressing & Make up Hair Styles
• Hair styles.
• Threading, facials.
• Waxing, Manicure, pedicure.
• Head Massage



Contact: 647.448.0281

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
CHEMISTRY, PHYSICS, BIOLOGY
FUNCTIONS, ADV. FUNCTIONS
CALCULUS & VECTORS, DATA MGT
SCIENCE, MATH, ENGLISH, FRENCH
Individual & Small Group classes, Individual care
GR 1-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
SPECIAL CLASSES FOR
PRE-UNIVERSITY
MCAT EXAM
IB & AP program
SUMMER CLASSES "July- August"
REGULAR CLASSES "Throughout the year"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com

# சிலர் குழந்தையின்றித் தவிப்பது ஏன்?

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

சரியான வயதாகித் திருமணம் ஆன குடும்பத்தவருக்கு குழந்தைச் செல்வம் உரிய காலத்தில் கிடைக்காமல் இருப்பதற்கு என்ன காரணம்? குறைபாடு என்பதை ஓரளவு அறிந்திருந்தால் நிவர்த்தி பெற வழியமைக்கும். பொதுவாக திருமணத்தின் பின்னர் ஒரு வருட காலத்திற்குள் கரு உருவாகி குழந்தை யைப் பெற்றெடுக்க முடியும். இருவரும் உறவாடி குழந்தையைப் பெற்றெடுக்க முடியாதவர்கள் தாமதியாமல் தங்கள் மருத்துவரை கண்டு விபரங்களை மறை வின்றிக் கூறிச் சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும் பெண்ணுக்கு வயது ஏறக்குறைய 30 வயதிற்கு மேற்பட்டிருப்பின் அல்லது மாதவிடாய் ஒழுங்கீனமாக இருந்தாலும் மருத்துவர்களைச் சந்திக்காமல் இருந்து விடக்கூடாது.

பெண்கள் கருத்தரிக்காமல் இருப்பதற்கு பெண்கள் மாத்திரம் அல்ல ஆண்களும் ஆளாகலாம். ஆதலினால் இருவரும் மருத்துவரிடம் சென்று அதற்குரிய பரிசோதனையை முக்கியமாகச் செய்தாக வேண்டும். குழந்தை தங்களுக்கு இல்லா திருப்பதற்கு ½ பங்கு ஆண்களும், ½ பங்கு பெண்களும், இறுதி ½ பங்கு இருவருமாக இருக்கலாம். எனவே தாங்கள் இருவரும் மருத்துவரிடம் சென்று பரீட்சித்து தகுந்த ஆலோசனைகளைப் பெற வேண்டும்.

சில ஆண்கள் தாங்கள் திருப்தியாக உடலுறவு கொள்ளக் கூடிய நிலையில் இருக்கும்போது ஏன் மருத்துவரிடம் செல்ல வேண்டும் என பேசிக் கொள்வோரும் உளர். தன்னை ஒரு ஆண்மையற்றவர் என மற்றோர் நினைப்பார் எனவும் மறுப்பது உண்டு. எனவே மற்றோருக்காக நமது குழந்தைச் செல்வத்தை இழக்காமல் இருவரும் முக்கியமாக மருத்துவரிடம் சென்று பரிசோசித்து தகுந்த ஆலோசனை களைப் பெறவேண்டும்.

ஒரு ஆணுக்கு இனப்பெருக்கத்தன்மையற்ற நிலை (Impotence) என்பதும் ஆண் மலட்டுத்தன்மை என்பதும் ஒன்று அல்ல என்பதையும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். சிலர் கருதுவதுண்டு ஆண்விந் தானது உரிய இடத்திற்கு சரியான அளவு செல்லவில்லை. இதனால் தான் கரு உற்பத்தியாகவில்லை என, இது தவறாகும். விந்தில் ஒரு துளியில் கூட கருவாக முடியும். கருவடைவதற்குப் பெண்களின் கருப்பாதை விந்து முழுவதை யும் சேமித்து வைத்திருந்து கருவை உற்பத்தியாக்கின்றது எனக் கருதல் வேண்டாம். எனவே ஒரு துளி விந்தில் கருவாகி குழந்தைச் செல்வதைப் பெற்றெடுக்க முடியும்.

இப்படிக் கூறுவது ஏன் என்றால் விந்தில் கோடிக்கணக்கான விந்து Sperms அணுக்கள் செறிந்து காணப்படுகின்றது. ஆனால் இவற்றில் ஒன்று மட்டும் கருத்தரிப் பதற்கு போதுமானதாகும். ஒன்றை மட்டும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். அதாவது உறவின் பின் உடனடியாக எழுந்து கொள்வதை தவிர்க்க வேண்டும். தாமதமாகி எழுவது மிக நன்மை பயக்கும்.

சூலகத்தில் இருந்து சூல் மாதவிடாய் களுக்கு இடைப்பட்ட நடுப்பகுதியில் அதாவது 14ஆம் நாள் அளவில் வெளியேறுகின்றது என்பது ஆராய்ச்சியாள ரின் முடிவாகும். உறவு என்பது இருவரின் விருப்பத்தின் பேரில் நடைபெற்றாலும்



தங்கள் மருத்துவர் என்ன கூறுகின்றாரோ? அதன்படி மேற்கொள்வது நன்று.

ஆண், பெண் இருவரும் உறவு கொண்ட பின் ஆணின் விந்து அணுவானது கருப்பை பாதையில் ஏறக்குறைய 48-72 மணித்தியாலம் உயிருடன் இருக்கும் என அறிய முடிகின்றது. எனவே நாட்களைக் கணக்கெடுப்பதில் அக்கறை எடுக்க வேண்டியதில்லை.

மேலும் பெண்களில் கரு தங்காமல் இருப்பதற்கு பலகாரணங்கள் இருக்கலாம். அதாவது சூலகத்தில் இருந்து சூல் ஒழுங்காக வெளியேறாமல் இருக்கலாம்.

மேலும் வெளியேறிய சூல், சூலகக்கானின் புனலுரு கருப்பை குழாய் ஊடாக செல்வதில் தடையிருக்கலாம். உதாரண மாக சிலருக்கு இயற்கையிலேயே கருப்பை குழாய் பெரிதாகவோ அல்லது சிறிதாகவோ அல்லது மடிந்தோ இருப்பதால் கரும் தரிக்காமல் இருக்கின்றது. மேலும் காசரோகத்தினால் அல்லது பாலியல் நோயினால் தடை ஏற்படலாம். அல்லது கருப்பையில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம். எனவே காரணங்களைப் பல ஆய்வுகள் செய்து நிச்சயிக்க வேண்டியுள்ளது. எதற்கும் மருத்துவர்களின் உதவி முக்கியமாகும். அத்துடன் கருப்பை, கருப்பை குழாய், சூலகம் யாவும் மாற்றம் இன்றி இயல்பாக இருக்கின்றனவா? அல்லது ஒழுங்காக இயங்குகின்றதா? என்பதை மருத்துவர் மயக்க மருந்து கொடுத்து பரிசோதிப் பதைத்தான் சிலர் வயிறுகழுவுதல் எனக் கூறுகின்றார்கள். இதனால் எந்தவகை துன்பமோ அல்லது ஆபத்தோ நிகழ்வ தில்லை என அறிய முடிகின்றது.

எனவே குறைபாடு இருந்தால் அவற்றைக் கண்டு பிடித்து நிவிர்த்திக்க உதவியாக இருக்கும் என்பதை ஞாபகத்தில் வைத்து மருத்துவ உதவி முக்கியமானது எனக்கருத்தில் கொள்ள வேண்டும்.

பெண்களைப் பற்றிக் கூறினாலும், ஆண்களையும் சரியாகப் பார்க்க வேண்டும். இவர்களிலும் குறைபாடு இருக்கலாம். அவர்களின் உறுப்பைக் கவனிப்பதுடன் அவரையும் ஆய்வு கூடத்தில் பரிசோதிப்பர். பரிசோதிக்கும் போது சுக்கிலத்தில் உள்ள விந்தணுக்களின் எண்ணிக்கை, அவற்றில் இயங்க முடியாத அணுக்களின் எண்ணிக்கை, வழமைக்கு மாறான உருவநிலை என்பவற்றை மிக நுட்பமாகப் பரிசோதிப்பர்.

ஒரு கன செ.மீ சுக்கிலத்தில் உள்ள விந்து அணுக்களின் எண்ணிக்கை 20 மில்லியனுக்கு குறைவாக இருந்தால் அல்லது சரியாக இயங்க முடியாத விந்து அணுக்களின் எண்ணிக்கை 50% க்கு குறைவாக இருந்தால் வழமைக்கு மாறான உருவவியலைக் கொண்டு விந்து அணுக்களின் எண்ணிக்கை 35%க்கு அதிகரித்து இருந்தால் கருத்தரிப்பதற்கான வாய்ப்பு குறைவாகும் எனவும் கூறப்படுகின்றது. எனவே இத்தன்மையான குறைபாட்டினை நீக்குவதற்கு தங்கள் மருத்துவரின் ஆலோசனைகளைக் கேட்டு அதன்படி நடந்து கொள்ளவும்.

தங்கள் மருத்துவர் கூறுவது நோய்க்கு ஏற்ப மருத்துவமாகவோ, ஆலோசனையாகவோ அல்லது சிறிய அறுவை சிகிச்சையாகவோ இருக்கலாம். அதன்படி ஏற்று நடந்து கொள்வது தங்களைப் பொறுத்ததாகும். இதை இட்டு அதிர்ச்சியோ அன்றி கவலையோ படத் தேவையில்லை.

தங்களுக்கு கரு உருவாகி குழந்தைச் செல்வத்தைப் பெற்று குடும்பத்தில் சந்தோஷமாக கலகலப்பாக வாழ வேண்டும் என கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இத்துறை சார்ந்த வைத்தியமுறையால் பலர் கருவாகி குழந்தைகளைப் பெற்று சந்தோஷமாக வாழுகின்றார்கள். தற்காலத்தில் பரிசோதனை குழாய் குழந்தை (Test Tube Baby) என்ற (In vitro fertilization (IVF) முறை வளர்ந்து வருவதை நாம் அறியக்கூடியதாக உள்ளது.

எனவே தயவு செய்து தயங்காமல், பயப்படாமல், தாமதிக்காமல் தங்கள் மருத்துவர்களை நாடிச் சென்று குழந்தைச் செல்வத்தை பெற்றுக்கொள்ள வழியமைத்துக் கொள்ளுங்கள். மேலும் நோய்நிலை, மற்றும் மருத்துவநிலை அறிந்து கொள்ள மருத்துவ நூல் விளம்பரம் பத்திரிகை அலுவலகத்தில் உண்டு பெற்றுக் கொள்ளவும்.


வைத்திய கலாநிதி

**கே.ரி. கோபால்**



D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 647.456.9796



**AUM WELLNESS CLINIC IN**

Healing Massage, Suffering From Pain?

Get Relief From:

| | | |
|---|---|---|
| முதுகுவலி | கழுத்துவலி | தோள்பட்டைவலி |
| முழங்கால் வலிகள் | தீராததலைவலி | நரம்புப்பிடிப்பு |
| நீரிழிவு | தூக்கமின்மை | கொலஸ்ரோல் |
| உடல் எடை குறைத்தல் | இரத்த ஓட்டத்தை | சீராக்குதல் |

**போன்றவற்றிற்கு இவரை நாடுங்கள்**

Dr. Lata

Based on Appointment



Cell: 416.890.9217 Office: 647.304.6046
5215 Finch Ave. E. #220, Toronto, ON

# மௌனித்து வாழும் ஒளி ஓவியன்

இன்று காலை முகநூலை தரிசித்த பொழுது எனது கண்களில் தென்பட்ட முதல் முகமே இயக்குனர் பாலுமகேந்திராவின் திடீர் மரணச் செய்தியாகும். 'தலைமுறைகள்' படத்தைத் தொடர்ந்து மேலும் சில படங்களை தருவார் என்ற நம்பிக்கையுடன் காத்திருந்த சீரிய சினிமா ஆர்வலர்களுக்கு இச்செய்தி அதிர்ச்சியானதாகும். மட்டக்களப்பில் இருந்து இந்தியா சென்று பூனே திரைப்படக் கல்லூரியில் கல்வி கற்று மலையாளப் படங்கள் பலவற்றில் ஒளிப்பதிவாளராகி கன்னடப் படமான கோகிலாவை நெறியாள்கை செய்து பின்னர் தனது தாய் மொழியான தமிழ்ப் படங்கள் பலவற்றை இயக்கியிருந்தார்.

தமிழ்ப்பட உலகை நாடகவசனங்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருந்த கால கட்டத்தில் (இப்படங்களை வானொலியில் வானொலி நாடகம் போல் கேட்டுக் கொண்டிருந்த காலம்) திரையில் வசனங்களற்று காட்சிகளை அமைத்து தமிழ்த் திரைமொழிக்கு உயிர்ப்பூட்டினார். இவரது சிறந்த ஒளிப்பதிவுக்கு முள்ளும் மலரும், சங்கராபரணம், நெல்லு மற்றும் இவர் இயக்கிய படங்களும் சான்றாகும். இவர் இயக்கிய படங்களில் சில தமிழ்த் திரை உலகை சர்வதேச தரத்திற்கு உயர்த்தியது என்று சொன்னால் மிகையாகாது. தமிழில் இதுவரை வெளிவந்த படங்களில் மிகச் சிறந்த ஐந்து படங்களில் இவர் இயக்கிய வீடு, சந்தியாராகம் ஆகிய படங்களும் உள்ளடங்கும். இவர் இயக்கிய குறிப்பிடத் தக்க படங்கள் மூன்றாம் பிறை, யாத்ரா, ஓளங்கள், மூடுபனி, அழியாத கோலங்கள், மறுபடியும் போன்றவற்றை குறிப்பிடலாம். இவற்றுள் மறுபடியும் ஹந்தியில் மகேஷ் பட் இயக்கிய அந்தப்படத்தை தழுவி எடுக்கப் பட்டது. அதேபோல் அழியாத கோலங்கள் ரொபர்ட் முலிகன் இயக்கிய 'சம்மர் 42' என்ற ஆங்கிலப் படத்தின் தழுவலாகும்.

இவரை ஒரு சிறந்த இயக்குனர் என்று கூறுவதை விட ஒரு சிறந்த ஒளிப்பதிவாளராவார். இவர் பின்னாட்களில் 'கதைநேரம்' என்ற தொலைக்காட்சி குறும்படங்களை இயக்கியிருந்தார். இதில் பல எழுத்தாளர்களின் கதைகளை குறும்படமாக எடுத்திருந்தார். இவரது பாசறையில் இருந்து பாலா, வெற்றி மாறன் போன்ற பல இயக்குனர்கள் தோன்றியுள்ளார்கள். சோபா, அர்ச்சனா, மவுனிகா போன்ற சிறந்த நடிகைகள் இவரது படங்கள் மூலமே வெளிவந்தனர். இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் பற்றிய பல படங்களை எடுக்கவேண்டும் என்ற அவா பாலு மகேந்திராவிடமிருந்தது. ஆனால் அவர் இருந்த இந்திய சூழல் அதற்கு இடமளிக்கவில்லை. அதனையிட்டு அவர் கவலை கொண்டிருந்தார். பல ஈழத்துப் படைப்பாளிகளை உற்சாகமளித்து ஆலோசனைகள் வழங்கியுள்ளார். இவரது படைப்புலகம் பற்றிய ஒரு விரிவான ஆய்வை பிறிதொரு விளம்பரத்தில் பார்ப்போம். இங்கு இவரது மரணச் செய்தியறிந்து கருத்துகள் சொன்ன சில படைப்பாளிகள், விமர்சகர்கள், இலக்கியவாதிகளின் கருத்துக்களைப் பார்ப்போம். ஒரு ஒப்பற்ற ஒளி ஓவியனுக்காக விளம்பரம் மௌனித்து அஞ்சலி செலுத்துக்கிறது.



### பேராசிரியர், விமர்சகர் ராஜன் குறை

கல்லூரி மூன்றாமாண்டு படிக்கும்போது திருச்சி கலையரங்கத்தில் 'மூடுபனி' படத்தை மூன்று முறை பார்த்ததும், படத்தின் காட்சியமைப்புகள், படத்தொகுப்பு போன்றவை குறித்து நண்பர்களுடன் Krishnamurthy Mahadevan Ram Ganapathi ஆகியோருடன் ஓயாமல் விவாதித்ததும் நினைவுக்கு வருகிறது. பின்னர் எத்தனையோ சந்தர்ப்பங்களில் ஃபிலிம் சொசைட்டி திரையிடல்கள், கருத்தரங்கங்களில் சந்தித்திருந்தாலும் பாலு மகேந்திராவை இன்று நினைக்கும் போது மூடுபனி அனுபவமே மேலோங்குகிறது. கலைஞர்களுக்கு மரணமில்லை.

### ஈழத்து திரைப்பட இயக்குனர், ஸ்கிரிப்ட் நெட் இயக்குனர் ஞானதாஸ்

சினிமா என்பது வசனங்களினால் கதை சொல்வது அல்ல. காட்சிகளினூடு கதை சொல்லும் கலை என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே இருந்தவன், தமிழ் நாட்டுச் சினிமாவின் போக்கை மாற்றி அமைத்தவனே எங்கடை நாட்டுக்காரன்தான் என்று நாமெல்லாம், உள்ளுற கர்வம் கொள்ள வைத்தவன், அதன் காரணமாக, தமிழ்ச் சினிமாவின் அடுத்த கட்ட பரிமாணத்தை ஈழத்துச் சினிமாக்களாற்தான் எட்ட முடியும் என இன்றுவரை நம்பிக்கை கொண்டிருக்க ஒரு காரணமாகவுமிருந்தவன்.

### இலக்கியகர்த்தா கற்சுறா

எனது பிள்ளைகள் பிள்ளை பெற்றுக் கொண்டிருக்கும் போது நானும் பிள்ளை பெற்றுக் கொண்டிருக்கிறேன். நான் இன்னும் பிள்ளைகள் பெறுவேன் என்று சொன்ன கலைஞனுக்குள் மரணம் ஒழித்துக் கொண்டிருந்தது. உண்மையில் கமராவுக்குள் இருந்த அந்த அற்புதமான கண் மூடிவிட்டது. மரணம் ஏற்கவேண்டியது எனினும் சிலரது மரணம் வாழ்வை ஒருதரம் உலுப்பிவிடும். ஒரு சினிமாவை பார்க்கும் தருணங்களை மறந்திருக்கச் செய்யும் ஒரு கலைஞன். நான் ரித்விக்கட்டக்கைப் பார்க்கவில்லை. சத்யித்ரேயைப் பார்க்கவில்லை. அக்கிரோ குரோசோவாவைப் பார்க்கவில்லை. ஜான் ஆபிரகாமைப் பார்க்கவில்லை. பாலு மகேந்திராவைப் பார்க்கவில்லை. அவர்களைத் திரையிலே பார்ப்பதில் எப்பொழுதும் அளப்பெரிய ஆனந்தம். இன்னும் பெயர் சொல்லக்கூடிய பாலுவின் பிள்ளைகள் நம் கண்முன்னே இருக்கிறார்கள். அவர்களில் ஆனந்தம் கொள்வோம். சினிமா மனிதருக்குள் நிகழ்ந்த மிகப்பெரும் ஆனந்தம். ஒரு இரசாயன மாற்றம்.

### எழுத்தாளர் ஜெயமோகன்

1974ல் நெல்லு என்ற மலையாள சினிமா வெளிவந்தது. ராமுகாரியட் இயக்கி பிரேம்நசீர் நடித்தபடம். அப்போது எனக்கு பன்னிரண்டு வயது. ஒரு மாமா வீட்டுக்குச் சென்றிருந்தபோது திருவனந்தபுரத்தில் அந்தப் படத்தைப் பார்த்தேன். உண்மையில் எனக்கு சினிமா என்ற அழகனுபவம் அங்கேதான் தொடங்குகிறது. நான் செம்மீனையும் வேறுபல முக்கியமான மலையாளப்படங்களையும் அதற்குப் பின்னர் தான் பார்த்தேன். அதுவரை நான் பார்த்திருந்த படங்கள் கறுப்புவெள்ளை மலையாளக் குடும்பப்படங்கள். எம்.ஜி.ஆர், சிவாஜிகணேசன் நடித்த வண்ணப்பிழம்புகளான தமிழ்ப்படங்கள். நெல்லு எனக்கு ஒரு சினிமாவாகவே தெரியவில்லை. அது ஒரு கனவு. எனக்கும் இயற்கைக்குமான உறவை தீர்மானித்த அனுபவங்களில் அதுவும் ஒன்று என்று மிகப்பிந்தித்தான் உணர்ந்தேன்.

## துயரம்

**வானரன்**

### நாவலாசிரியர் லக்சுமி சரவணக்குமார்

இது இந்த வருடத்தின் மிகத் துயரமான நாள்.... தமிழ் சினிமாவின் நிகரற்ற கலைஞன் பாலு மகேந்திராவுக்கு கண்ணீர் அஞ்சலி.... துயர் மிகுந்த இந்தப் பகலை எப்படிக் கடப்பது? பாடம் சொல்லிக் கொடுத்த ப்ரியத்துக்குரிய ஆசிரியர் இறந்து போன வலியை உணர்கிறேன்....

### திரைப்பட அரசியல் ஆய்வாளர் விமர்சகர் யமுனா ராஜேந்திரன்

பாலு மகேந்திரா தமிழ் அறிவுலகச் சூழலிலும் வெகுஜனச் சூழலிலும் சரியாகப் புரிந்து கொள்ளப்படாத ஒரு கலைஞன். அதற்கான காரணங்கள் வரலாற்று ரீதியானவை. இலக்கியவாதிகள் மற்றும் அறிவுத்துறை சார்ந்தவர்களின் சினிமாவின் பலான விளக்கம், தமிழ்ச் சமூகத்தில் நிலவிய ஆண் பெண் பாலுறவு தொடர்பான இரட்டை மதிப்பீடுகள் போன்றவற்றைக் குறிப்பான இரண்டு காரணங்களாகச் சொல்லலாம். இதுவன்றி அவர் மீதான விமர்சனங்களில் இருக்கிற அரசியல் பரிமாணம் குறித்தும் அவர் அறிந்திருக்கிறார்.

சந்தேகமில்லாமல், தமிழ்ச் சினிமாவின் முகத்தை மாற்றியவர் அவர்தான். தமிழ் சினிமாவுக்கு வாழ்வின் பல்வேறு தரிசனங்களை அடையாளம் காட்டியவரும் அவர்தான். சினிமா காட்சிரூப சாதனம் என்று தமிழ் சினிமாவுக்குச் சொல்லிக் கொடுத்து வரும் அவர்தான். தமிழ் இலக்கியத்தில் ஜெயகாந்தன், தமிழ் சினிமாவில் பாலு மகேந்திரா என இருவரும் தமிழ்க் கலாச்சார சரித்திரத்தின் பகுதியாகி விட்டவர்கள். படைப்பு ரீதியில் தான் செய்து கொண்டிருக்கும் சிற்சில சமரசங்கள் அவருக்குள் ஆழமான வேதனையின் ரணங்களை விட்டுச் சென்றிருப்பதை, அது குறித்த குற்றவுணர்வில் அவர் தவிப்பதை, தவிர்க்கவியலாமல் அதனுள் வாழவேண்டிய அவலத்தை அவர் உணர்ந்திருப்பதை, அருகிருந்து அறியமுடிந்தது.

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

School of Math + (Since 2006)
· G7 - G12 Math Tutoring - Functions, Calculus, Data, IB, AP
· G7 - G12 English, SAT Essay Writing, Summary, Reading TOEFL, IELTS, SAT, COPE
· G7-G12 French, Pre-IB Reading, Writing, Grammar (Native Speaker teachers)
· $200 Off before Feb 01/2014
www.schoolofmath.ca
உங்களுடைய குழந்தைகளின் கல்வித் தேவைகளை பூர்த்தி செய்ய அழையுங்கள்
Bright Future Academy (BSID #:885489)
High SchoolCredit Courses (G11-G12)
Accredited by Ministry of Education
ENG3U/4U, MCV4U, MHF4U, MDM4U
ESLBOM, BAT4M, CIA4U
Highly Qualified teachers, Student-Centered teaching
Affordable price, Success guaranteed
Small group or VIP 1 to 1
$200 Off before Feb 01/2014
www.bfacademy.ca
4433 Sheppard Ave, E. (Sheppard & Brimley) 2nd Floor, Room 202, Toronto, ON M1S 1V3. 416.820.5527 / 647.712.8855

# விண்மீன் ஒன்றின் கோளினை இனம் காணல்

## சார்பியல் - 40

### விஞ்ஞானத்தின் புதுமை எளிமையாக

விண்ணிலே காணப்படும் விண்மீன்களைச் சுற்றி இருக்கின்ற உலகங்களை இனம் காண்பதென்பது வானினை ஆராய்பவர் களுக்கு இன்று மிகவும் சுவாரசியமான ஒன்றாக உள்ளது. நூற்றுக்கணக்கான வேற்று உலகங்கள் இப்போது இனம் காணப்பட்டுள்ளன என்பதை நீங்களும் அறிந்திருப்பீர்கள். 'பெரும் புவிகள்' என அழைக்கப்படும் இந்த உலகங்கள் இனம் காணப்பட்டத்தில் ஈர்ப்பு வில்லைத் தோற்றப்பாடும் ஒன்றாக இருந்தது. இதுவரை யில் கண்டுபிடிக்கப்பட்ட, விண்மீன்களின் கோள்கள் எமது புவியைவிடப் பெரியனவாக இருப்பதால் அவற்றை பெரும் புவிகள் என அழைக்கிறார்கள். இந்தக் கோள்களை எவ்விதம் தெரிந்து கொள்ளுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள மீண்டும் ஈர்ப்பு வில்லைத் தொழிற்பாட்டினை நினைவு படுத்திப் பாருங்கள்.




விண்மீன் X இனைச் சுற்றி அதன் பின்னால் இருக்கும் விண்மீன் Y இல் இருந்து வருகிற ஒளியினால் ஒரு ஒளிவட்டம் தெரியும் என்பது இப்போது எங்களுக்குத் தெரிந்த விடயம். இனி, விண்மீன் X இனது கோள் ஒன்று அதனைச் சுற்றி வலம் வருகிறது என்போம். அவ்விதம் அச்சிறிய கோள் வலம் வருகையில், அது Y இனது ஒளிக்கதிர்கள் வரும் பாதையில் குறுக்கிடலாம் என்பது வெளிப்படையாக எங்களுக்குத் தெரியும். அப்படியாகக் குறுக்கிட்டால் என்ன நிகழும் என்று எதிர்பார்க்கின்றீர்கள்? ஆம், நீங்கள் நினைப்பது சரிதான். புவியை வந்தடையும் விண்மீன் Yஇனது ஒளிக்கதிர்கள் சில அந்தக் கோளினால் மறைக்கப்பட, விண்மீன் Y ஆனது சில இடங்களில் சில காலத்திற்கு மங்கலாகத் தெரியும். கோள் நிலையாக நிற்பதில்லை என்பதால், அந்த மங்கலும் அசைந்து கொண்டு போகும். இப்படியாக விண்மீன் Y ஆனது மங்கலாகவும் பின்னர் சில காலத்தில் பிரகாசமாகவும் மாறி மாறித் தெரியுமாயின், விண்மீன் X இனைச் சுற்றி ஒரு கோள் வலம் வருகின்றது என்பது நிரூபணமாகின்றது, அல்லவா! இந்த விதமாகத்தான் பல விண்மீன்களின் கோள்களைக் கண்டுபிடித்துள்ளார்கள். நல்ல வலிமையான தொலைகாட்டியின் உதவியுடன் பல விண்மீன்களின் கோள்கள், வானவியலாளர்கள் அல்லாத சாதாரண மனிதர்களினாலும் இனம் காணப்பட்டுள்ளன.

வானில் நெடுந்தூரத்திற்கு அப்பால் உள்ள விண்மீன்கள் எமக்குத் தெரியாது. ஆனால் அவ்விடங்களில் உள்ள பல விண் மீன்களைக் கொண்ட விண்மீன் தொகுதி, அதாவது கலக்சி, ஒரு ஒளிப் பொட்டுப் போலத் தெரியும். இந்த ஒளிப் பொட்டுக்கும் பின்னால் அதிக தூரத்தில் உள்ள இன்னொரு கலக்சி அல்லது கியூசர் (இன்னமும் சிறிய ஒளிப் பொட்டாக இருக்கக் கூடியது) எமக்குத் தெரிவதற்கு வாய்ப்பில்லை. ஏனெனில் அதற்கு முன்னால் உள்ள ஒப்பீட்டளவில் பெரிய ஒளிப் பொட்டான, கிட்டவுள்ள கலக்சி அதனை மறைத்துவிடும். ஆனாலும், அந்த ஒளிப் பொட்டினைச் சுற்றி, அதன் வலிமையான ஈர்ப்புப் புலம் அசயப்பட்டுக் கொண்டு

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



தொடர்ச்சி 25ஆம் பக்கம்

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

Seeking freedom from DEBT?
We offer Total Debt Free Solutions
Instant relief with one easy monthly payment. SAVE thousands of dollars.

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்
- We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்
- We shield you from your creditors and offer you a guaranteed protection
- கடன் கொடுத்தவர்களின் அச்சுறுத்தல்கள், சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு
- We package a custom solution to protect all your assets including your hard earned property, vehicle, insurance, RRSP, TFSA, RESP, Shares
- உங்கள் சேமிப்பு, சொத்து, வாகனம், முதலீடுகள் பாதுகாப்பதிற்கு உரிய வழிமுறை செய்தல்
- We arrange a sensible Repayment Plan minimizing potential losses and avoiding bankruptcy

K.T. Keeran
Credit consultant
Debt Free Credit Solution Inc.
PHONE: 416.434.1522
MOBILE: 416.834.7227
FAX: 1.877.800.7899
Web: http://www.paycontrolled.ca
Email: keeran@paycontrolled.ca
ADDRESS:
SUITE #303, MILNER BUSINESS COURT,
TORONTO ONTARIO M1B 3C6






SOLVE YOUR DEBT WORRIES WITH DIGNITY.
CONTACT DEBT FREE CREDIT SOLUTION FOR A FREE INITIAL CONSULTATION

# நீதிக்காவும் இலட்சியத்துக்காகவும் உண்மைக்காகவும் இறுதிவரை போர் தொடுத்த உள்ளம் ஓய்ந்துவிட்டது!

- முனைவர் பார்வதி கந்தசாமி -

கொடுந்துயரை சுமந்துகொண்டு வந்த தமிழர்கள் துயரத்தின் விளிம்பில் வாழ்வைத் தொடர்ந்தும் தொடர வேண்டிய வர்களாகவே உள்ளனர். தமிழரின் நாகரிகப் பின்புலத்தை காணும் பொழுது மலைபோல ஓங்கி நிற்க வேண்டிய இனமாக எண்ணித் திழைக்க வேண்டியவ ராகக் கற்பனை செய்கின்றோம். பண்டைய தமிழ்ப் படையல்களுக்கு ஊடாக ஓர் இலட்சிய தமிழுலகத்தை தரிசிக்க முடிகின்றது. பிரேம்ஜி போன்ற யாதார்த்த தமிழுணவாளர்கள் இலக்கியங்களைச் சமூக சிந்தனைத் தடத்தினுடாக உள் நோக்குகின்றனர்.

பிரேம்ஜி என்று தற்பெயர் கொண்ட ஞானசுந்தரம் நடராஜா இலங்கை முற்போக்கு எழுத்தாளர் அங்கத்தினர், ஆணிவேர், சூத்திராதாரி. அச்சுவேலியில் 1930 ஆம் ஆண்டு பிறந்த ஞானசுந்தரம் நடராஜா என்ற பொதுவுடமைவாதி "ஞானா" என அழைக்கப்பட்டார். பின்னர் "பிரேமா" என்ற பெயரில் பத்திரிகைககளில் எழுதியவரை அவரது இந்திய சிநேகிதர் ஒருவர் "பிரேம்ஜி" என்று எழுதும்படி கேட்டுக்கொண்டார். அதன் பின்னர் பிரேம்ஜி என்ற பெயர்தான் இலங்கை, இந்தியா, நண்பர்கள் அழைத்துக் கொண்டது.

பிரேம்ஜி எட்டு வயதிலேயே கோயிலுக்குள் போகாமல் வெளியில் நின்றபடி கும்பிட்டவர் களுக்காக கோயிலுக்கு உள்ளே போகாமல் திரும்பியதாக உறவினர் கூறுவர். சிறுவயதிலிருந்தே ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுத்தவர். மிகவும் எளிமையானவர், அன்பும் அடக்கமும், நிதானமும் கொண்டவர். ஈழத்தின் மும் மொழிப்பாண்டித்தியம் பெற்றவர். தமிழ் நாட்டில் பட்டப் படிப்புக்காகச் சென்றவர் சமவுடமைத் தத்துவவாதிகளுடன் இணைந்து பாட்டாளி மக்களுக்கான திட்டங்களை எடுத்துச் செயலாற்றினார். பணமுடையால் இலங்கை திரும்பினார். தனது கொள்கைப்பிடியிலிருந்து மாறாது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியுடன் செயலாற்றினார். ஆரம்பகாலத்தில் தமிழரசுக் கட்சியின் பத்திரிகையான "சுதந்திரனில்" பணியாற்றினார். அதில் மக்களை உணர்வுரீதியாக அரசியல் மயப்படுத்தும் கட்டுரைகளை எழுதினார். நாசூக்காகத் தன் கருத்தை வெளியிடுவதில் வல்லவராக இருந்தார்.

சுதந்திரனின் அரசியலுடன் ஒத்துப் போகாததால் அதைக் கைவிட்டு தோழர் களான பீற்றர் கெனமன், மாட்டின் விக்கிரம சிங்கா, பொன் கந்தையா, வைத்தியலிங்கம் மாஸ்டர், கார்த்திகேயன் போன்ற பலருடன் கட்சித் தலைமை யகத்தில் இரவுபகலாக வேலை செய்தார். "தேசாபிமானி" என்ற பத்திரிகையின் தூணாக கே. இராமநாதனுடன் இணைந்து செயற்பட்டார். இவருடன் இளங்கீரன், கணேஷ் இணைந்து செயற்பட்டனர். சோவியத் நாடு, Forward முதலிய சுரண்டப்படும் மக்களுக்கு எதிராகக் குரல் கொடுத்த பத்திரிகைகளில் எழுதினார். முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை ஸ்தாபித்து 1954 முதல் 1998 வரை அதன் செயலாளராக கடமை ஆற்றினார். இந்தியப் பத்திரிகைகளைப் பகிஸ்கரித்து இலங்கை எழுத்தாளரை முன்நிறுத்திய கைங்கரியம் பிரேம்ஜி என்ற மகத்தான ஆத்மாவால்தான் நிகழ்ந்தது. இளங்கீரனின் சாதியைச் சாடும் நாவலான "நீதியே நீ கேள்" சாகித்திய மண்டலப் பரிசு பெற்றமைக்கான பெரும்பங்கு பிரேம்ஜியின் ஊக்குவிப்பாலேயே.

பிரேம்ஜி ஓர் எழுத்தாளர் களஞ்சியம். மாக்சிய தத்துவம் அவரின் தத்துவம். தன் விவாகத்திலும் கமலியைக் கைப்பிடித்து புதுமை செய்தார். ஆழ்ந்த சிந்தனையும் தெளிவான பார்வையும் கொண்ட பிரேம்ஜி முன்பின் நின்று தட்டிக் கொடுப்பவர் என பேராசிரியர் சிவத்தம்பி குறிப்பிட்டுள்ளார்.

புகழ் விரும்பாத பிரேம்ஜி கனடாவில் இலைமறைகாயாக இருந்தார். அவரது



கட்டுரைகள் சில "பிரேம்ஜி கட்டுரைகள்" நான்காவது பரிமாண வெளியீடாக வந்தது. மனிதநேயம் மிக்க பிரேம்ஜி இனங்களின் ஒடுக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுத்த வண்ணம் இறுதி மூச்சும் விட்டார்.

சமதர்மம் காண உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்த பிரேம்ஜி எழுதிய 2000க்கும் அதிகமான கட்டுரைக-ளைத் தேடி எடுத்து நூலுருவாக்கி மனிதத்திற்கான விடியலுக்காக மும் மொழிகளிலும் பிரசுரித்து அவர் ஆத்மாவை சாந்தி பெற வைப்போம்.

# மௌனித்து...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

பின்னர், பல சந்தர்ப்பங்களில் நான் திரைக்கதை எழுத, அவர் படம் எடுக்கும் நிலைக்குக் கிட்டே கிட்டே வந்தோம். அவருக்கு ஒரு நல்ல திரைக்கதை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்கிற என் ஆசை பல்வேறு காரணங்களால் தள்ளிக் கொண்டே போனது. ஓரளவுக்கு பாலு மகேந்திரா கதை நேரத்தில் என் சிறுகதை கள் பத்தையும், ஒரு குறுநாவலையும் சின்னத்திரைக்கு செய்து கொடுத்தார். சற்றே சமாதானமானோம்.

அந்தச் சமயத்தில் ஷோபாவைச் சந்திக்க நேர்ந்தது. சட்டென்று அறைக்குள் நுழைந்து பாலுவின் கழுத்தை 'அங்கிள்' என்று கட்டிக் கொண்டார். என்னுடன் வந்திருந்த என் மனைவி வீட்டுக்கு வந்ததும், 'இது அங்கிள் உறவு இல்லை' என்றாள். சில தினங்கள் கழித்து குமுதம் இதழில் இருவரும் மணந்து கொண்ட செய்தி போட்டோவுடன் வந்திருந்தது. அடுத்த ஆண்டு அந்தப் பெண்ணின் தற்கொலைச் செய்தி.

அந்த இளம் மனதில் என்ன எண்ணங்கள் ஓடியிருக்கும் என்று வியந்திருக்கிறேன். அதுபற்றி பாலு சொன்ன தகவல்கள் அந்தரங்கமானவை. அவருடன் என் நட்பின் மரியாதை கருதி அவற்றை நான் எழுதவில்லை.

சுஜாதாவின் பல நாவல்கள், படமாக்கப்படும் போது அவருடைய மூலக் கதைகளின் சாரம் சிதைக்கப்படுவதாக அவரே பலமுறை பேட்டி அளித்திருக்கிறார். அதற்கு ஒரு மிகச் சிறந்த உதாரணம் 'ஆனந்த தாண்டவம்' திரைப் படம். ஆயினும் அவரே 'தன் நாவல்கள் இவரால் படமாக்கப் படாதா' என்று ஏங்கியவர் ஒருவர் இருப்பின் அது பாலு மகேந்திரா தான்.

அம்பலம் மின்னிதழில் சுஜாதா எழுதிய கட்டுரை ஒன்றில் அவரே பாலு மகேந்திரா பற்றி கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறார். "என் நாவல்கள் எதுவும் அவரால் மெருகேற்றப் பட்டு திரைப்படங்களாக வராத குறையை நிறைவு செய்ய அவரது 'கதை நேரம்' தொலைக்காட்சித் தொடரில் எடுத்த 52 சிறுகதைகளில் எனது பத்து கதை-களை அவர் படமாக்கி முழுவதும் திருப்தி யளித்தார். சிறுகதைகளை எப்படி படமாக்குவது என்பதற்கு உதாரணங்களாக அவை அமைந்தன. சினிமாவையும் தொலைக்காட்சியையும் அவர் வேறுபடுத்தித் தனியாக பார்க்கவில்லை. தொலைக்காட்சி யிலும் சினிமா இலக்கணங்கள் பயில முடியும் என்பதை நிரூபித்தார். இருபது இருபத்தைந்து நிமிடங்களில் ஒரு கதையை எப்படி அலுக்காமல், உறுத்தாமல், உபதேசமில்லாமல் காட்சிகளாக சொல்ல முடியும் என்பதற்கு அரிய பாடங்களாக அவை அமைந்தன."

## சுஜாதாவின் 'நிலம்'



'நிலம்' கதையும் சுஜாதாவின் சமூகத்தைப் பற்றிய எள்ளல் தொனியுடன் கூடிய விமர்சனம் தான். வசதி படைத்த மனிதர் ஒருவர் ஒரு ஆன்மீகக் கட்டிடம் கட்டுவதற்கு உரிய நிலம் ஒன்றை மாந-கராட்சி ஒதுக்கீடு மூலம் பெறுகிறார். ஒதுக்கப்பட்ட நிலம் மிகவும் வசதியாக இருப்பதில் அவர் மகிழ்ச்சி அடைகிறார். ஆனால் அந்த மகிழ்ச்சி வெகு காலம் நீடிக்காமல் அவருக்கு பேரதிர்ச்சியாக ஒரு அறிவிப்பு வருகிறது. அவருக்கு ஒதுக்கப்பட்ட நிலம் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டதாக தெரிய வருகிறது. அதை எப்படியேனும் தடுக்க தன் நண்பர் ஒருவரை நாடுகிறார். நண்பர் அந்த நிலம் கிடைக்க செய்யும் பிரம்மப் பிரயத்தனங்கள் தான் மீதிக் கதை.

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
COLDWELL BANKER
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
Ottawa> > > < < < GTA

நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# மௌனித்து...

16ஆம் பக்கத்தொடர்ச்சி

தமிழ்ச் சினிமாச் சூழலில் ஒரு சமரசமற்ற கலைஞனாக வாழ முயல்கிறபோது, கொடுக்க வேண்டிய விலைகளை அவர் அதிகம் கொடுத்து விட்டிருக்கிறார். தான் நேசிக்கும் மனிதர்களுக்கான அவரது பொறுப்புணர்வு குறித்த அவரது தீவிரமான சுய கேள்விகளை இன்று சினிமாவின் பால் விளக்கத்தையும், கடுமையான விமர்சனத்தை யும் முன்வைக்கிற எல்லா தமிழக அறிவு ஜீவிகளும், கலை இலக்கியவாதிகளும் தீவிரமாகக் கணக்கிலெடுத்துச் சிந்திக்க வேண்டும்.

இலக்கியத்திற்கும் சினிமாவுக்கும் இருக்கிற அல்லது இனி இருக்க வேண்டிய உறவு குறித்து அவர் சில தீர்மானகரமான அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கிறார். தீவிரமான படைப்புகளைத் திரையில் சொல்ல நேரும்போது ஏற்படும் தடைகள் குறித்து அவர் சொல்லும் விடயங்கள் மிக முக்கியமானவையாகும். தமிழ் இலக்கியவாதி களின் மேட்டிமைத்தனம் குறித்து அவர் கடுமையான அபிப்பிராயங்கள் கொண்டிருந்த போதும், இலக்கியத்துக்கும் சினிமாவுக்கும் தமிழ்ச் சூழலில் உருவாகியே தீர வேண்டிய இணக்கம் குறித்து அவர் கவலையுடன் சிந்திக்கவே செய்கிறார்.

பேராசிரியரும் ஹைய்தராபாத் பல்கலைக் கழக திரைப்படத்துறை தலைவரும் விமர்சகருமான பேராசிரியர் வெங்கடேஷ் சக்கரவர்த்தி It breaks my heart to inform my fellow friends that the legendary director and director of photography Balu Mahendra passed away .......Balu was my mentor and i have done two films with him. He signed me even as thakara was being made ...i learnt a lot about cinema and acting from him ........he was



a class apart from other directors of his time he shunned commercial film and carved out a path for himself giving us so many wonderful films as an actor in his films he got the best out of you ....thank you balu ....i owe you more than i can repay ......may you find eternal peace .........may the universe absorb your prodigious talent .....

## மறைந்த எழுத்தாளர் சுஜாதா

பாலு மகேந்திரா பற்றி சுஜாதா கூறுகிறார்.... (கற்றதும் பெற்றதும்)

தூர்தரஷனின் சிறப்பு தமிழ்ச் சிறுகதைகள் வரிசையில் 'பரிசு' சிறுகதையை பாலு மகேந்திரா தொலைப்படமாக்கி இருக்கிறார். அது தொடர்பாக என்னைப் பேட்டி எடுத்தார். பேட்டி என்பதைவிட, இருவரும் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்தோம். என்னை ஒரு அறையில் செயற்கை விளக்கில்லாமல் ஜன்னலோரம் உட்கார்த்தி வைத்து, ஒரே ஓர் தெர்மோகோல் வைத்துவிட்டு, காமிரா கோணத்தைச் சற்று திருத்தி அமைத்துவிட்டு எதிரே உட்கார்ந்து கொண்டார். பல விடயங்கள் பற்றிப் பேசினோம். பேட்டி முடிந்து படம் போட்டுக் காட்டினபோது, 'அட.... இது நானா....?' என்று ஆச்சரியமாக இருந்தது. எல்லோரும் பயன்படுத்தும் காமிராதான். தெர்மோகோல் ஏராளமாக சென்னையில் கிடைக்கிறது. இருந்தும், எதை எங்கே எப்படி வைக்க வேண்டும் என்று தீர்மானிக்க ஒரு பாலுமகேந்திரா தான் இருக்கிறார்.

பாலுவுடன் பழக்கம் என் ஆரம்ப எழுத்துக் காலங்களிலேயே தொடங்கியது.

விசாகப்பட்டணத்தில் அவர் 'சங்கராபரணம்' படம் எடுத்துக் கொண்டிருந்தபோது 'மறுபடியும் கணேஷ்' படித்துவிட்டு, அதைப் படமாக எடுக்கப்போவதாக அனுமதி கேட்டு அழகான கையெழுத்தில் எழுதியிருந்தார். பெங்களூருக்கு அவர் 'கோகிலா' படம் எடுக்க வந்திருந்தபோது, கமல்ஹாசன் அவரை எனக்கு அறிமுகம் செய்வித்தார். மூவரும் நிறையப் பேசினோம்.

பின்னர், 'கரையெல்லாம் செண்பகப்பூ'வை பாலு மகேந்திரா எடுப்பதாக, நடராஜன் (பிற்பாடு பிரமிட்) தயாரிப்பதாக, காலஞ் சென்ற ஷோபா அதில் நடிப்பதாக இருந்தது. திறமையாக திரைக்கதை அமைத்து ரொம்ப உற்சாகமாக இருந்தார். ஒரு கருத்து வேறுபாட்டில் அந்தப் படத்தை அவரால் எடுக்க முடியவில்லை.

பாலு அதற்குப் பதில் 'மூடுபனி' எடுத்தார்.

தொடர்ச்சி 18ஆம் பக்கம்




# BOOKING STARTED DON'T MISS IT!

## Forward Condo In DownTown Toronto

**Closing Spring 2017**

## Largest Builder in Canada "CONCORD"



- Only 30 Floors
- Amazing Amenities
- Walking to :
  - Sky Dome
  - CN Tower
  - Newly Built Aquariam
  - Harbour Front
  - National Super Market
  - Future Prestigious Mall

**VIP Package For HomeLife/GTA Clients (Exclusive Brokerage)**

For More Details & Appoinments

VISIT CONVENIENTLY LOCATED OFFICE IN WELL KNOWN GTA SQUARE MALL IN TORONTO

**HomeLife/GTA Realty Inc. Brokerage***

**Contact: 416.321.6969**

5215 Finch Ave. E. #203, Toronto, ON

*Independently Owned & Operated

# மயக்கும் மொறோக்கோ

கடந்த இதழ் தொடர்ச்சி...

## அரசியல்

ஏற்கனவே எழுதியவாறு மொறொக்கோ ஒரு நாடாளுமன்ற யாப்பு ரீதியான அரசாட்சி உள்ள நாடாகும். பிரதம மந்திரி அரசாங்கத்தின் தலைவராகவும் பல கட்சிகள் கொண்ட அமைப்பின் தலைவராக வும் உள்ளார். செயலாற்றுப் அதிகாரம் அரசாங்கத்துக்குண்டு. சட்டரீதியான அதிகாரம் நாடாளுமன்றத்தின் இருசபை களுக்கும் உண்டு. தற்போதைய பிரதம மந்திரியாக அப்டிலைலா பென்கிறேன் இருக்கிறார். தற்போதைய அரசாங்க மொக-மட் VI பணியாற்றுகிறார்.

**- துறையூரான் -**

## பாதுகாப்பு படை

செப்ரெம்பர் 2006 வரைக்கும் கட்டாயம் படைச்சேவை அமலில் இருந்தது. ஆனால் ஒதுக்கு படைச்சேவையில் 50 வயதுக்குட் பட்டவர்கள் பணியாற்ற வேண்டுமென்ற கடப்பாடு இன்னும் நடைமுறையில் உள்ளது. நாட்டுப்படையின் பிரிவுகளாக சேனைப்படை, கப்பல்படை, விமானப்படை ஆகியன உள்ளன. இதைத்தவிர தேசிய பொலிஸ் படையும். உபபடைகளும் உள. மேற்குச் சஹாராவில் பெரும்பாலான படையினர் சேவையில் உள்ளனர்.



ஏனெனில் அங்குள்ள பொலிசாரியோக்குழு அடிக்கடி மொறொக்கோப் படைகளைத் தாக்கி வருகிறது. இதனால் ஐ.நாவும் அங்கு ஒரு கண்காணிப்புப் படையை நிறுவியுள்ளது.

## பொருளாதாரம்

Main floor / Second floor commercial space for Lease / sale. Available for any retail business or professional office. Very demand location. High traffic area. Easy access. one of the best location in Scarborough.
***Pl. Call: 416.315.9397***

# பண்ணையாரும் பத்மினியும் - திரைவிமர்சனம்

குறும்பட இயக்குநர்களின் ‘புதிய அலை’ திரைப்படங்கள் வரிசையில் மற்றுமொரு படம்! வசதிகள் அதிகம் இல்லாத கிராமம். அந்த ஊரில் தொலைக்காட்சி பார்ப்பது தொடங்கி தொலைபேசி வரைக்கும் நல்லது கெட்டது எல்லாவற்றுக்குமே பண்ணையார் வீடுதான். இது மட்டுமல்லாமல் ஊர்க்காரர்கள் கேட்கும் உதவிகள் எல்லாவற்றையும் செய்கிறார் பண்ணையார். அவர் நண்பர் ஒருவர் வெளியூர் செல்லும்போது தன் பத்மினி காரைப் பண்ணையார் வீட்டில் விட்டுவிட்டுச் செல்கிறார். கிராமத்தில் ஒரு சிறுவனை பாம்பு கடித்துவிடுகிறது. அவனை எப்படி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வது எனத் தெரியாமல் மக்கள் முழிக்கும்போது, பத்மினி ஞாபகம் வந்து, ‘வண்டியை எடுங்கள்’ என்று பண்ணையார் உத்தரவிடுகிறார். ஆனால், அந்தக் காரை ஓட்ட ஒருவருக்கும் தெரியாது. எனவே, டிராக்டர் ஓட்டத் தெரிந்த முருகேசனை அழைத்து வருகிறார்கள். முருகேசனும் காரை எடுத்து சிறுவனைக் காப்பாற்றிவிடுகிறார். அதன் பிறகு கிராமத்தின் நல்லது கெட்டது அனைத்திலும் காரும் ஒன்றாகிவிடுகிறது. முருகேசன் டிரைவராகவும் பாலா கிளீனராகவும் சேர்கிறார்கள்.

பத்மினி கார் மீது பண்ணையாருக்கு அளவு கடந்த பாசம் ஏற்பட்டுவிடுகிறது. பண்ணையார் மனைவி துளசியும் காரை கொஞ்சம் கொஞ்சமாக நேசிக்க ஆரம்பிக்கிறார். அந்த வீட்டுப் பிள்ளையாகவே ஆகிறது, கார். ஆனால், தன் கணவன் ஓட்டினால்தான் காரில்



ஏறுவேன் என்பது பண்ணையார் மனைவியின் பிடிவாதம். தன் திருமண நாளுக்குள் காரை ஓட்டக் கற்றுக்கொண்டு மனைவியைக் கோயிலுக்கு அழைத்து செல்ல வேண்டும் என்று பண்ணையாருக்குள் ஆசை உதிக்கிறது. டிரைவர் முருகேசனும் கார் மீது காதல்கொள்கிறார். ஒரு வாகனம் என்பதைத் தாண்டி அதன் மீது அன்பை பொழிகிறார். காருக்குஒன்று என்றால் உருகுகிறார். பண்ணையாருக்கு கார் ஓட்டக் கற்றுக் கொடுத்தால், பண்ணையார் தன்னைக் காரிடமிருந்து பிரித்துவிடுவார் என்று முருகேசன் அச்சம் கொள்கிறார்.

பண்ணையாரின் திருமண நாள் நெருங்குகிறது. கார் கைவிட்டுப் போகிறது. மீண்டும் கார் வந்ததா? பண்ணையார், தன் ஆசை மனைவியை காரில் கோயிலுக்கு அழைத்துச் சென்றாரா என்பது மீதிக் கதை.

வயதான பண்ணையாருக்கும் அவரது மனைவிக்கும் இடையேயான காதல், பண்ணையாரின் பத்மினி கார் மீதான வசீகரம் இரண்டும்தான் படமே. பண்ணைய-ாராக ஜெயப்பிரகாஷும் அவரது மனைவியாக துளசியும் நடித்திருக்கிறார்கள். ஒரு கணவன் - மனைவி எப்படி வாழ வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இவர்கள் வருகிறார்கள். அவர்களுக்குள் நடக்கும் ஊடலும் காதலும் அருமை. ஜெயப்பிரகாஷ், அற்புதமான குணச்சித்திர நடிகர். இதில் ஏறக்குறைய கதாநாயகன். ஒரு அப்பாவி மனிதனாக, அனைவருக்கும் உதவும் மனம் படைத்தவராக, அன்பானக் கணவனாக, நெகிழ்ச்சியான தந்தையாக எனப் பல பரி-மாணங்களில் கலக்குகிறார். கார் போய்விடுமோ என்று பதறுவதும், மனைவி யின் ஆசையை நிறைவேற்றப் போராடுவதுமாக நம் மனதில் நிறைகிறார் ஜெயப்ரகாஷ். ரத்தமும் சதையுமாய் உடனிருக்கும் மனைவியிடம் கொண்ட காதலை நம்முள் எவ்வளவு இயல்பாக கடத்த முடிகிறதோ அதே இயல்புடன் காரின் மீதான காதலையும் கடத்தியிருப்பது அபாரம்.

பண்ணையாரின் மனைவியாக வரும் துளசியின் நடிப்பில் அவ்வளவு யதார்த்தம்.

**- ஃபிலிம்நியூஸ் கிருஷ்ணன் -**

கணவனை கண்டிப்பதில் ஆரம்பித்து கிண்டல் செய்வதுவரை இயல்பாக நிகழ்கிறது. பண்ணையாரின் டிரைவர் முருகேசனாக வருகிறார் விஜய் சேதுபதி. இரண்டாவது கதாநாயகன்தான். ஆனாலும், சுவாரஸ்யமாகக் கொண்டுசெல்வதில் இவரது பங்கு முக்கியமானது. எங்கே பண்ணையார் கார் கற்றுக்கொண்டால் தன் வேலை பறிபோய்விடுமோ என்ற பதட்டத்தில் பத்து நாள் கழித்துத்தான் கற்றுக் கொள்ளவேண்டும் என்று சொல்லும் போதும், பண்ணையாருக்கு ஈடான காதலை காரின்

தொடர்ச்சி 39ஆம் பக்கம்



# கவிநாயகர் வி. கந்தவனம் அவர்களின் 80 ஆவது அகவைப் பூர்த்தியை சொற்றொகுதிக்குழு கொண்டாடியது

அதிபர் பொ.கனகசபாபதி அவர்களின் தலைமையில் ஜி.ரி.ஏ வர்த்தக அங்காடியில் இயங்கி வரும் சொற்றொகுதிக்குழு உறுப்பினர்கள் இணைந்து கடந்த 3.2.2014 மாலை இராப்போசன விருந்தினை அளித்து கவி நாயகர் வி. கந்தவனம் தம்பதியினரைப் பாராட்டியும் வாழ்த்தியும் தமது அன்பைத் தெரிவித்துக்கொண்டனர்.

இன்னொன்று எனது துணைவியாரின் ஆசான். மாணவியின் ஆசான் அவருக்குத் தந்தையாவார். எனவே அவர் எனக்கு மாமா முறையாகின்றார் என்றதோடு அவர் தொடர்ந்து அதிபர் கனகசபாபதி அவர்களும் எனது துணைவியாரின் ஆசிரியர் என்ற முறையில் இருபெரும் மாமன்மாரை நான் உரிமை கொண்டாடும் வாய்ப்பைப் பெற்றிருக் பண்பும் என்னை மிகவும் கவர்ந்தது. முன்பின் தெரியாத என்னிடம் ஒரு நூல்வெளியீட்டுக்கு வந்திருந்து எனக்கு ஊக்குவிப்பிற்காக பணத்தைத் தந்து தெணியானைப் பற்றியும் விசாரித்ததாகக் கூறும் வண்ணம் கேட்டு எனது மனதில் இடம்பிடித்துக்கொண்ட அவரைப் பாராட்ட எனக்கு தகைமை இல்லை. இருந்தாலும் அவர் நீண்டகாலம் அரிதாகவே கிட்டியது எனினும் இந்தியாவில் படித்த அனுபவங்கைள எல்லாம் பகிர்ந்து கவிஞர் மிகவும் துணிச்சலோடு தனது மனதில் பட்டதைக் கூறும் பண்புகொண்டவர் என உரைத்து அவர் மேலும் பல நூல்களை ஆக்கித் தரவேண்டும் என கேட்டுக் கொண்டார்.



தொடர்ந்து கருத்துரை தந்த வைத்திய கலாநிதி இ. லம்போதரன் அவர்கள் கவிஞர் பழமையையும் புதுமையையும் ஏற்றுக் கொள்ளும் பக்குவமுடையவர். தனது மனதில் பட்டதை அப்படியே எடுத்துரைக்கும் மனப்பாங்கு அவரிடம் உண்டு. தனக்குப் பிடிக்காதவர்கள் என்றாலும் அவர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும் பண்பும் அதனை மதிக்கும் தன்மையும் அவரிடம் குடிகொண்டுள்ள நற்பண்புகள் என உரைத்த அவர் தவறைத் தவறு எனச் சுட்டிக்காட்டும் துணிவு அவரிடம் நிறையவே உண்டு. உள்றொன்று வைத்துப் புறமொன்று பேசாதவர் எனவும் கூறிப் பாராட்டினார். ராஜா மகேந்திரன் அவர்கள் கவிநாயகர், அதிபர் போன்றவர்களோடு பழகும் வாய்ப்புக்கிட்டியது எனது நற்பயனே என்றதோடு அவர் நீண்டகாலம் வாழ்ந்து தனது பணிகளை இச்சமூகத்திற்கு ஆற்றவேண்டும் என்றார்.

**- த. சிவபாலு -**

அதிபர் பொ.கனகசபாபதி அவர்கள் கவி நாயகரை மிக நீண்டகாலமாகத் தெரிந்தவன் நான். மிகவும் மக்களால் பாராட்டப்படும், மக்கள் மத்தியில் மதிக்கப்படும் ஒரு கவிஞராக அவரை நான் காண்கின்றேன். அவரோடு செல்லுமிடமெல்லாம் அவரை தெரி யாதவர்களே இல்லை என்னும் அளவிற்கு மிகவும் பிரபலமானவராக அவர் விளங்கி யமைக்கு அவரது கவித்துவ ஆற்றலும் மேடைப்பேச்சும் காரணமாக அமைகின்றன. 80 நூல்கள் வரை எழுதிக் குவித்துள்ளார் என்றால் அவரது திறமையைப் பற்றிப்பேசவும் வேண்டுமோ. இப்படி மிக வேகமாக அதிக- ளவில் எழுதியவர்கள் ஈழத்தில் இல்லை என்றே சொல்லாம். இதற்கெல்லாம் அவருக்கு எப்படித்தான் நேரம் கிடைக்கின் றதோ என்பது எனக்கு வியப்பாக உள்ளது, என உரைத்தார். மேலும் அவருடைய தமிழா ற்றல் அவரை உயர்த்தி வைத்திருக்கின்றது என்றும் தொடர்ந்தும் பல ஆண்டுகள் வாழ்ந்து மேலும் பலநூல்களைப் படைக்க வேண்டும் என்றார். யாழ்ப்பாணப் பல்லைக்கழக முன்னாள் தமிழ்ப்பேராசிரியர் நா.சுப்பிரமணியன் பேசும்போது கவிநாயகரை நான் இரண்டுகோணத்தில் பார்க்கின்றேன். ஒன்று என்னைக் கவிதை உலகத்திற்குத் தட்டிக்கொடுத்து பங்கெடுக்க வழிவகுத்தவர். கின்றேன். கவிநாயகர் அவர்களோடு கவியரங்குகளில் கலந்துகொள்வது எனக்கு மிகவும் பெருமையையும் புகழையும் தேடித் தந்தது. எவரையும் தட்டிக்கொடுத்து ஆர்வத்தை ஏற்படுத்தும் பெருந்தன்மை கவிநாயகரிடம் உள்ளமையை நான் பாராட்டாமல் விடமுடியாது. “நல்லாரைக் காண்பதும் நன்றே அவர் சொற்கேட்பதுவும் நன்றே அவரோடு இணங்கி இருப்பதுவும் நன்றே” என்பதற்கேற்ப இவர்களோடு சேர்ந்து பழகும் பாக்கியம் எங்கள் எல்லோருக்கும் கிடைத்திருப்பது வரப்பிரசாதமே! என்றுரைத்த அவர் இன்னும் நீண்டகாலம் சுக ஆரோக்கியத்தோடு வாழ்ந்து தமிழ்ப்பணியும் சமயப்பணியும் ஆற்ற வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன் என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய கவிஞர் க. நவம் நான் ஒரு ஏகலைவனாக கவிநாயகரை மனதிருத்தி எனது கவிதையை வளர்த்துக் கொண்டவன். அவரது கவிதைகளைப் படித்தும் கேட்டும் என் மனதில் நானும் கவிதை பாடலாம் என்பதனை உணர்ந்து கொண்டேன். அவ்விதம் உணர்வதற்கு வித்திட்டவர் கவிநாயகர் அவர்கள். அவரது திறமையும் மற்றவர்களைப் பாராட்டும் இருந்து தமிழ் உலகிற்கு மேலும் பணியாற்ற வேண்டும் எனவும் இறைவனை வேண்டுகின்றேன் என்றார்.

முன்னைநாள் தமிழ் பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்கள் கவிநாயகரோடு ஈழத்திலேயே எனக்கு பழக்கம் உண்டு. தம்பி என்று அன்பாக அழைப்பார். ஒருமுறை கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நான் இவர் நடந்துசெல்வதனைக் கண்டு இவர் இங்கு என்ன செய்கின்றார் என யோசித்துவிட்டு அவரிடம் சென்று வினவினேன். அப்போது தான் நாடக டிப்ளோமா கற்றுக் கொண்டிருப்பதைத் தெரியத்தந்தார். அவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பையும் ஏற்படுத்திக்கொண்டேன் என்றார். பழக இனிய பண்பாளர், ஊக்கத்தை தந்து சோர்வடைய விடாது தட்டிக்கொடுப்பார். எனது நூல்வெளியீட்டில் நான் தயங்கிய போது என்னை ஊக்கப்படுத்தி நாங்கள் இருக்கின்றோம் என்ன உதவி தேவை யானாலும் கேளுங்கள் என்றார். என அவரின் குணவியல்பினைப் பாராட்டிப் பேசினார்.

முன்னைநாள் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் சின்னையா சிவநேசன் உரையாற்றும்போது கவிஞரோடு நெருங்கிப்பழகும் வாய்ப்பு மிக

த. சிவபாலு என்னை மேடையில் பேசவும் எழுதவும் தூண்டியவர்கள். இருவர் ஒருவர் அதிபர் பொ. கனகசபாபதி அவர்கள் மற்றவர் கவிநாயகர் கந்தவனம் அவர்கள். உன்னால் முடியும் என உற்சாகப்படுத்தி மேடையேறக் காரணிகள் அவர்கள். சபையில் இருப்பவர்களில் இருவர் ஆவது பேசுவதின் கருத்தை உணர்ந்துகொண்டால் அதுவே போதும் என்றதனை மனதிருத்திப் பேசுதல் வேண்டும் மக்கள் தொகையைப் பற்றிச் சிந்திக்கவேண்டாம் என அடிக்கடி அவர் கூறுவார். பேசி மேடையால் இறங்கினால் நல்ல பேச்சுத்தம்பி என அண்ணனாக உரிமையோடு தோழில் தட்டிக்கொடுக்கும் பண்பு அவரிடம் நான் கண்ட உயர்ந்த பண்பு. என்னைத் தம்பி என உரிமையோடு அழைக்கும் அந்த நெகிழ்வு என்னை அவர்பால் மாறாத அன்பையும் ஈடுபாட்டையும் ஏற்படுத்தித்தந்தது. எனது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய கவிநாயகரும் துணைவியாரும் நீண்டகாலம் வாழ்ந்து சமய சமுதாய தமிழ்ப்பணியாற்றவேண்டும் எனப் பாராட்டினார்.

தொடர்ந்து உரையாற்றிய மணி வேலுப்பிள்ளை கவிஞர் அவர்கள் தம்பி

**தொடர்ச்சி 37ஆம் பக்கம்**

**LAW OFFICE**
**STEFANO FORTINI**
B.A., LL.B., Barrister & Solicitor
*3 Catherine Avenue,*
*Aurora, Ontario*
*L4G 1K4*
*Tel: 416.999.4376*
*Fax: 905.727.7017*
*Email: sfortini@rogers.com*

**Tax related services Income Tax & HST**
Unfiled returns from 2005
Filing Under Voluntary Disclosure Program (VDP)
Tax Appeals
SR & ED Investment Tax Credits
Individual and Corporate Taxation
Company Incorporations
Business Registration
Business Plans
Emergency Business Loans - upto $ 5 M
GIC -GIA
GIC - The Bank Provides
GIA - Is available with the Insurance Company (agent comes to your house)
The interest rate for the GIA is higher than the GIC and they are both guarenteed
THE INCOME TAX CALCULATION FOR SENIORS IS BETTER FOR THE GIA
Phone: Siva (416) 901-0929 Yoga 416-492-7957
www.sivassolutions.ca
Email: siva@sivassolutions.ca
Sivas Solutions
708-419 Markham Rd Toronto M1J 3C1


மீண்டும் ஓர் புதிய அறிமுகம்.........!!
Niru Brand Tamarind Paste!!!
புளி விதைகள் முழுமையாக நீக்கப்பட்டது...
இலகுவான சமையல் தேவைகளுக்கு மிக உகந்தது...
நீர் விட்டுக்கரைக்க வேண்டிய அவசியமில்லை...
Pâte de Tamarin
Premium Quality
Ready to use
தரம், சுவை என்றென்றும்!!!
இப்போது உங்கள் அபிமான தமிழ்க்கடைகளில் கிடைக்கிறது

# வௌவாலின் துரோகம்

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் இடையே சண்டை ஏற்பட்டது. இச்சண்டை, யார் உலகை ஆளப் போகும் உயிரினம் என்று கண்டுபிடிப்பதற்காகத்தான் நடந்தது. இதனால் இச்சண்டை பெரும் போராக நடந்தது. ஒரு பக்கத்தில் காகம், புறா, கொக்கு, கழுகு போன்ற பறவைகளும், மறு பக்கத்தில் யானை, ஒட்டகம், சிங்கம், புலி, நாய் போன்ற மிருகங்களும் சண்டை பிடித்தன.

இவர்களின் நடுவில் வௌவால்கள் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தன. தொடக்கத்தில் பறவையினம் வெல்வது போல் தோன்றியதால் வௌவால்கள் எல்லாம் பறவைகளிடம் சென்றன. 'நாங்கள் உங்கள் இனம் தான். எங்களால் உங்களைப் போல் பறக்க முடியும்' என்று வௌவாலின் தளபதி கூறியது. பறவைகளின் சேனாதிபதியான வாத்து, சரி என்று வௌவா-ல்களை தங்களுடன் சேர்த்தது.

ஆனால் இப்போது பறவைகள் போரில் தோற்கத் தொடங்கின. நூற்றுக்கணக்கில் பறவைகள் இறந்தன. வௌவால்களும் இறந்தன. 'Dodo' என்ற ஒரு பறவையினமே இப்போரில் முற்றாக அழிந்தது.

எனவே வௌவால்கள் அனைவரும் அவர்களது தளபதியிடம் சென்று என்ன செய்வது என்று கேட்டன. அவை கடைசியில் மிருகப்பக்கத்திற்கு



மாறலாம் என்று நினைத்தன. அதனால் அன்றிரவு, வௌவால்கள் ஆந்தை காவலர்களது பார்வையில் இருந்து மறைந்து மிருகப்பக்கத்திற்கு சென்றன.

அங்கு வௌவால் தளபதி, மிருகங்களிடம் 'நாங்கள் உங்கள் பக்கம். எங்களை உங்களுடன் சேர்த்துக் கொள்ளுங்கள்' என்றது. மிருகங்களின் மந்திரியான ஆமை, 'ஆனால் நீங்கள் பறப்பீர்களே?' என்று சந்தேகப்பட்டது. வௌவால், 'இதோ! என் உடலை பாருங்கள்! நான் சுண்டெலியின் சகோதரர்!' என்றது. ஆமையும் சரியென தலையாட்டியது.

இதன் பின்னர் சில காலத்தில் போரும் ஒரு பக்கமும் வெற்றியோ தோல்வியோ இல்லாமல் முடிந்தது. கடைசியில், சிங்கத்தை காட்டுக்கு அரசராகவும், பருந்தை வானத்தின் அரசராகவும் நியமிக்கப்பட்டு பறவைகளும் மிருகங்களும் சமாதானமாயின. இதை கொண்டாட ஒரு திருவிழா நடத்தினர்.

இவ்விழாவில், எல்லா இனத்தின் தலைவர்கள் கலந்து கொள்ளும் விருந்து நடைபெ-பற்றது. இதில் வௌவால்களின் தலைவர் மிருகங்களோடு இருந்ததைக் கண்டு வாத்தின் தலைவரான பறவைப்படையின் சேனாதிபதி ஆச்சரியப்பட்டது.

'நீ எவ்வாறு இங்கே? உன் இனம் அழிக்கப்பட்டது என்று நினைத்தோம்?' என்று கூறியது. 'நீங்கள் துரோகியா?' என்று ஆமையும் கேட்டது. 'எங்கள் நண்பர்களின் துரோகி எங்கள் துரோகி!' என்று குரங்கு தலைவர் கூறியது. சிங்கமும் பருந்தும் கலந்தாலோசித்து, பின்னர் வௌவாலின் துரோகத்திற்கு தண்டனை அளித்தனர். 'இனி உங்கள் இனம் இரவில் மட்டும் தான் வெளியே செல்ல முடியும். நீங்கள் காலையில் சென்றால் குருடர்கள் ஆவீர்,' என்றன.

வௌவால் தளபதியும் இதைக் கவலையுடன் ஏற்றுக்கொண்டு தன் இருப்பிடத்திற்கு திரும்பி சென்றது.

**நீதி: கூடிப் பிரியேல்** (ஆத்திசூடி)



**ஞா. ஆரணி**
**அகவை 15**

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# காதலர் தினம்

அகிலம் முழுவதும் கொண்டாடப்படும் காதலர்தினம்
அது உருவான கதை தெரிய வேண்டுமா?
அனைவரும் களித்திருக்கும் இந்நாள் அன்று
அவலத்தின் பின் உருவான நந்நாள்.

வலன்டைன் என்னும் கிறிஸ்தவ பாதிரியார் அன்று
வன் சிறையில் அடைக்கப்பட்டு வதைக்கப்பட்டு
வயர்கல்லால் அடித்து சித்திரவதை செய்யப்பட்டு
வதம் செய்யப்பட்ட நாளே இந்நாள்.

கி.பி. 270வது வருடம் மாசித்திங்கள் பதினான்கில்
கிறுக்குத் தனமாகவும் கீழ்த் தனமாகவும்
கிலேசம் அறியா ஆட்சி செய்த கிராதகன்
கிளாடியஸ்- இரண்டுஎன்ற உரோமானியச் சக்கரவர்த்தி
கிஞ்சித்தும் யோசியாமல் ஆணையிட்டான்
ஒருகட்டளையை----- ஏன்?

அவனது வீரர்கள் படையைவிட்டு விலகத் தொடங்கினார்கள்
அத்துடன் யாரும் படையில்சேரவும் மறுத்துவிட்டார்கள்
அரசவை அமைச்சர்களும் அதிகாரிகளும் அரசனுக்கு
ஆக்கபூர்வமான ஆலோசனை எதனையும் அளிக்கவில்லை
ஆவேசம் கொண்ட மன்னனுக்கு ஆத்திரம் தலைக்கேறியது.

அன்பு மனைவியரை ஆசைக் காதலிகளை விட்டு
அரசபடையில்சேர மறுக்கிறார்கள் என்று எண்ணி
அநியாயக் கட்டளை ஒன்றை அவசரமாய் அறிவித்தான்
அடுத்த கட்டளை வரும்வரை யாரும்
அறிவித்தல் செய்யப்பட்ட திருமணங்கள் உட்பட
அனைத்தையும் அரங்கேற்றக் கூடாதென ஆணையிட்டான்.

அநியாய கட்டளையை அறிந்து நாடே கலங்கியது
அதை அறிந்த பாதிரியார் மனம் வெதும்பியது
அரச கட்டளையைமீறி இரகசியத்திருமணங்கள் செய்து வைத்தார்
அரசனின் காதுக்கு எட்டியது இச்செய்தி
அவர் கைதுசெய்யப்பட்டு இருட்டுச்சிறையில் அடைக்கப்பட்டார்.

அஸ்டோரியஸ் என்ற பார்வையற்ற,
சிறைக்காவலர் மகளுக்கும்
அன்பான பாதிரியாருக்கும் அன்புப் பூ மலரத் தொடங்கியது
அரசன் பாதிரியாருக்கு மரணதண்டனைக்கு நாள் குறித்தான்
அரும்பாடுபட்டாள் அஸ்டோரியஸ் பாதிரியாரை சிறைமீட்க
அதையறிந்த அரசன்அவளை வீட்டுக்காவலில் வைத்தான்.




அபலைக்கு கனவுகள் கலைந்தன வேதனைகள் வாட்டின
அரசஆணையைமீறி அவளால் எதுவும் செய்ய முடியவில்லை
அரசனின் ஆணை நிறைவேற்றும் நாள்வந்தது
அவசரமாக எடுத்தார் ஒரு காகிதஅட்டையை
அன்புக்காதலிக்கு வரைந்தார் ஒரு காதல்கவிதையை.

அரிவையின் கையில் காதல்கவிதை வந்து சேர்ந்தபோது
அன்புக்காதலன் பாதிரியாரின் தலை துண்டிக்கப்பட்டிருந்தது
அந்தரங்க தோழி கவிதையை வாசித்துக்காட்ட
அஸ்டோரியஸ் கண்களிலிருந்து கண்ணீர் அருவியாய்க் கொட்டியது
அந்த காதல்வரிகளை நாமும் படிப்போம்.

விழி இருந்தும் மன்னன் பழி தாங்கிப்போகின்றேன்
விழி இழந்து பார்க்க வழி இழந்து---- நீ
மனவலி தாங்காது கதறும் ஒலி கேட்டும்
உனை மீட்க வழி தெரியாமல்
மக்களுக்காய் பலி ஆடாய் போகின்றேன் -- நீ
ஒளியாய் வாழ் பிறருக்கு வழியாய் இரு
சந்தோச ஒளி உன்கண்களில் மின்னும்.
உன்னுடைய வலண்டையின்



**- மார்க்கம் சந்திரன்-**
E-Mail-chandranvela07@gmail.com

விளம்பரம் பத்திரிகையை
இணையத்தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com

# Education

## Review Tutorials 14 -3

### ➢ CALCULUS & VECTORS 12

Find the limits $\lim_{x\to 0} \frac{ax^2+bx+c}{cx^2+bx+a}$

(ii) $\lim_{h\to -4}\left(\frac{\frac{1}{4}+\frac{1}{h}}{4+h}\right)$ (iii) $\lim_{x\to 1}\frac{x^6-1}{x^{10}-1}$

(iv) $\lim_{x\to 2}\frac{x+2}{x^3+8}$ (v) $\lim_{x\to -3}\left(\frac{3x^3-4x+3x^2-12}{x^2-9}\right)$

(vi) $\lim_{x\to -1}\frac{x^2+x-5}{x+1}$

### ➢ BIOLOGY 12

(i) Distinguish between the glycosidic linkages found in starch and cellulose and explain why the difference is biologically important.

(ii) Identify and name the following compound.



(iii) What are .
(a) allosteric enzymes b) apoenzymes
c) holloenzymes d) prosthetic groups
e) zymogens

### ➢ BIOLOGY 11

State viruses are not considered in any of the five-kingdom system

### ➢ PHYSICS 11& 12

Two balls are thrown vertically upward, one after the other with a 1.2 s time difference. Balls reach maximum heights at the same instant (these heights are different). If the initial speed of the first ball is 25.0 m/s, determine the initial speed of the second ball.

### ➢ CHEMISTRY12

Determine heat of combustion of $C_3H_8(g)$ given that,

$H_{2(g)} + ½\ O_{2(g)} \rightarrow H_2O_{(l)}\quad \Delta H^\circ = -285.8kJ$

$C_3H_{4(g)} + 4\ O_{2\,(g)} \rightarrow 3\ CO_{2(g)} + 2\ H_2O_{(l)}\quad \Delta H^\circ = -1937kJ$

$C_3H_{4(g)} + 2H_{2\,(g)} \rightarrow C_3H_{8(g)}\quad \Delta H^\circ = 290kJ$

## Answer Key : 14-2

### CHEMISTRY 12

(i) **The emission spectrum of atomic hydrogen is divided into a number of spectral lines.** These lines are due to electrons moving between energy levels in the atom. Transition of electron in hydrogen between quantized energy levels with different quantum numbers yields a photon by emission with quantum energy

**(ii) Third ionization energy magnesium ( $Mg^{2+} \rightarrow Mg^{3+}$ ) is greater than that of Fluorine ( $F^{1+} \rightarrow F^{2+}$ ).**

Reason – removal of an electron from an octet ($Mg^{2+}$, electrons in orbital , 2,8) is harder.

### PHYSICS 11& 12

For the 2[nd] one, $v_1 = 0$, $v_2 = 12.0$m/s, a= 9.8m/s²

$$t = \frac{12-19.6}{9.8} = 2\ s$$

First ball , t = 4s

Therefore distance fall $\Delta d = v_1t + ½\ at^2$

$\Delta d_1 = 0 + ½ \times 9.8 \times 4^2 = 78.4$m

Second ball , t = 2s

Therefore distance fall $\Delta d = v_1t + ½\ at^2$

$\Delta d_2 = 0 + ½ \times 9.8 \times 2^2 = 19.6$m

(ans=78.4m -19.6m = 58.8m)

### FUNCTIONS 11

(i) $x(x-2)(x+2)(x^2+4)$

(ii) Lets take the speed of the bus $x$ km/h

$time = \frac{distance}{speed}$ therefore $\frac{400}{x} - \frac{400}{x+10} = 2$

Solve for $x$ $(x+50)(x-40)=0$, **(speed 40km/h)**

### ADVANCED FUNCTIONS 12

(a) -4, +2 ; 3; + ; 3 to 1 b) +3, +5; 4; +; 2 to 1
c) -4, +2 ; 4; - ; 3 to 4

### BIOLOGY(Gr12)

**Cyclic Photophosphorylation-** requires only PS-I, electron emitted by P700 is recycled back and no external source of electron is needed. It synthesizes only ATP, Oxygen is not evolved. It operates at low light intensity, less availability of $CO_2$ and under anaerobic conditions.

**Non-cyclic Photophosphorylation** -It requires PS-I and PS-II. It needs external electron donor. It forms ATP as well as $NADPH_2$. Oxygen is liberated due to photolysis of water.

(i) In the α- helix and β- pleated sheet hydrogen bonds form between carbonyl e of the other residues. In the α- helix. H bonds are intra chain, and parallel to the helix axis. In β- pleated sheet H bonds are inter-chain and are nearly perpendicular to the chain axis.

(ii) mRNA

*Answer key 14- 4 - next issue*

**Contact: 647 341 3975**

**ask@ keentutoringcentre.com**

KEEN TUTORING CENTRE

# பிடித்தவர்கள்

23ஆம் பக்கத்தொடர்ச்சி

'சரி, இரு. உன்னைப் போலை ஆயிரம் பேரைப் பாத்தனான். எனக்கு உன்னையும் தெரியும் உன்ரை அப்பனையும் தெரியும். உன்னை என்ன செய்ய வேணுமெண்டும் தெரியும். வடிவாய் இரு, வாறேன்.'

கந்தசாமி எத்தனையோ கேள்விகள் கேட்டுப் பார்த்தான் ஒன்றுக்குமே பதிலில்லை. ஓரக்கண்ணால் பக்கப்பாட்டில் பார்த்து, தான் எவ்விடத்தில் நிற்கிறேன் என்று பார்க்க,

அடக் கடவுளே! இன்னமும் மொட்டையன் வளவு தாண்டேல்லை. கறுப்பனும் வெள்ளையனும் போகாமல் நிக்குதுகளோ!

கடுமையான சிவப்பு ஒளியானாலும் ஒன்றுமே தெரியேல்லை.

மாடுகளின்ரை மணிச்சத்தம் வருகுதோ என்று காதுகளைக் கூர்மையாக்கிக் கேட்டுப் பார்த்தான்.

ஏதோ சத்தம், பயங்கரமாகப் பின்புறமாகக் கேட்க, கந்தசாமி தன்னையுமறியாமல் பின்புறமாகத் திரும்பிப் பார்த்தான். வளரும்....

# காதலர் தினம்



கண்ணும் கண்ணும் கலந்து கொண்ட
காதலர் நாளாம் இன்று
கன்னியரும் காளையரும்
கைகோர்த்து கழிக்கும் நாளாம்

மணம் வீசும் மலர் கொடுத்து
மகிழும் நாளாம் இன்று அவர்கள்
மனம்விட்டுப் பேசி தேன்
மது உண்ணும் நாளாம்

நெஞ்சோடு நெஞ்சணைத்து இருவரும்
நெருங்கி நின்று மகிழும் நாளாம்
நெடுநாட்களாய் ஒன்று கூடாதவரும்
நெருங்கிக் கூடும் நாளாம்

சோலையிலே பூத்தமலர்களைப் பறித்து
சாலையிலே வைத்து விற்கும் நாளாம்
சாயங்காலம் காதலர்கள் மேடையிலே
சாய்ந்து சாய்ந்து ஆடும் நாளாம்

கட்டளையை மீறி அன்று
காதலர்களை சேர்த்து வைத்த பாதிரியார்
வொலாண்டையினை நினைவுகூறும்
வொலண்டையின் டேயாம்.

- கவிநாதம் - பரந்தாமன்




PARTY HALL
EVENT CENTRE
MEETING PLACE

AVAILABLE FOR RENT

Starting from $100.00

Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting, புத்தக வெளியீடு, கலந்துரையாடல்... போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ஏறக்குறைய 50 பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு. GTA Square Mall (FINCH & MIDDLEFIELD) தொடர்புகளுக்கு: 416.917.6883

# கனடாவுக்குள் இயமன் வருவானா? (B)




என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள். நலம் பெறப் பிரார்த்திக்கிறேன். கனடாவுக்குள் இயமன் வரமாட்டான். ஏன்? விசா கொடுக்கமாட்டார்கள்?

முன்பு வந்து டிப்போட்டேஷனில் போனவரை திரும்பவும் அனுமதிக்கமாட்டார்களா? அல்லது கனடா வாழ் மக்களின் தலைவிதியை இறைவன் மாற்றி எழுதிவிட்டானா? இவை எல்லாம் காரணம் இல்லை. இயமன் இங்கு வருவதற்குப் பயப்படுகிற வேறு காரணங்கள் உண்டு.

நண்பா!
இங்கு ஒருவர் ஒருவரைக் காட்டி இவர் இயமனைப் பச்சடி போட்டவர் என்கிறார். இன்னொருவர் வேறு ஒருவரைக்காட்டி அவர் இயமனுக்கு இரும்பு கொடுத்தவர் என்கிறார். இன்னுமொருவர் வழியால் போகிற ஒருவரைக் காட்டி இவர் இயமனைத் திண்டவர் (தின்றவர்) என்கிறார். குறிப்பிட்ட மூவரும் கனடாவுக்குள் இருக்கிற போது இயமன் எப்படி இங்கு வருவான். ஏன் சிரிக்கிறாய்? இவர்களில் யார் கெட்டிக்காரர், புத்திசாலி என்று யோசிப்பது ஒரு சுவாரஸ்சியம். இயமனுக்கு இரும்பு கொடுத்தவரே புத்திசாலி கெட்டிக்காரர் என்பேன். ஏன்? அவர் அதிட்டக்காரரும் கூட. உனக்கு இதிலே உடன்பாடு இருக்காது. பச்சடி போட்டவரை அல்லது திண்டவரைக் கெட்டிக்காரார் என்று நீ தெரிவு செய்யலாம். காரிய சித்தி என்பதிலுள்ள சிடுக்குளைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பச்சடி போட்டவர் இயமன் எங்காவது பராக்குப் பார்த்துக் கொண்டிருந்த தருணத்தைப் பயன்படுத்தி அவனுக்குப் பின்னால் போய் முதுகிலே ஏதாவது ஆயுதத்தால் மோதிக் கொன்று பின்பு அம்மியிலே வைத்து அரைத்து தேங்காய் மிளகாய் சேர்த்து உள்ளியோடு புளியும் விட்டுக் குழைத்துத் திரட்டி எடுத்திருக்கலாம்.

இயமனைத் திண்டவர் என்பவரும் இயமன் வேறு காரியமாய் குனிந்து கொண்டிருக்க மறைவாகப் போய் கோடலியால் கொத்திப் பிளந்து வெட்டிக் கறிவைத்தோ குழம்பு வைத்தோ சோற்றோடு பிரட்டித்தின்றிருக்கலாம். இரும்பு கொடுத்தவர் இருக்கிறாரே இவர் என்னபாடுபட்டிருப்பார் என்று ஆறுதலாக இருந்து வேண்டுமானால் 'றம்' போட்டு நாலுபேரோடு நன்றாக அலசி ஆராய்ந்து பார்.

நண்பா!
இரும்பு கொடுப்பதானால் இயமனுக்கு நேரே முகத்துக்கு முகம் கொடுத்த படி போக வேண்டும். இயமனின் பூதாகார உருவத்தையும் அவன் ஏறியிருக்கும் எருமைக்கடாவையும் அவன் கையிலே வைத்திருக்கும் திரிசூலத்தையும் நினைத்துப்பார் அவனைக் கண்டிருப்பாயா? எங்காவது படத்தில் பார்த்திருப்பாய். இயமனைப் படம் பிடித்தவனும் இரும்பு கொடுத்தவனுக்கு நிகரான கெட்டிக்காரனே.

இயமனைச் சுற்றி இயமதூதுவர்கள எனப் பலர் காவலில் நிற்பார்கள். இவர்களை எல்லாம் தாண்டி இரும்பு கொண்டு போகிறவரிடம் இயமன் கை நீட்டி இரும்பை வாங்க வேண்டுமே! என்ன நடந்திருக்கும்? புத்திசாலித்தனத்தோடு தந்திரசாலித்தனமும் இருந்தால் தான் இது சாத்தியமாகும். மற்ற இருவரும் புத்திசாலிகள் மட்டுமே. இரும்புகொடுத்தவர் புத்திக் கூர்மையும், தந்திரக்கூர்மையும் உடையவர். நரித்தந்திரத்தைவிட இவரிடம் ஒரு நாகரித்தந்திரமும் இருந்திருக்கும்.

நண்பா!

இந்த மூவரும் கனடாவுக்குள் இருக்கும் போது இயமன் எப்படி இங்கு வருவான். வரமாட்டான். நிற்க. இந்த மூவரையும் கட்டி அவிழ்க்கும் கனடா அரசின் புத்திசாலித் தனத்தையும், தந்திரத்தையும், சாதுரியத் தையும், விழிப்போடு இவர்களைக் கண்காணிக்கும் காரிய வீரியத்தையும் என்னென்பேன்! என்னென்பேன்!

எழுதிச் செல்லும் விதியின்கை. தலை எழுத்து எப்பவோ முடிந்த காரியம். (யோகர்) பிறக்கும் போதே ஒருவருக்கு இறக்கும் நாளும் குறிக்கப்பட்டு விடும் என்பதெல்லாம் கனடாவில் காலாவதியான கருத்துக்களே. அந்தகன் வரும்போது அவனியில் யார் துணை? என்ற பாட்டுக்கு இங்கு பொருள் இல்லை. இப்படியான சூழ்நிலையில் பழசுகள் என்னாவது என்றா கேட்கிறாய். பழசுகள் ஆரோக்கியமாகவும் ஆனந்தமாகவும் இங்கு வாழப் பிரார்த்திப்போம். அவர்கள் நம்மவர்கள். உடன் பிறப்புக்கள். அனுபவப் பொக்கிஷங்கள். அவர்கள் நம்மோடு இருப்பது நல்லதே. சந்தோஷமாக அவர்கள் இருக்க நாம் உறுதுணையாய் விளங்குவோம். கனடாவில் உடல் ஆரோக்கியமாய் இருந்தால் **'நீண்டநாள் வாழலாம், நினைத்ததை அடையலாம்'** என்கிறார் விளம்பரம் பத்திரிகையில் ஆரோக்கிய வாழ்வு குறித்து எழுதிவரும் N. செல்வசோதி. கனடாவில் உடல் ஆரோக்கியமும், உவகையோடு வாழ்வதற்கு திருப்தியான வருவாயும், அன்பு செலுத்தி மகிழ்வதற்கு நல்ல உறவுகளும் அமைவதே முக்கியம். இந்த மூன்றுக்குமாய் இறைவனைப் பிரார்த்திப்போம். முதியோரைப் பேணி இறையோரை வழி நடத்தி வாழ வேண்டுதல் செய்வோம். வேண்டப்படுவதை அறியும் இறைவன் வேண்ட முழுவதும் தருவான். நம்பிக்கை முக்கியம். நம்பினோர் கெடுவதில்லை இது நான்கு மறைகளின் தீர்ப்பு.



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

# சரிநிகர் சமானமாக்க முயற்சித்த அதிபர்

## அரியமலர் இராஜரட்ணம்



பெண் அடக்குமுறைக்கு சாவு மணியடிக்கும் முயற்சிக்கு முட்டு கொடுத்தவர் வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் அரியமலர் இராஜரட்ணம். யாழ்ப்பாணத்தில் பெண்கல்வி வளர்ச்சியடைந்த நிலையில் இன்று காணப்படுவதற்கு உழைத்தவர்களில் முக்கியமானவர்கள் பலர். இராமநாதனும் பெண்கள் கல்லூரி அமைத்து உதவினார்தான். பெண்கள் பிரச்சனைகளை மையமாக வைத்து நாவல் எழுதிய மங்களநாயகி முக்கியமானவர்தான். பெண்கள் கல்லூரிகள் அமைக்கப்பட்டுக் காலனித்துவம் பெண்கள் முன்னேற்றத்தில் நகரப்புறப் பகுதிகளில் அக்கறை காட்டியது உண்மை. அதனால் நகரப் புறத்துப் பெண்கள் ஆசிரியர் வேலைகளைப் பெறக் கூடியவர் ஆகினர். எனினும் ஏனைய துறைகளில் குறிப்பாக வருவாய் கூடுதலாகப் பெறும் வைத்தியர், பொறியியலாளர் பதவிகள் ஆண்கள் கையில்தான் இருந்தன. மேற்கத்தைய கலாச்சாரத்திலும் பெண் போகப் பொருளாகத்தான் பார்க்கப்பட்டாள். பிள்ளைகளைப் பெறும் வெறும் யந்திரமாகத்தான் கருதப்பட்டாள். இன்றும் ஐ. நா. புள்ளிவிபர மதிப்பீட்டின்படி பெண்களைவிட ஆண்கள் சராசரியாக அதிகூடிய ஊதியத்தைப் பெறுகிறார்கள்.

இந்தப் பின்னணியில் பார்க்கும்போது எமது நாட்டில் பெண்கள் ஆண்களைவிட மிகக் குறைந்த ஊதியத்தையே பெறுகின்றனர். வேம்படி அதிபர்களாக வந்த செல்வி ஆறுமுகம், திருமதி அரியமலர் இராஜரட்னம் போன்ற பெண் அதிபர்கள் ஆண் பாடசாலைகளின் பெறுபேற்றுடன் போட்டி போட பகீரதப் பிரயத்தனத்துடன் பெண்களை ஆயத்தப்படுத்தினர். அவர்களுக்கு உற்சாகம் ஊட்டினர். ஜானகி, ரோஹிணி போன்ற பொறியியலாளர்களையும் சுமங்களா, தஞ்சா, மதி போன்ற கணக்கியலாளரையும் மலர்விழி, மதுமொழி போன்ற வைத்தியர்களையும் யசோ போன்ற சட்டத்தரணிகள், நவராஜகுலம் போன்ற பாடகிகள் எனப் பலவிதமான உயர் பதவிகளைப் பெண்கள் வகிப்பதற்குக் காலாக நின்றவர்கள் வேம்படி அதிபர்கள்.

அன்னார் மாணவர்மீது மிகுந்த அன்பும் ஆதரவும் காட்டுபவர். இரக்க சுபாவம் உள்ளவர். அவருக்கு மாணவர் நலன்தான் எல்லாமே. 80களில் நடந்த அராஜகங்களிலிருந்தும் பாடசாலையைச் செல்லடியிலிருந்தும் இந்திய இராணுவத்தின் சுவீகரிப்பிலிருந்தும் காப்பாற்றியவர். மிக மோசமான செல்லடிகளின்போது அதிபரை இறந்ததாக அவர் உறவுகளும் மகனும் நம்பினர். ஆனால் அதிபர் தன் கணவனுடன் மீண்டும் எழுந்துகொண்டார். மானிப்பாய் இந்துக் கல்லூரியல் கற்பித்துப் பின்னர் மானிப்பாய் பெண்கள் கல்லூரியல் அதிபராகினார். வேம்படி அதிபருக்கு இரத்தந் தோய்ந்த சாவாலாக இருந்தது. "தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா" எனத் தமிழையும் மக்களையும் நேசித்தவர். இந்திரா காந்தி என அவர் உருவ ஒற்றுமையை கண்டு பலரும் மெய்மறப்பதும் நிகழ்கின்றது.

- முனைவர் பார்வதி கந்தசாமி


YOGA - MEDITATION CLASSESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்


மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்
GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது
தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# MAHAJANAN CONTEST 2014

கணிதம், பொதுஅறிவு போட்டிகளிற்கு, தரம் 1 முதல் 12 வரையுள்ள மாணவரும், தமிழ் மொழிக்கான போட்டிக்கு, தரம் 1 முதல் 8 வரையுள்ள மாணவரும் பங்குபற்றலாம்.
வெற்றி பெறுவோருக்கு தங்க, வெள்ளி, வெண்கலப் பதக்கங்களுடன்,

## விஷேட பரிசில்களும் வழங்கப்படும்.

பதிவுக்கட்டணமாக, விண்ணப்பத்தாரருக்கு 25 டாலர்களும், மூன்று அல்லது மூன்றிற்கு மேற்பட்ட விண்ணப்பத்தாரர்கள் உள்ள குடும்பம் ஒன்றிற்கு 60 டாலர்களும் அறவிடப்படும்.
**தமிழ்ப் போட்டியில் மட்டும் பங்கு பற்ற 10 டாலர்கள் மட்டும் அறவிடப்படும்.**

பதிவுகளுக்கு: இணையத்தள இணைப்பு - http://mahajanan.org/Contest2014.htm

மேலதிக விபரங்களுக்கு, அழையுங்கள் - **416 705 1493, 416 451 8427, 905 861 9323**

First Name ____________________ Last Name ____________________

Gender _____ Grade _____ Math _____ G. K _____ Thamil ____________________

Email Address ____________________ T. Phone ____________________

**Sunday, March 02, 2014 .8.30am**

**Sir John A. Macdonald Collegiate Institute, 2300 Pharmacy Ave, Scarborough, Ontario.**



**MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION – CANADA**
மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா
(Registered as a non profit organization in Canada, No: 001100556)

---

**MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION – CANADA**
மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா
(Registered as a non profit organization in Canada, No: 001100556)

**எமது சங்கத்தின் வெள்ளி விழாவினை முன்னிட்டு**
**பாட்டுப் போட்டி நடைபெற உள்ளது**

**ஒவ்வொரு பிரிவிலும் வெற்றி பெறும் மூன்று (3)**
**போட்டியாளர்களுக்கு பணப் பரிசுகள் வழங்கப்படும்**



### போட்டி விதிமுறைகள்

**கீழ்ப் பிரிவு (JG)**

1) **வயது:** 1999 மார்ச் 01 திகதி முதல் 2006 மார்ச் 31 வரை பிறந்தோர் (இத்திகதிகள் உட்பட)
2) **பாட்டு:** மூன்று (3) தமிழ் கீர்த்தனங்களும், இரண்டு (2) சினிமாப் பாடல்களும் விண்ணப்பத்துடன் தெரிவு செய்து அனுப்பவேண்டும்.
3) **முதற் சுற்றில்:** ஒரு சினிமாப் பாடலும், 4 முதல் 6 நிமிடத்திற்குட்பட்ட தமிழ் கீர்த்தனையும் பாடவேண்டும்.

**மேல் பிரிவு (SG)**

1) **வயது:** 1991 மார்ச் 01 திகதி முதல் 1999 பெப்ரவரி 28 வரை பிறந்தோர் (இத்திகதிகள் உட்பட)
2) **பாட்டு:** மூன்று (3) தமிழ் கீர்த்தனங்களும், இரண்டு (2) சினிமாப் பாடல்களும் விண்ணப்பத்துடன் தெரிவு செய்து அனுப்பவேண்டும்.
3) **முதற் சுற்றில்:** ஒரு சினிமாப் பாடலும், 7 முதல் 9 நிமிடத்திற்குட்பட்ட தமிழ் கீர்த்தனை ஒன்றினையும் இராக ஆலாபனை, கற்பனாஸ்வரங்களுடன் பாடவேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி: March 29th 2014**

மேலதிக தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கங்கள்:

Skanda........(416) 568 4905
Yaso...........(416) 208 9208
Sivathasan..(647) 346 4913
Jevandran...(416) 705 1493

விண்ணப்பத்தையும், போட்டி விதிமுறைகளையும் பின்வரும் மின்அஞ்சல் முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். contest@mahajanan.org (Our web site: www.mahajanan.org)

# கவிநாயகர்...

31ஆம் பக்கத்தொடர்ச்சி

மணி என்று என்னை முதல்நாள் கண்டதுமே அழைத்தமை எனக்கு இனம்புரியாத இன்பத்தையும் அவர்பால் பற்றையும் ஏற்படுத்தியது என உணர்ச்சி ததும்ப எடுத்துரைத்து சொற்றொகுதிக் குழுவுக்கு கலகலப்பாக கருத்துத் தரும் கவிஞரைப் பாராட்டாமல் இருக்கமுடியாது என்றார். தொடர்ந்து சிந்தனைப் பூக்கள் பத்மநாதன் அவர்கள் உரையாற்றும்போது கவிஞரால் எழுதப்பட்ட ஆங்கிலக் கவிதை நூலிலிருந்து சில வரிகளை எடுத்துக்காட்டி அவரது திறமையைப் பாராட்டியர்களின் உரைகளையும் எடுத்துக்கூறி கவிநாயகரை வியந்து பாராட்டினார்.



முனைவர் பார்வதி கந்தசாமி அவர்கள் உரையாற்றும்போது அவரைக்காணும்போது எனது தந்தையாரின் நினைவுதான் எனக்கு வரும். தோற்றத்திலும் பிள்ளை என அன்பாக அழைப்பதிலும் என்னைக் கவர்ந்தவர். என்னைத் தனது மகளாக மதிக்கும் பண்பு கொண்டவர். அவரோடு பழகுகின்றவர்களை அன்போடு அணைத்துச் செல்லும் பழக்கம் அவருக்குப் பெருந்தொகையான உறவுகளைப் பெற்றுத் தந்துள்ளது. நன்றாகச் செய்தீர்கள் பிள்ளை என்று அவர் பாராட்டும் போது அகமகிழ்ந்து உளம் பூரிக்கும். அதற்கு அவரது அன்பு கலந்த வாழ்த்தும் பாராட்டுகளுமே காரணம் என்று பாராட்டி வாழ்த்தினார்.

தொடர்ந்து முனைவல் கௌசல்யா சுப்பிரமணின் அவர்கள் எனக்கு ஆசானாக இருந்தவர், அவரிடம் உள்ள உயரிய பண்புகளும் ஆற்றலும் அவரை உயர்த்தி வைத்துள்ளன எனக்குறிப்பிட்டு பாராட்டி வாழ்த்துரைத்தார்.

குயின்ரஸ் துரைசிங்கம் உரையாற்றும் போது கவிஞரின் உரையாடல்கள், கவிதைகள் என்னைக் கவர்ந்தவை என்றதோடு அவரோடு இணைந்திருப்பது, பேசுவது பழகுவது எல்லாமே ஒரு புது அனுபவத்தை தருகின்றது. நாம் அவரிடமிருந்து கற்றுக் கொள்வது அதிகம். அவர் நீண்டகாலம் வாழ வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக்கொள்கின்றேன் என்றார்.

கவிநாயகர் அவர்கள் எனக்கு இவ்விதமான ஒரு நிறைவான உள்ளத்தில் உள்ளவற்றை பேச்சாக அன்றி கருத்துக்களாக பேசி மகிழ்ந்து என்னை மகிழவைத்தமை எனக்கு உண்மையிலேயே நிறைவைத்தருகின்றது. எனது இளமைத் தோற்றத்தைப் பற்றிக் கேட்கின்றீர்கள் அதற்கு ஒழுக்கமும் மனதில் கரவற்ற நிலையுமே காரணம் எனவும் குறிப்பிட்டதோடு வழமைபோல அதிபர் கனகசபாபதி அவர்கள் எனது நீண்டகால நண்பர். நாங்கள் இருவரும் எதனையும் மனதில் போட்டுக்கொள்ளாமல் என்றும் அன்பாகப் பழகி வருவதே நட்பின் நெருக்கத்திற்குக் காரணம் என்றும் உரைத்தார். அனைவரும் கொண்டுவந்த உணவு வகைகளைப் பரிமாறிக்கொண்டனர். மணி வேலுப்பிள்ளையின் கோழிப்புக்கை பிரமாதம் என்றும் உண்டவர்கள் சொல்வதைக் கேட்கக்கூடியதாகவும் இருந்தது.


**AMBIHA SILK (Fancy Jewellery)**

**FINCH & MIDDLEFIELD**





இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர Gold கவரிங் தலிக்கொடி, Gold Bangle, செயின், பதக்கம், மணப்பெண் அலங்கார நகைகள், Fancy Necklaces வித்தியசமான Designகளில் மற்றும் Saree, Shalwar, Top இவை எல்லாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

அழையுங்கள்: **416.297.5261**

Train to be a ...

**Community Service Worker** With CO-OP



Other Diploma Programs:

**Computerized Accounting**

THE CANADIAN PAYROLL ASSOCIATION CPA ACP L'ASSOCIATION CANADIENNE DE LA PAIE

**Network Engineering**

Microsoft | IT Academy Program

**Business Administration**

**Medical Office Assistant**

EI, WSIB, ODSP Clients and New Immigrants welcome

Customized Corporate Training available for:
MS-Office 2003, 2007, 2010
Upgrade MS-Office 2003 to 2007 or 2010
Microsoft server 2003 and 2008 Subjects
A+ Certification / Cisco CCNA

OACC PROUD MEMBER ontario association of career colleges

You may qualify for SECOND CAREER
If you are laid off after January 2005
Working less than 20 hours / week
Call us now for details
(416) 840-9179

Call Now: (416) 840-9179

Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005

citi COLLEGE

www.CitiCollege.ca

Financial Assistance may be available to those who qualify

282

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



இந்தவாரம் ரொரன்ரோ பொலீசார் காரோடிக் கொண்டு செல்போன் பாவிப்பவர்கள்...ரெக்ஸ் ஈமெயில் பண்ணுபவர்களைப் பிடிக்க சவ ஊர்தி போன்ற வாகனத்தில் பொலிஸ் சின்னம் பொறித்து வீதிகளில் திடீர் வேட்டை நடத்தியிருக்கின்றனர்.



சவப்பெட்டியில் சாராயம் கடத்தி பொதுமக்களுக்கு விநியோகம் செய்து லெக்சனில் வென்ற கதை உலகர் இளமைக் காலத்தில் கண்டிருக்கிறார். அதுபற்றி நண்பர்களுடன் சிரித்துக் கதைத்திருக்கிறார்.



ஆனால் வெளிநாடுகளில் அந்த ஸ்ரைலே வேறு. போதை வஸ்து, ஆயுதக்கடத்தலுக்கெல்லாம் சவப்பெட்டியை பாவிக்கின்றனர்.

பல வீதிகளில், நெடுஞ்சாலைகளில் மூலை முடுக்கெல்லாம் ரொரன்ரோவில் சட்டத்தை மீறி சவாரிவிட்ட பலருக்கு பேரிடியாக அமைந்துள்ளது.



ரூபனும் ரூபியும் வெளியே சென்று திரும்பிய பொழுது றிலீசான புதுப்படம் தோல்வி கண்ட கதாநாயகன் கதாநாயகி போல தோய்ந்த முகத்துடன் வந்தது உலகர் குழாம் கவனித்து விட்டனர். ஐ...ரோல்ட் ..யு....
திரும்பத் திரும்ப சொன்னாலும் நீர் கவனிக்கேல்லை.
காரோடேக்கை செல்போன் பாவிக்க வேண்டாமெண்டு எத்தினை தரம் சொன்னனான் என ரூபன் எரிந்து விழுந்தான்.
ஓ கே.. ஓ..கே என்றபடி ரூபி அறைக்குள் சென்று கதவை அடித்துச் சாத்தவும்....

ஐ பொட் அகி எனும் அகிலாண்டேஸ்வரி வேறு இரண்டு சினேகிதிகளுடன் வரவும் சரியாக இருந்தது.

தமிழ் பாட்டு பிடிக்காது, தமிழ் றேடியோ பிடிக்காது, தமிழ் ரிவி நிகழ்ச்சிகள் பிடிக்காது எனச் சொல்லுறது ஸ்ரைலாப் போச்சு என ரூபி மீதிருந்த பலநாள் பிரச்சினையைக் கொட்டித் தீர்த்தான் ரூபன். செக்கண்ட்புளோர் செல்லம்மா கடைக்கண்ணால் ஐ பொட் அகி (அகிலாண்டேஸ்வரி)யைப் பார்க்க ஐ பொட்டுடன் வந்த இரண்டுபேரும் மிரள மிரள விழித்தனர். மாதர் சங்கம் அமைத்து அதற்கு தமிழ் மாதர் சங்கம் எனப் பேரிட்டு தமிழைத்தவிர தம்மை முன்னேற்ற சங்கம் நடத்துபவர்களுக்கு தம்மைத்தான் ரூபன் பேசுகிறானோ என மலைத்துப் போயினர். ஐ ஆம் ரமிழ். ஐ டோன் நோ ரமிழ் என்பது பாசனாகி விட்டது.

உலகநாதன்ணை....உங்களோடை ஔவையார் ஃபெஸ்ரிவலுக்கு என்று தொடங்க செக்கண்ட் புளோர் செல்லம்மா அகிலாண்டம் என கூப்பிட சமாளித்துக் கொண்டு ஔவையார் விழாவின்ட பட்டிமன்றத்திற்கு நீங்களும் வரவேணும் என மரியாதையாகக் கதைக்கும்பொழுதே உலகருக்கு இந்த ஔவையார் விழா பின்னணியில் ஏதோ வில்லங்கம் இருப்பது போலத் தோன்றியது. உலகர் இதைப்போல எத்தனை நிகழ்ச்சி களைக் கண்டவர்.



இந்த அமளி துமளிக்குள்ளும் விஜய் ரி.வி.யில் நடைபெற்ற சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் 2வது பரிசு பெற்ற சுபகானின்

**விடைகொடு எங்கள் நாடே**
**கடல் வாசல் தெளிக்கும் வீடே**
**பனைமரக்காடே பறவைகள் கூடே**
**மறுமுறை ஒரு முறை பார்ப்போமா??**



**கண் திறந்த தேசம் அங்கே**
**கண் மூடும் தேசம் எங்கே???**

பாடலை கண்ணீர் மல்க பார்த்துக்கொண்டிருந்தனர். பாடலைப் பாடிய நடிகரும், ஈழப்போர் பற்றிய பல பாடல்களை சினிமாவிலும் ஒலித்தட்டுகளிலும் பாடிய மதிப்பிற்குரிய மாணிக்கவிநாயகம் அவர்கள் கண்கலங்க அவனியெல்லாம் அழுதழுது கேட்ட பாடலல்லவா! தான்பாடிய பாடலை வேறொருவர் பாடும்பொழுது தன்னைவிட திறமாக உயிரோட்டத்துடன் பாடிய சுபாகனுக்கு பாடகர் மாணிக்கவிநாயகத்தின் கண்ணீரே பெரிய பரிசுதானே.....

பிரிவோம் நதிகளே பிழைத்தால் வருகிறோம்...
மீண்டும் தாயகம் அழைத்தால் வருகிறோம்...



ரெலிபோன் அடித்ததும் உலகர் தாவி எடுத்தார். பிரேம்ஜி அவர்கள் கனடாவில் மறைந்த செய்தியை முருகேசர் உலகருடன் கதைத்துக் கொண்டிருந்தார்.

பலருக்கும் தெரிந்த பிரேம்ஜி என அழைக்கப்படும் பிரேம்ஜி ஞானசுந்தரம் அவர்கள் எழுத்தாளர் ஊடகவியலாளர், முன்னைநாள் முற்போக்கு எழுத்தாளர் சங்க செயலாளர்.



அத்துடன் சினிமாத்துறையில் ஈழமக்களுக்கு பெருமை சேர்த்த பாலு மகேந்திராவின் மறைவுபற்றி இன்ரநெற்றில் வந்த செய்திகளையும் கூறிவிட்டு கலை இலக்கியம் வளர்த்தவர்களுக்கு நாம் செய்யும் நன்றிக்கடன் அவர்கள் செய்தளவு நாம் செய்யாவிட்டாலும் எம்மால் முடிந்ததை சமூகத்திற்கு செய்யவேணும் என்று கூறியவாறு ரெலிபோனை வைத்தார் உலகர்.

ரஷ்யாவில் நடந்தால் சோச்சி
நம்ம ஊரில் நட்ந்தால் தாச்சி



பெப்ரவரி 15....28.



08. பிரேம்ஜி ஞானசுந்தரம்..மறைவு

13. பாலு மகேந்திரா மறைவு

15. மாசி மகம் (ஆலயங்களில் பால்குட அபிசேகம்)
பௌர்ணமி தினம்

17. Family Day



16. தெளிவத்தை ஜோசப் ஈழத்து சிறுகதை எழுத்தாளர் பிறந்தநாள்.

16. ரசிகமணி டி.கே.சிதம்பர நாத முதலியார் நினைவுதினம் (1954)



20. மலேசியா வாசுதேவன் பிரபல பாடகர், நடிகர்.
(யூன்-15-1944 –பெப்-20-2011)

22. காதல் மன்னன் ஜெமினி கணேசன் நினைவுதினம். (2005)



27. மகா சிவராத்திரி

28. RRSP கடைசிநாள்




## கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

பெருமையுடன் வழங்கும்

# மகுடம் - 2014

## பல்சுவை கலை நிகழ்வு

காலம் : *March 22 , 2014*
நேரம் : மாலை 5:30 மணி
இடம் : Armenian Youth Centre, 50 Hallcrown Place, Toronto (Victoria park & HWY 401)

இந்நிகழ்வுக்கு கல்லூரியின் பழைய மாணவர்கள், முன்னாள் ஆசிரியர்கள், அபிமானிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலதிக தொடர்புகளுக்கு: **416.414.3327** **416.299.6645** **416 287 8164** **416.283.1439** **416.296.7037** **647.894.6467**

**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**
**இலவச ஆலோசனை வழங்கப்படும்**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் எண்ணையினாலும் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர விளம்பரம் பத்திரிகை அலுவலகத்தில் “எம்மை நாம் பாதுகாப்பது எப்படி” என்ற புத்தகம் விற்பனைக்கு உள்ளது.

இலவச ஆலோசனைகளுக்கு: **647.456.9796**

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada) Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician LG.Ayurvedic Medical Services (SriLanka)

# பண்ணையாரும்...

30ஆம் பக்கத்தொடர்ச்சி

மீது வைத்துக்கொண்டு அலையும் காட்சிகளிலும், பண்ணையாரின் மகள் வரும் போதெல்லாம் பதறும் காட்சியிலும், நடிப்பில் கதாநாயகனாகி விடுகிறார். விஜய் சேதுபதியின் ஜோடியாக வருகிறார் ஐஸ்வர்யா ராஜேஷ். அழகான கண்கள். ஆனால் விஜய் சேதுபதி - ஐஸ்வர்யா காதல்



ஜெயப்பிரகாஷ் - துளசி இணைக்கு முன் மவுசு இல்லாமலாகிறது. பண்ணையார் வீட்டு வேலைக்காரனாகவும் கார் கிளீனராகவும் வரும் பால சரவணன், பீடை என்ற கதாபாத்திரத்தில் கிச்சுகிச்சு மூட்டுகிறார். ஜஸ்டின் பிரபாகரன் இசை. ‘எங்க ஊரு வண்டி’, ‘உனக்காகப் பொறந்தேனே’ பாடல்கள் மனதை வருடுகின்றன. பின்னணி இசையிலும் மிளிர்கிறார். ‘எங்க ஊரு வண்டி’ பாடல் படமாக்கிய விதத்திலும் அழகாக இருக்கிறது. கேமரா கோணங்கள், படம் முழுக்க வருகிற மஞ்சள் டின்ட் என ஒளிப்பதிவாளர் மனதில் பதிகிறார்.

ஸ்ரீகர் பிரசாத்தின் எடிட்டிங் படத்தின் வேகத்தோடு இயல்பாய் பயணிக்கிறது. இயக்கம்: அருண்குமார். எதுவும் பேசாமல், எவ்வித உணர்ச்சிகளையும் காட்டாமல் நம் மனதைக் கொள்ளை கொள்கிறது அந்தக் கார். கொஞ்சம் கொஞ்சமாக நாமும் அதை விரும்ப ஆரம்பிப்பதில்தான், இயக்குநரின் திறமை வெற்றி பெறுகிறது. அடிதடி, வெட்டுக் குத்து, பஞ்ச் வசனங்கள் இல்லாமல் இருப்பதற்காகவே இயக்குநரைப் பாராட்ட லாம். உடலின் ஈர்ப்பு தவிர்த்த காதலைத் தமிழ்த் திரையில் பார்ப்பது அரிது. அத்தகைய அரிதான காதலின் சிறப்பான பதிவு பண்ணையார் - துளசி காதல்.

குறைகள் இல்லாமல் இல்லை. கிராமத்துச் சூழல் உள் முரண்கள் ஏதுமில்லாமல் தட்டையாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. கார் ஓட்டக் கற்பதற்காக எப்போதும் அதைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பதும், பண்ணையார் மகளின் செயற்கைத்தனமான நடவடிக்கைகளும் அலுப்பைத் தருகின்றன. சில காட்சிகள் வலிந்து நீட்டப்பட்டிருக் கின்றன. இருந்தாலும் பண்ணையாரும் பத்மினியும் நிஜமான உணர்வுகளின் இனிய சங்கமம்.

பார்க்கலாம்.




காதல் போயின் சாதல் என்றான் ஒரு கவிஞன்
காதல் என்பது என்ன தெரியுமா? உனக்கு
அன்பு என்பதை அறிவாயா மானிடா?
அன்பு என்பது ஒரு வகை உணர்வு
வகை வகை உணர்வுகளின் மூலப்பொருள் அது
வகை வகை என்பது பாசம், நேசம், பக்தி, சக்தி
காதல் ஆவது அன்புடன் கலந்த காமம்
காதலின் தோல்வி சாதல் அல்வே அல்ல
படைக்கப்பட்டவை என்றும் அழிவதில்லை
படைக்கப்பட்டவை மாற்றம் பெற்று மற்றொன்றாகும்
காமம் மெல்லமெல்ல சிலிர்ப்பு அடங்கவே
காமம் மாற்றம் பெற்று பாசம் ஆகும்.

- குறமகள்-





















**Free Real Estate Class - Call: 416.321.6969**










விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com www.tamilvanakkam.com**

